T-46

# பாரதியின் சொல்லும் கருத்தும்

தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-21

# பாரதியின்
# சொல்லும் கருத்தும்

பதிப்பாசிரியர்கள்
டாக்டர் தி. நடராசன்
டாக்டர் சு. வேங்கடராமன்
டாக்டர் இ. முத்தையா
டாக்டர் சிவ. சசிரேகா

வெளியீடு
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-21

## பதிப்பு விவரங்கள்


நூலின் பெயர் : பாரதியின் சொல்லும் கருத்தும்

பதிப்பாசிரியர்கள் : டாக்டர் தி. நடராசன்
டாக்டர் சு. வேங்கடராமன்
டாக்டர் இ. முத்தையா
டாக்டர் சிவ. சசிரேகா

பொருள் : பாரதி படைப்புக்கள் பற்றிய திறனாய்வு

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2000

பக்கங்கள் : 107 + ix

விலை : ரூ. **40/-**

வெளியிடுவோர் : தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை–625 021

அச்சு : சந்தோஷ் பாரதி சிஸ்டம்ஸ் & கிராபிக்ஸ், 428, மீனாக்ஷி நிலையம், வெல்லிங்டன் ரோடு, நாகமலை, மதுரை – 625 019. போன்: 858093


---


கட்டுரைகளில் கூறப்படும் கருத்துக்கள் கட்டுரையாளர்களுடையவை. அவை பதிப்பாசிரியர்களையோ தமிழியற்புலத்தையோ சாரா.

# அணிந்துரை

**பேராசிரியர் மு. சாலிகு**
**துணைவேந்தர்**
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**
**மதுரை – 625 021.**

மகாகவி பாரதியார் தமிழ் மரபின் நீடுதுயில் நீக்க வந்த பாடுநிலா. பாரதியார் தம் காலச் சமூகத்தையும் அரசியலையும் நாட்டையும் தமிழ் மொழியையும் பாடுபொருளாக்கிக் கவிதை வேள்வி நடத்தினார். அவருடைய படைப்புக்கள் யாவும் தீமைகளைச் சுட்டெரிக்கும் தழல்வீரமிக்க அக்கினிக் குஞ்சுகளாக உள்ளன. பாரதியின் படைப்புக்களில் நிறைபுலமை பெறும் பொருட்டுப் பாரதியார் நூற்றாண்டு விழாவை ஒட்டித் தமிழக அரசு பல்கலைக்கழகங்களுக்கு வைப்புநிதி வழங்கியது. அந்த நிதியிலிருந்து வரும் வட்டி வருவாயைக் கொண்டு ஆண்டுதோறும் கருத்தரங்கம் நடத்தி, அவ்வுரைகள் காற்றில் கலந்த வெற்றோசையாக ஆகிவிடாமல், அவற்றை நூலாக ஆக்கி, நிரந்தரமாகப் பயன்படவேண்டும் என்று அரசு விதி வகுத்துத் தந்தது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழியற்புலம் அந்த விதிக்கேற்ப ஆண்டுதோறும் மகாகவி பாரதியார் கருத்தரங்கம் நடத்தி, அதில் படித்து விவாதிக்கப் பெற்ற கட்டுரைகளை நூலாகவும் வெளியிட்டு ஆக்கபூர்வமான பணி செய்துவருகிறது. ஆண்டுதோறும். வித்தியாசமான புதிய பொருளைத் தேர்வு செய்வது, தக்க அறிஞர்களைக் கொண்டு கருத்தரங்கம் நடத்துவது, பாரதியியல் ஆய்வுகளில் தொடர்ந்து பங்களிப்புச் செய்து வரும் பாரதி ஆய்வாளர் ஒருவரையும் தமிழ்க் கவிஞர் ஒருவரையும் கொண்டு அக்கருத்தரங்கில் தொடக்கவுரை, நிறைவுரை நிகழ்த்துவது, தொடர்ந்து அக்கருத்தரங்க உரைகளை நூலாக வெளியிடுவது ஆகிய ஆக்க பூர்வமான பணிகளை எம் தமிழியற்புலம் தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது.

அந்த வகையில் 'பாரதியின் சொல்லும் கருத்தும்' என்ற நூல் இப்போது வருகிறது. பாரதியாரே 'சொல் புதிது' என்றும் 'எளியபதம்' 'மந்திரம் போல் வேண்டுமடா சொல்' எனவும் கூறுகிறார். சொல்லின் பொருளையும், சொல் சுமந்து நிற்கும் கருத்தையும் தெரிந்து கொண்டு, ஏற்ற சொற்களைத் தம் படைப்புக்களில் ஆண்டவர் மகாகவி பாரதியார். மகாகவி பாரதியார் தம்முடைய படைப்புக்களில் பன்முறை கையாளும் சொற்களை இனங்கண்டு, சமுதாய, பண்பாட்டு, அரசியல் கருத்தாக்கங்களை அச்சொற்கள் எவ்வாறு உணர்த்துகின்றன என்பதை ஆராய்ந்து வெளிக்கொணருவது அடிப்படை நோக்கம் என்ற தெளிவான, வரையறுத்த எண்ணத்துடன், மையப் பொருளுடன் இக்கருத்தரங்கம் திட்டமிடப்பட்டது.

கருத்தரங்க அமைப்பாளர்களின் நோக்கத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு கட்டுரைகள் படிக்கப்பெற்று, விவாதிக்கப்பட்டு இப்போது நூலாக்கம் பெற்றுள்ளது. இந்த நூலில் முதன்மையுரை, நிறைவுரை உட்பட ஒன்பது கட்டுரைகள் உள்ளன.

முதன்மையுரையில் பாரதியியல் ஆய்வு அறிஞர் திரு.பெ.சு. மணி, பாரதியார், அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டுத் துறைகளில் நவீனத்துவ புத்தொளியைப் பாய்ச்சி, புதிய மரபைப் படைத்த புதுயுகக் கவிக்கோ என்று நிலைநாட்டுகிறார். அத்துடன், தமிழ் மொழியைப் புகழிலேற்றும் கவியரசர் தமிழ்நாட்டுக்கு இல்லையென்னும் வசை என்னால் கழிந்தது என்ற சாதனையைப் பாரதி செய்து முடிப்பதற்கு அடிப்படைக் காரணம் அவர் கையாண்ட சொற்களும், கருத்தாக்கமும் ஆகும் என்று பெ.சு. மணி கூறுவது மிகச் சிறந்த மதிப்பீடாகும். சொல் புதிது, பொருள் புதிது, சுவை புதிது, வளம் புதிது என்று பாரதியார் புதுமையை எப்போதும் நாடிநின்றமை இதற்குக் காரணம் என்று அறுதியிட்டுக் கூறுவது ஏற்புடைய கருத்தாகும். 'தமிழ் என்ற கருத்தாக்கம்' என்னும் அடுத்த கட்டுரையில் முனைவர் மீனாட்சி முருகரத்தனம், பாரதியார் தமிழைத் தம் உயிராக, உணர்வாக மதித்தார்; தமிழை அது பேசும் மக்களிடமிருந்து அவர்கள் சிந்தனையிலிருந்து அவர்கள் பண்பாட்டிலிருந்து பிரித்து வெறும் கருத்துப் பரிமாற்றக் கருவியாகப் பாரதி காணவில்லை என்று கூறுகிறார். மேலும் பாரதியின் கருத்தாக்கம், மரபுவழி வளர்ச்சியான புதுமை, ஆன்மீகம், தேசியம் ஆகியன கொண்டது என்று அவர் நிறுவுகிறார்.

'கவிதை என்ற கருத்தாக்கம்' என்னும் அடுத்த கட்டுரையில் முனைவர் துரை. சீனிச்சாமி, 'அற்புத பரவச மனோபாவம்' கூடிய ஆன்ம சக்தியாக அமைந்துள்ளது என்று பாரதியைக் காட்டுகிறார். மேலும், மந்திரத் தன்மை சொல்லுக்குள் வரவேண்டும்; அதுவே கவிதையாகி, பொய்ம்மைகளை அழிக்க வேண்டும் என்று சக்தியின் திரளாகக் கவிதை உருப்பெறுவதைக் காட்டுகிறார். புலன்களின் வெறிமிக்க பரவசம். பின்னர் சக்தியின் களியாட்டம் இவ்விரண்டூடே சமூக வாழ்வின் சமத்துவ நிலைக்கான வேள்வி இம் மூன்றின் ஒன்றில் ஒன்றான செறிவுடன் கூடிய திரட்சியிலே பாரதியின் கவிதைக் கருத்தாக்கம் என்று அவர் கூறுகிறார். 'காதல் என்ற கருத்தாக்கம்' என்னும் அடுத்த கட்டுரையில் முனைவர் அ.ஆலிஸ் 'மானுடக் காதல் தன்மை, இறை–உயிர் உறவு' என்ற இருபொருள் தருவதன் வழி, உலகியல் இன்பத்தை முன்வைத்து, நேர்மையுறு காதல் வாழ்வு வாழும் அதே நேரத்தில் இறைவனிடம் எப்போதும் சரணடைந்து வாழுகிற வாழ்வியல் கருத்துக் கோட்பாட்டைப் பாரதி முன் வைக்கிறார்' என்று காட்டுவது பாராட்டத்தக்கது. 'சக்தி என்ற கருத்தாக்கம்' என்ற கட்டுரையில் முனைவர் அ. பிரேமா, 'வாழ்க்கை இயக்கத்திற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய ஒன்றைப் பக்தி நோக்கிலும் பரந்துபட்ட நோக்கிலும் சக்தி என்று கருதுகிறார் என விளக்குகிறார்.

அக்கருத்தின் அடிப்படையில், தேசியம், சமூகம், பெண் விடுதலை, வாழ்நிலையின் இயக்கம், பக்தி பற்றிய அவருடைய கருத்தியல்கள் அமைந்திருக்கின்றன என்று நிறுவுவது பாராட்டத்தக்கது.

'சாதி என்ற கருத்தாக்கம்' என்ற கட்டுரையில், 'தொழிலால் அமைந்த குலங்களால் நன்மையுண்டு: இவற்றால் ஏற்றத்தாழ்வு கூடாது; பிறப்பால் ஒருவருக்கு உயர்வு–தாழ்வு இல்லை' என்பது ஜாதி பற்றிய பாரதியாரின் தெளிந்த கருத்தாகும் என்று கூறுவது இன்றைய சூழலுக்கு மிகவும் ஏற்றதும் தேவையானதுமாகும். கட்டுரையாளர் முனைவர் தே. ஞானசேகரன் நம் பாராட்டிற்குரியவர். 'ஆரியன் என்ற கருத்தாக்கம்' என்னும் கட்டுரையில், 'ஆரியர் என்ற கருத்தாக்கத்தின் மையமும் அதன் பரவலாக்கமும் வைதிகத் தலைமையின் கீழ் அகில இந்தியத் தேசியத்தைக் கட்டமைக்கும் ஓர் முயற்சியாகத் தெரிகிறது. பாரதி வைதிகத்தையும் அதன் எதிர்க் கருத்தாக்கமான சக்தியையும் தழுவிநின்றார்' என்று முனைவர் ந. முத்துமோகன் நிறுவுகிறார். அடுத்ததாக உள்ள 'தீ என்னும் கருத்தாக்கம்' என்ற கட்டுரையில், 'தீயைப் பல நுண்பொருள்களான உணர்வுகளுக்கு நுண்பொருள் குறியீடாகத் தந்துள்ளமை பாரதியின் தனித்தன்மை என்கிறார் முனைவர் தூ. சேதுபாண்டியன். இந்திய வேதங்கள் உரைத்த 'அக்னி வழியாடு' என்ற இடத்திலிருந்து தொடங்கி, அவர் காலத்தின் தேவையாயிருந்த 'சுதந்திர உணர்வு' என்ற புதிய நெருப்பு வரை நெருப்பு என்ற கருத்தாக்கம் நீள்கிறது என்றால் அது மிகையாகாது என்று நிறுவுகிறார்.

இறுதியாக அமைந்துள்ள கவிஞர் அபியின் நிறைவுரை கவிதையாகவே உள்ளது. பாரதி மொழியை ஆயுதமாகப் பயன்படுத்திய கலகக்காரர். கவிதைக்குள் தரித்திராமல் தெருவில் இறங்கிக் கலகத்தில் கலந்து கொள்ளத் துடிப்பவை பாரதியின் சொற்கள். எதிர்ப்புணர்வே பாரதியின் கவிதைகளை வழி நடத்துகிறது என்று நிறுவுவது பாராட்டிற்குரியது.

இந்த அருமையான கருத்தாழமிக்க நூலிற்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பைத் தந்தமைக்காகத் தமிழியற்புல ஒருங்கிணைப்பாளருக்கும் ஏனைய பதிப்பாசிரிய நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. இதைப் போன்ற கருத்தரங்குகளை நடத்துவது, நூல்களை வெளியிடுவது போன்ற ஆக்கபூர்வமான பணிகளைச் செய்துவரும் தமிழியற்புலத்திற்கு என் மனம் நிறைந்த பாராட்டுக்கள். பாரதி ஆய்வில் சிறப்பான பங்களிப்பாக அமையும். இந்த நூலைத் தமிழ் மக்கள் போற்றி வரவேற்பார்களாக.

மு. சாலிகு

26–08–2000

# முன்னுரை

சொல்லுக்கும், பொருண்மைக்கும் இடையிலான உறவு பற்றிய சந்தேகங்களால் பண்பாடு, தத்துவம், கலை, இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் சிந்தனைக் கலகங்கள் நிகழ்ந்துள்ளன. ஒரு சொல்லுக்கு (குறிப்பானுக்கு) ஒரு பொருண்மை (குறிப்பீடு) மட்டுமே உறவுடையது என்ற கற்புப் பார்வையை நிராகரித்த சுவிஸ் நாட்டு மொழியியல் அறிஞர் சசூரைத் தோளில் சுமந்து செல்லுபவர்கள் இலக்கியத் திறனாய்வுப் பிரதேசங்களில் புதிய சுவடுகளைப் பதிப்பதும், அழிப்பதுமாகப் பயணத்தைத் தொடர்கிறார்கள். ஒரு சொல்லின் பொருண்மையானது மொழியின் அமைப்பிற்குள்ளேயே நிர்ணயம் செய்யப்படுகிறது என்ற சசூரின் சிந்தனைக் கருவில் வடிவம் கொண்ட அமைப்பியலைக் கைப்பிடித்து இலக்கிய வடிவங்களுக்குள் புகுந்து மூச்சுமுட்டி நிற்கின்றனர் சில ஆய்வாளர்கள்.

இன்னொரு பக்கம், சசூரின் மிதக்கும் குறிப்பானை (Floating sign) இறுகப் பற்றி பனுவலில் மிதந்து மனம்போல் வலைவீசிப் பொருண்மைகளை வசீகரித்து விளையாடும் தெரிதாவியக் கட்டவிழ்ப்பாளர்கள் (Derridian Deconstructionist) கரைகாணாமல் தத்தளிக்கின்றனர்.

மற்றொருபுறம், சசூரின் 'இடுகுறி உறவுச்' சிந்தனையைப் போர்த்திக் கொண்டு பனுவலின் படைப்பாளியைக் கொன்று புதைத்துவிட்டு, பனுவலின் சொற்களுக்குள் (குறிகளுக்குள்) குறியியலைச் (Semiotic Principles) சுவாசித்தபடி மூழ்கிப் பன்முகப் பொருண்மைகளைப் பக்குவமாகப் பிரித்தெடுத்து வாசிப்பில் தோரணங்கள் கட்டி மகிழ்கின்றனர் ரோலந்த் பார்த்தஸ் வம்சாவழியினர்.

படைப்பாளியைப் புதைத்துவிட்டு, சமூக வெளியில் கால் பதிக்காமல் பனுவலின் சொற்களோடு வாசகனை மட்டும் உறவாடவிட்டு அர்த்த சுகங்களை அனுபவிக்க வழிகாட்டிய தெரிதாவிய, பார்த்தஸியர்களிடமிருந்து மிஷல் ஃபூக்கோவின் வழித் தோன்றல்கள் முற்றிலும் வேறுபட்டனர்.

மற்றவர்கள் சசூரைத் தங்கள் தோளில் சுமந்து கொண்டு சிந்தனைப் பயணத்தைத் தொடர்ந்தனர். ஆனால் ஃபூக்கோ என்னவோ சசூரின் தோளில் அமர்ந்து பயணப்பட்டார். இப்படிப்பட்ட சிந்தனைப் பயணத்தில்தான் 'சொல்லாடல்' (Discourse) என்ற கருத்தாக்கம் எதிர்ப்பட்டது. இதன்வழி 'சொல்' பற்றிய ஃபூக்கோவின் கருத்தும் தெளிவுபடுத்தப்பட்டது. சொல்லாகுபவரின் 'சொற்கள்' அவருடைய அடையாளங்களாக, அடக்குமுறைக் கருவிகளாக, பதுங்கு குழிகளாக, வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொடுக்கும் சாதனங்களாக, உணர்ச்சிகளைப் பீச்சியடிக்கும் துருத்திகளாக, கண்ணி வெடிகளாகச் செயல்படுவதைச் சுட்டிக்காட்டினார்.

மகாகவி பாரதியோடு தோழமையுடன் பழகியபோது அவருக்குள் ஃபூக்கோவின் நிழல் தெரிந்தது. "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்றும் "சொல் ஒன்று வேண்டும். தேவசக்திகளை நம்முள்ளே நிலைபெறச் செய்யும் சொல் வேண்டும்", "சொல்லை ஸாதாரணமாக நினைத்து விடலாகாது. உண்மைச் சொல் க்ஷேம மந்திரமாகும்" என்றும், "பரிபூரணமான தீரமும் வலிமையும், உண்மையும் திருத்தமும் தெளிவும் பொருந்திய வாக்கே தேவவாக்கென்று சொல்லப்படும். மனித ஜாதிக்கு தேவவாக்கு பிறந்திடுக" என்றும் சொல்லின் அரசியல் குறித்துப் பேசுகின்ற பாரதியின் குரலில் ஃபூக்கோ வெளிப்படுவதை உணர முடிகிறது. மேலும் பாரதி தன்னுடைய கவிதைகள், கதைகள், கட்டுரைகளில் சில சொற்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி வந்தது கவனத்தைக் கவர்ந்தது. இதனால் பாரதியின் "சொல்லின் அரசியல்" (Politics of Bharathi's Words) பற்றி அறிந்து கொள்ளும் விருப்பம் விரிந்தது.

இதன் விளைவே "பாரதியின் சொல்லும் கருத்தும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கம். இதில் முதன்மையுரை, நிறைவுரை நீங்கலாக எட்டுக் கட்டுரைகள் படிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. இவற்றுள் மார்க்சிய ஆய்வாளரும், தமிழ்ப் பேராசிரியருமான முனைவர் கோ. கேசவன் அவர்களுடைய கட்டுரை மட்டும் இடம்பெறவில்லை. முனைவர் கோ. கேசவன் அவர்களின் திடீர் மறைவு தமிழ்ச் சமூகத்திற்கும், ஆய்வுலகத்திற்கும் பேரிழப்பாகும். அவருடைய மறைவின் காரணமாக அவர் பாரதியார் கருத்தரங்கில் படித்த கட்டுரையைப் பெற இயலவில்லை. இதனால் அவருடைய கட்டுரை இந்நூலில் இடம்பெறவில்லை. ஏனைய ஏழு கட்டுரைகளும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை படித்து, நூலிற்காகச் செம்மை செய்து தந்த கட்டுரையாளர்களுக்கு எம் நன்றி.

மகாகவி பாரதியார் பெயரில் அறக்கட்டளை அமைத்துத் தந்து, நிதியுதவி அளித்த தமிழக அரசுக்கு எம் நன்றி. கருத்தரங்கை நடத்தவும் கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக வெளியிடவும் அனுமதியளித்த பல்கலைக்கழகத்திற்கு நன்றி உரியது. இந்தக் கருத்தரங்கம் நடத்துவதற்கு அன்புடன் அனுமதியளித்த எம் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சீர்மிகு கு. ஆளுடையபிள்ளை அவர்களுக்கு எம் நன்றி உரியது. தமிழியற்புலத்தின்பால் தனித்த கவனமும் அக்கறையும் கொண்டு, எங்களுடைய ஆக்கபூர்வமான செயற்பாடுகள் அனைத்திற்கும் எப்போதும் ஆதரவு தந்து ஊக்க மூட்டி வரும் தமிழ் நெஞ்சம் உடைய துணைவேந்தர் சீர்மிகு பேராசிரியர் மு. சாலிகு அவர்கள் இந்த நூலிற்கு அரிய அணிந்துரை நல்கியுள்ளார். அவருக்கு எம் நெஞ்சு நிறைந்த நன்றி.

இந்த நூலை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்துள்ள சந்தோஷ் பாரதி அச்சகத்தாருக்கு எம் நன்றி.

*பதிப்பாசிரியர்கள*

# கட்டுரையாளர்கள்

பெ.சு. மணி - பாரதியியல் ஆய்வாளர், சென்னை.

முனைவர் மீனாட்சி முருகரத்தனம் – பேராசிரியர். துறைத் தலைவர், தமிழ்த்துறை, தொலைநிலைக் கல்வி இயக்ககம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.

முனைவர் துரை. சீனிச்சாமி – தமிழ்ப் பேராசிரியர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 005.

முனைவர் அ. ஆலிஸ் – இணைப்பேராசிரியர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி – 620 024.

முனைவர் அ. பிரேமா – இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

முனைவர் தே. ஞானசேகரன் – முதுநிலை விரிவுரையாளர், தமிழியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 046

முனைவர் ந. முத்துமோகன் – இணைப்பேராசிரியர், துறைத்தலைவர், குருநானக் தேவ்ஜி இருக்கை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.

முனைவர் தூ. சேதுபாண்டியன் – இணைப்பேராசிரியர், இலக்கணத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.

முனைவர் பீ.மு. அபிபுல்லா (அபி) – கவிஞர். தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு), அரசு கலைக் கல்லூரி, மேலூர்.

## உள்ளே....


1. முதன்மையுரை — 1
*பெ.சு. மணி*

2. தமிழ் என்ற கருத்தாக்கம் — 17
*மீனாட்சி முருகரத்தனம்*

3. கவிதை என்ற கருத்தாக்கம் — 28
*துரை. சீனிச்சாமி*

4. காதல் என்ற கருத்தாக்கம் — 40
*அ. ஆலிஸ்*

5. சக்தி என்ற கருத்தாக்கம் — 50
*அ. பிரேமா*

6. சாதி என்ற கருத்தாக்கம் — 73
*தே. ஞானசேகரன்*

7. ஆரியன் என்ற கருத்தாக்கம் — 80
*ந. முத்துமோகன்*

8. தீ எனும் கருத்தாக்கம் — 88
*தூ. சேதுபாண்டியன்*

9. நிறைவுரை — 101
*பீ.மு. அபிபுல்லா .(அபி)*

# 1

# முதன்மையுரை

பெ.சு.மணி

உலகத்தின் நனிமூத்த முதல் பெரும் கவிதைத் தொகுப்பான வேதமொழிக் கவிதையில் 'கவி' எனும் சொல்லிற்கு "உண்மையைக் கண்டவர்" எனும் பொருள் அமைந்துள்ளதை அரவிந்தர் தமது "ரிக்வேதம் – "அக்னி ஸூக்தங்கள்" எனும் ஆங்கில மொழிபெயர்ப்பின் முன்னுரையில் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

"அவை அருள் வெளிப்பாட்டால் வீரியமுற்று உதித்த பாக்கள். அவற்றின் உற்பத்தியும் ஆவேசமும் தெய்வத்தன்மை வாய்ந்தவை; சாமானியமன்று. இந்த ரிஷிகளுக்கு இட்ட பெயர் "கவி". அது பிற்காலத்தில் எப்பாவலனையும் குறிப்பதாயிற்று. ஆயினும், அம்முற்காலத்தில் உண்மை காண்போன் என்பதே அதன் கருத்து. வேதமே அவர்களை "கவய: ஸத்ய ச்ருத"– உண்மை காண்போர், ஸத்தியம் கேட்போர் – என்று வருணிக்கிறது"[1]

மேற்காணும் கருத்தைப் பாரதியாரும் குறிப்பிட்டுள்ளார். அரவிந்தரின் "அஹானாவும் இதர பாடல்களும்" எனும் நூலை 1915–இல் ஆங்கிலத்தில் விமர்சனம் செய்த பாரதியார் கூறியுள்ளதாவது:

"Truth is to poetry and fact is to science. And whatever aspect of the poetic art may appeal most to the mind of the lay reader, the poet themselves have always regarded true poetry as the right expression of the soul-truth of things. The vedic name for the poet, kavi, means a seer."[2]

இந்த வரைவிலக்கணம், "உள்ளத்தில் உண்மையொளியுண்டாயின் வாக்கினில் ஒளியுண்டாம்" என்று சாற்றிய மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்கு முற்றிலும் பொருந்துகின்றது.

மகாகவியை, மக்கள் கவிஞரை, புதிய அறம் பாட வந்த புதுமைப் பாவலனை உருவாக்கிய காலச் சூழலை 'வீரவிளக்கு' வ.வே.சு. ஐயர் 1918–இல் விளக்கிக் கூறியதாவது:

"நாட்டில் புதிய இயக்கம் பிறந்ததும், அதற்கேற்ற கவி ஒருவரும் தோன்றினார். அவர் பெயர் ஸுப்ரஹமண்ய பாரதி என்று நாம்

சொல்லுவதற்கு முன்னேயே எல்லோரும் கண்டு பிடித்திருப்பார்கள். அவரும் பழைய இலக்கிய வகையில் தான் பழகினவரானாலும், புதிய இயக்கமானது அவரைத் தனக்கு ஓர் பிரதானமான ஆதாரமாக ஆக்கிக் கொண்டு விட்டது. அவரும் அந்த இயக்கத்தின் வேகத்தால் தூண்டப்பட்டு, பழைய இலக்கணக் கவிஞரின் துறைகளை விட்டுப் பொதுஜனானுசாரமான துறைகளிலேயே பாடத் துவங்கினார். இயற்கையாகவே கவிதை நிரம்பிய பிரதிபையோடு கூடிய அவருக்கு பழைய காவியங்களின் பழக்கமும், புதிய கல்வியின் வேகமும், பாரத தேசத்தின் புதிய ஜீவோதயமும் சேர்ந்து, புதிய நடையையும் புதிய வழியையும் கற்பித்தன."[3]

உலக இலக்கியங்களிலும், தமிழ் இலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்ற பேரறிஞர் வ.வே.சு. மேலே "புதிய நடையுயம், புதிய வழியையும்" என்று குறிப்பிட்டதுபோல, 1914–இல் எழுதிய "தமிழ்" எனும் கட்டுரையில், பாரதியார் தமிழ் இலக்கியத்தில் அறிமுகப்படுத்திய நவீன எண்ணங்களை உட்கொண்டு ஒரு கவிதான் தமிழ் நாட்டில் உலவுகிறார்" என்று திட்டவட்டமாகத் தெளிவுப்படுத்தியுள்ளார்.[4]

"புதிய இயக்கம்," "புதிய ஜீவோதயம்" என்று வ.வே.சு. ஐயர் குறிப்பிட்டவை, இந்திய விடுதலைப் போரின் சுதேசிய, தீவிர தேசியவாத இயக்கங்கள் ஆகும். இந்தக் கால கட்டத்தின் தொடக்கம் 1906–இல் வங்கத்தில் தோன்றிய தேசபக்தியைப் பாரதியார், "புதிய சுடர்", "புதிய நெருப்பு", "நவீன மார்க்கம்", "நவீன உணர்ச்சி" எனப் பலவாறாகப் போற்றியுள்ளார். இந்த "நவீன கிளர்ச்சி", ராஜவம்சத்தில் தோன்றவில்லை; ஆனால் ஸாமான்ய ஜனங்களிடத்திலேயே தோன்றியது" என்று மக்கள் இயக்கப் போர்க்களக் கவிஞன் எனும் பார்வையில் கூறியுள்ளார்.[5]

"அப்புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்" என்று 1909–இல் வெளிவந்த "ஜன்ம பூமி" (ஸ்வதேச கீதங்கள் இரண்டாம் பாகம்), எனும் நூலின் முகவுரையில் பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.[6]

அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் நவீனத்துவ புத்தொளியைப் பாய்ச்சி புதிய மரபைப் படைத்த புதுயுகக்கவிக்கோ பாரதியார் தமது அவதார வரலாற்றுச் சிறப்பைப் பிற்காலத்தில் 1919–இல் பின்வருமாறு பிரகடனப்படுத்தினார்.

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ் மொழியைப் புகழிலேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே!

இஃது அவருடைய சுய விமர்சனம் மட்டுமன்று; தமிழ்க் கவிதை வரலாற்றின் விமர்சனமும் ஆகும்.

அரிய பெரிய விழுமிய இந்த வரலாற்றுச் சாதனையை, வசையொழித்த சாதனையை எவ்வாறு செய்து முடித்தார் எனும் வினாவிற்கு விடையையும் அவருடைய சொல்லிலும் கருத்திலும் காண்கின்றோம். எங்கும் எதிலும் எப்பொழுதும் "புதிது, புதிது, புதிது" என்று அவர் அவாவி நின்றார். "சுவை புதிது", "பொருள் புதிது", "வளம் புதிது", "சொற் புதிது" என்று கொங்கு தேர் வாழ்க்கைக் கோத்தும்பியாக ரீங்காரமிட்டார்.

**1915** சூலை **19**–இல் பரலி.சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில், "புதிய புதிய செய்தி, புதிய புதிய இன்பம், புதிய புதிய உண்மை, புதிய புதிய யோசனை தமிழில் ஏறிக் கொண்டே போக வேண்டும்" என்று பாரதியார் எழுதியுள்ளார்.

பாரதியார் கவிதைகள் முழுவதையும் திறனாய்வு செய்த முதல் தமிழ்ப் பேரறிஞரான சுவாமி விபுலானந்தர், **1927** சூலை **16**–இல் இலங்கை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் முதன் முதலில் பாரதியாரை "மகாகவி பாரதியார்" என்று குறிப்பிட்டுப் பேசினார்.[7]

இதற்குப் பிறகு **1935**–இல் தமிழ்நாட்டில் பாரதியாரை மகாகவி என்று நிறுவிட ஓர் இலக்கியப் போரே நிகழ்ந்தது.

தமிழ்நாட்டில் புதிய விடியலைக் கொண்டு வந்தவர் பாரதியார் என்பதையும் போற்றிப் பாராட்டிப் பின்வருமாறு சுவாமி விபுலானந்தர் **1932**–இல் எழுதினார்.

"The gloom that overshadowed the country during the past four centuries is slowly passing away and a new dawn is in sight. The harbinger of the approaching dawn is our latest poet SUBRAMANYA BHARATI........... with religious mysticism he combines an unbonded love for the poor and the downtrodden................ The charm of his lyrics, and the dignified tone of his patriotic songs have endeared him to his people. The healthy outlook on life underlying his poems has a universal appeal. He views humanity as a whole and stands ready to embrace the North and the South, the East and the West, the Brahman and the outcaste as well as the educated and the illiterate."[8]

பாரதியாரின் கருத்துவீச்சு, வலிமையும் பொலிவும் பெற்று மக்கட் சமுதாயத்தைச் சென்றடைய காரணம் அவர் பயன்படுத்திய சொல்லாட்சித் திறனும் ஒன்றாகும். இந்தச் சொல்லாட்சித்திறன், அவரே குறிப்பிட்டவாறு, 'சொல்புதிது' எனும் அடித்தளத்தைக் கொண்டது. 'சொல் புதிது' என்றால்,

அவர் காலத்திற்கு முன் இலக்கிய வழக்கில் ஏற்றம் பெறத் தவறிய எளியசொல், எளிய நடையைக் குறிப்பதாகும். தமது காலத்திற்கு முந்திய தமிழ் நடையை "அலௌகிக அந்தகாரநடை" என்றும் குறிப்பிட்டார். பாரதியார். "தமிழ்ப்புலவர்களிடம் போனால் நிகண்டுக்குக் கூட அர்த்தம் தட்டும்படியான வார்த்தைகளை எழுதிக் கொடுப்பார்கள். சாமான்ய பாஷையில் எழுதும் தொழில் புலவர்களுக்குத் தெரியாது" என்று குறிப்பிட்டதிலும் பாரதியார் கூறிய 'சொல் புதிது' என்பதற்கு மற்றொரு விளக்கம் கிடைக்கின்றது.

எளிய நடைக்கேற்ற சொற்களைத் தாமே கூட ஒரு சமயத்தில் ஆளத் தவறியதற்காகப் பாரதியார் வாசகர்களிடம் மன்னிப்புக் கேட்டார். அரவிந்தரின் 'கடலுக்கு' எனும் ஆங்கில மொழிக் கவிதையைத் தமிழாக்கம் செய்து வெளியிட்ட பொழுது பின்வரும் குறிப்புரை எழுதினார்.

"இம் மொழிபெயர்ப்பைச் சகல ஜனங்களுக்கும் தெளிவாகும்படி மிக எளிய நடையிலே அமைக்க வேண்டுமென்று சிரமப்பட்டிருக்கிறேன். என்னையறியாமல் அகராதிப் பண்டிதர்களுடைய சில 'கற்சற்' மொழிகள் விழுந்திருக்கின்றன. செய்யுள் அமைதி நாடி அம்மொழிகளுக்கு எளிய பிரதி பதங்கள் போடாமல் இருந்து விட்டேன். இதன் பொருட்டும் படிப்போர்கள் க்ஷமிக்குமாறு பிரார்த்தனை செய்கிறேன்".[9]

சொல், வாக்கு என்று பாரதியார் குறிப்பிட்டுத் தமது கருத்துகளை விளக்கியுள்ளதும் நோக்கத்தக்கது.

"சொல்லை ஸாதாரணமாக நினைத்து விடலாகாது. உண்மைச் சொல் க்ஷேம மந்திரமாகும். பொய்ச்சொல் அழிந்து விடும்" என்றும் "பரிபூரணமான தீரமும் வலிமையும், உண்மையும், திருத்தமும், தெளிவும் பொருந்திய வாக்கே தேவ வாக்கென்று சொல்லப்படும். மனித ஜாதிக்கு தேவ வாக்கு பிறந்திடுக" என்றும் பாரதியார் கூறியுள்ளார்.[10]

"சொல்" எனும் தலைப்பிலேயே ஒரு கவிதை படைத்துள்ளார் பாரதியார். கவிதையின் தொடக்கத்திற்கு மகுடமாக, "சொல் ஒன்று வேண்டும். தேவ சக்திகளை நம்முள்ளே நிலைபெறச் செய்யும் சொல்வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்று கூறுமிடத்தில் சொல்லிற்குரிய மந்திர சக்தியை அறியத் தூண்டுகிறார். வேதரிஷிகள் கவிதையில் திளைத்த அனுபவத்தில் மந்திரச் சொற்கள் தந்த இன்பத்தைப் பாரதியார் இசைத்தார்.

அரவிந்தர் தமது மாபெரும் காப்பியமான "சாவித்ரி"யில் வேதரிஷி செவிகளில் வீழ்ந்த மந்திரங்கள் எவ்வாறு மாற்றங்களை விளைவித்தன என்பதை விவரித்துள்ளார். அதன் ஒரு பகுதி வருமாறு:

"மந்திரத்தைக் கேட்டவர் தன்னுள் தானே அமைதியில் வீழ்கின்றார். அவருடைய ஆத்மாவில் ஆழ்ந்திருக்கும் கவனிப்பைச் சந்திக்கின்றார். எண்ணம், காட்சி, உணர்வு, புலன், உடல் உணர்வு யாவும் மாற்றமில்லாமல் முடிந்து விடுகின்றன. அவர் ஒரு பரவசத்தை அழிவற்ற மாறுதலைப் பெற்றுக் கொள்ளுகின்றார்."[11]

பாரதியாரும் வேதரிஷிகளின் மந்திரச் சொற்களைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

"ரிஷிகள் உள்ளத்தைத் தெளிவு செய்து கொண்டோர். ஆதலால் அடிவரை எளிதாகப் பாய்ந்து அங்கிருந்து மந்திரங் கொண்டு வந்தனர். அம் மந்திரங்களுக்குத் தேவர் வசப்படுவர். வெறும் 'சொல்'லுக்கு மஹிமையில்லை. அச்சொல் உள்ளத் துணிவை உயர்த்துமாயின், அதற்கு மஹிமையுண்டு ..........ஆழ்ந்த நினைப்பு, அசையாத நினைப்பு, வலிய நினைப்பு, மாறாத நினைப்பு அவ்வித நினைப்பு விரைவில் உலகம் அறியத் தக்க வெளியுண்மையாக மாறிவிடும்."[12]

தமிழ்ச் சொற்களில் மறைபொருள் தத்துவம் சார்ந்த, மறைபொருள் தத்துவம் சாராக் கூறுகளைப் பற்றி விளக்க பாரதியார் ஆங்கிலத்தில் எழுதிய "The occult elements in Tamil Speech" எனும் கட்டுரையும் குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்பாகத் தமிழ் மொழியின் சிறப்பைப் பின்வருமாறு பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

"Among the four typical languages with which I am acquainted, the Tamil language seems to me to be the unique in possessing an extrordinary number of words that have more of occult suggestion in them than secular significance."[13]

"தெருவில் ஊசிகளும் பாசி மணிகளும் விற்பதோடு பிச்சையெடுக்கவும் செய்கிற பெண்கள்" பாடும் நடையைப் பாஞ்சாலி சபதக் காப்பியத்தில் புகுத்திய பாரதி 'சொல்புதிது' மட்டுமன்று 'நடை புதிது' என்பதற்கும் இலக்கியச் சாட்சியாகத் திகழ்ந்தார். 'இழிசன வழக்கு' என்று ஒதுக்கப்பட்டனவற்றுள் பல சொற்களை இலக்கியப் பீடத்தில் அரசோச்ச வைத்த பாரதியின் சொல்லாட்சித்திறனைப் பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ. அவர்கள் "The Rhythm of the common speech - It's glorification by Bharathi" எனும் கட்டுரையில் அற்புதமாக விளக்கியுள்ளார்.[14]

அமரர் 'தெ.பொ.மீ.' சுட்டிக்காட்டியுள்ள மற்றொரு கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கது. "மக்கள் பாடலாகிய சிந்துவைக் காவிய ஆக்கத்துக்கும் பயன்படுத்தலாம் என்று காட்டியவர் பாரதியார்" என்று கூறியதோடு, தமிழ் இலக்கிய வரலாற்றின் இருபரம்பரைகளான மரபுவழி இலக்கிய நெறியும், மக்கள் வழி இலக்கிய நெறியும் ஒன்றோடு ஒன்று நடத்தி வந்த

போராட்டம் பாரதியில் வந்துதான் முற்றுப் பெற்றது என்றும் உணர்த்தியுள்ளார்.[15]

பாரதியார் பன்முறை கையாண்ட சொற்களைப் பற்றிய தனி ஆய்வு அரும்பியிருந்தாலும் மலர்ச்சியுறுவதைக் காணக் காத்திருக்க வேண்டியுள்ளது. இப்பொழுது "பாரதியின் சொல்லும் கருத்தும்" என்னும் பொதுப்பொருளில் ஏற்பாடாகியுள்ள இந்தக் கருத்தரங்கம் "மலர்ச்சிக்கு ஒளிபாய்ச்சும்" என்றே கருதுகின்றேன். "மகாகவி தன் கவிதைகளில் பன்முறை கையாளும் சொற்களை இனங்கண்டு, சமுதாய, பண்பாட்டு, அரசியல் கருத்தாக்கங்களை அச்சொற்கள் எவ்வாறு உணர்த்துகின்றன என ஆய்ந்து வெளிக்கொணர" இந்தக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது பாராட்டத்தக்க புதுமுயற்சி – முதன் முயற்சியாகும்.

'பாரதியின் சொல்லாட்சி' எனும் ஆய்வு நூலில் பேராசிரியர் பாரதிப்பித்தன், பாரதியாரின் பல்வேறு சொல்லாட்சித் திறனை விளக்கியுள்ளார். ஆனால் கருத்தாக்கங்களை வெளிப்படுத்தும் பன்முறை ஆளப்பட்ட சொற்களைப் பற்றிய ஆய்வை அவர் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், முன்னுரையில், "பாரதியின் பாடல்களில் ஆளப்பட்டுள்ள சொற்கள் தாம் எளியனவே அன்றி அவற்றின் பின்னாலுள்ள செய்திகளும், சித்தாந்தங்களும் எளிமையானவை அல்ல; அருமையானவை" என்று பாராட்டத்தக்க வகையில் குறிப்பிட்டுள்ளார்.

என் பார்வைக்குக் கிடைத்த "பாரதியின் சொல்லாட்சி" எனும் டாக்டர் இரா.குமரவேலன் கட்டுரையில் பாரதியார் பன்முறையாண்ட சில சொற்களைப் பற்றிய தமது கருத்தை மிகச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால் பன்முறை ஆளப்படும் சொற்களின் வழியே எவ்வாறு கருத்தாக்கம் உருப்பெறுகின்றது என்பதில் அவர் நாட்டம் செலுத்தவில்லை. அவர் எழுதியதாவது:

"பாடல் புனையும் கவிஞர் பலரும் தெரிந்தோ தெரியாமலோ சில சொற்களைப் பன்முறை தம் பாடல்களில் வருமாறு புனைவது வழக்கம். பாரதியும் இதற்கு விலக்கு அல்லர். கணம், ஈழை, நல்ல, சுடர், ஓம், சோதி, பொன், சற்றே முதலான பல சொற்களை மீண்டும் மீண்டும் பாரதி கையாளுகிறார். தேசிய கீதங்களின் முதல் பாடலில் தாழ்ந்த சாதியை "ஈனப் பறையர்" என்கிறார். தொடர்ந்து பல பாடல்களில் ஈனத் தொண்டர், ஈனக் கவலை, ஈன வயிறு, ஈனமான தொழில், ஈனப் பறவை என்று குறிக்கக் காணலாம். கணம் என்ற சொல்லை மட்டும் இருபதிற்கு மேற்பட்ட இடங்களில் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார்."[16]

இந்த அளவில் கட்டுரையாசிரியர் சுவை, நயம் காண்பதில் தம் ஆய்வுப் போக்கை அமைத்துக் கொண்டார். அரசியல், சமூக, பண்பாட்டுக் கருத்தாக்கங்களை இனங்காண உதவும் சில சொற்கள் மட்டும் இங்கு

குறிப்பிட்டு விளக்க விரும்புகின்றேன். 'ஆர்ய', 'சுதந்திரம்', 'பார்ப்பார்', 'தமிழ்', 'சாத்திரம்', 'வேதம்', ஆகிய ஆறு சொற்கள் மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## ஆர்ய

'ஆர்ய', 'ஆரியர்' எனும் சொற்களைப் பன்முறை ஆண்டுள்ள பாரதியார் அச்சொற்களின் வழியே ஆர்ய–திராவிட இனவாதக் கருத்தாக்கத்திற்கு உடன்படாமல், அச்சொற்களை 'உயர்ந்தோர்', 'சான்றோர்', 'பாரத மக்கள்' எனும் பல்வேறு பொருள்களில் ஆண்டுள்ளார். அவைதிக மதங்களான சமண பௌத்த நூல்களில் 'ஆர்ய' எனும் சொல் பெரு மதிப்பிற்குரியவர் எனும் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது. டாக்டர் அம்பேத்காரும் 'ஆர்ய' எனும் சொல்லை இனவாதச் சொல்லாக ஏற்கவில்லை. அச்சொல்லை இனத்தைக் குறிப்பிடும் சொல்லாகப் பயன்படுத்திய வேத இலக்கிய ஆய்வாளர் மாக்ஸ்முல்லர் தமது இறுதிக் காலத்தில் தம் கருத்தை மாற்றிக் கொண்டார். ஆனால் அச்சொல் வழக்கில் நிலைபேறு பெற்று விட்டதால் தம்மால் விலக்கிக் கொள்ளமுடியவில்லை என்றும் வருத்தப்பட்டுக்கொண்டாராம்.

ஆரிய பூமியில், ஆரியர் செய்வாரோ, ஆரியர் தம் தர்மநிலை, ஆரியர், ஆரியர் முன்னெறிகள், ஆரிய வேல் மறவர், என்று பாரதியார் குறிப்பிடும் இடங்களில் எல்லாம் பாரத நாட்டையும், அதன் பெருமையையும் முன்னிறுத்தி இசைத்துள்ளார். 'பாரததேவியின் திருத் தசாங்கம்' எனும் பாடலில் 'நாடு' பற்றிக் குறிப்பிடும்பொழுது "வானாடு பேரிமய வெற்பு முதல் பெண்குமரி ஈறாகும் ஆரிய நாடென்றே அறி" என்று பாரத நாட்டையே கூறுகின்றார் பாரதியார். 'வாழிய செந்தமிழ்' பாடலில் 'ஆரிய நாட்டினர்' என்னுமிடத்திலும், 'பாரத நாட்டினர்' எனும் பொருளையே வெளிப்படுத்தியுள்ளார் பாரதியார். 20–2–1906இல் சுதேசமித்திரனில் வெளிவந்த "வந்தே மாதரம்" எனும் பாடலில், "ஆரிய மென்ற பெரும் பெயர் கொண்ட வெம் அன்னை" என்றும் பாரதநாட்டை ஆரியம் என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றார். 'சங்கு' எனும் பாடலில்,

"பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தில் எறிந்தே
ஐயுற வின்றிக் களித்திருப் பாரவர்
ஆரிய ராமென்றிங் கூதேடா சங்கம்"

என்று கூறுமிடத்தில் புலன்களை வென்ற மேலோர்களை 'ஆரியர்' என்று குறிப்பிடுகின்றார் பாரதியார்.

ஆரியர்க்கு அமையும் குணங்களை விளக்குமிடத்தில் பண்புப் பெயராக 'ஆரியர்' எனும் சொல்லை ஆண்டுள்ளார். அப்பண்புகளைப் பின்வருமாறு பட்டியலிட்டுக் கூறுகிறார்.

"ஆரியர் கட்கிங் கமைகுணம் பலவே
அவையே,
முன்னோர் பயின்ற முறைமையி னன்மையைப்
பின்னோர் தமவெனப் பேணுத லொன்றே;
தான் பிறந்திட்ட தகைபெறு நாட்டிற்
பின்னிடா வன்பைப் பெற்றிட லொன்றே;
அவர் பெறும் பேரினை யருமகற் கிட்டு
வாய்மணந் திடவே வழங்குத லொன்றே;
இற்புற மாகா வகைசெய லொன்றே"

பாஞ்சாலி சபதத்தில் துரியோதனனை "அகத்தே இருளுடையான், ஆரியரின் வேறானோன் என்னுமிடத்தில் உயர்ந்தோரின் என்னும் பொருளில் 'ஆரியன்' எனும் சொல்லை ஆண்டுள்ளார்.

தாயின் மணிக்கொடியின் கீழ் அக்கொடியைக் காப்பாற்றத் திரண்டு கூடியுள்ள பல்வேறு மொழி வழிப்பட்ட தேசபக்த வீரர்கள் காட்சியை 'ஆரியக் காட்சி' என்று பாரதியார் கூறுமிடத்தில் 'ஆரிய' என்பது சிறப்புயர்ந்த எனும் பொருளை ஏற்கின்றது. 'ஆரிய தரிசனம்' எனும் பாடலில் முதல் தரிசனமாக அமைவது 'புத்த தரிசனம்'. இதையடுத்தே 'ஸ்ரீகிருஷ்ணர் தரிசனம்' வருகிறது.

கவிதையில் 'திராவிடர்' எனும் சொல் ஆளப்படவில்லை. கட்டுரையொன்றில் 'திராவிடர்' எனும் சொல் வருகின்றது.[17]

'திராவிடர்' என்போர் அசுரர்களின் சந்ததி என்றும், அவர்களை ஆரியர்கள் வென்று ஆண்டார்கள் என்றும் கூறப்படுவதை இக்கட்டுரையில் பாரதியார் மறுத்துள்ளார். "காமம், குரோதம், முதலிய தீய குணங்களை வேதம் அஸுரரென்று" குறிப்பிடுவதாகப் பாரதியார் விளக்கமளித்தார். பிராமணர்கள் ஆரியர்கள் அல்லர் என்பதையும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளும் பொழுது 'ஆர்ய' எனும் சொல் இனவாதச்சொல் அன்று எனும் தமது கருத்தாக்கத்தைப் பாரதியார் தெளிவுபடுத்தியுள்ளார்.

## சுதந்திரம்

'சுதந்திரம்' எனும் சொல்லைக் கொண்ட தலைப்புகளில் ஆறு பாடல்களைப் பாடியுள்ளார். அவையாவன: 'சுதந்திரப் பெருமை', 'சுதந்திரப் பயிர்' 'சுதந்திர தாகம்', 'சுதந்திர தேவியின் துதி', 'சுதந்திரப் பள்ளு'.

திலகர் சகாப்தத்தில் மூண்டெழுந்த தீவிரவாத தேசியத்தின் சுதந்திர வேட்கையின் கருத்து உருவாக்கத்தை உணர்த்தும் 'சுதந்திரம்' எனும் சொல் பன்முறை மேற்காணும் பாடல்களிலும் பிறவிடங்களிலும்

ஆளப்பட்டுள்ளன. தீவிரவாத தேசியத்தில் சுதந்திர தேவியாக, பாரதமாதாவாக இந்தியா உருவகப்படுத்தப்பட்டது. 'சுதந்திர தேவி' என விளித்துத் தனிப்பாடலே அமைந்துள்ளது. பாரததேவியின் திருத் தசாங்கம், பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி, பாரதமாதா நவரத்னமாலை முதலான தலைப்புகளில் அமைந்த பாடல்கள் பூமித்தாய் வணக்கத்தைக் குறிப்பன.

'சுதந்திர தாகம்' எனும் தலைப்பு பாரதியாரால் தரப்பட்ட தலைப்பன்று. சென்னை அரசாங்கம் அமைத்த பதிப்புக்குழுவினர் தந்த தலைப்பாகும். பாரதியார் கொடுத்த தலைப்பு "ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்". பாடலின் இறுதியில் "வீர சிகாமணி, ஆரியர்கோனே" என்பதே ஸ்ரீகிருஷ்ணனைக் குறிப்பதாகும். இப்பாடல் வீர வாஞ்சிநாதனால் சுடப்பட்ட வெள்ளைக்கார கலெக்டர் ஆஷ் துரை வழக்கில் ஆங்கிலததில் மொழி பெயர்க்கப்பட்டு நீதி மன்றத்தில் வைக்கப்பட்டது.

"சர்வ சுபங்களுக்கும் மூலதனமாகிய 'தேசபக்தி' எனும் தமது கருத்தைப் பாரதியார், 'சுதந்திரதேவியின் துதி' எனும் பாடலில்,

"நின்னருள் பெற்றி லாதார்
    நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி,
    படைத்துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணி லாத
    பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
    அணிகள்வேய் பிணத்தோ டொப்பர்"

– என்று வேறொரு கோணத்தில் கருத்தாக்கம் செய்துள்ளார். சுதந்திரம் பற்றிய கருத்தாக்கத்தில் ஒப்பற்று விளங்குவது பாரதியாரின் 'சுதந்திரப் பள்ளு'. 1947–இல் சுதந்திர பாரதத்தில் பாடுவதற்கு 1909–லேயே பாடலை இயற்றி விட்டார் பாரதியார். சுதந்திரம் சமூக மேல்மட்ட வர்க்கத்தினர்க்கு மட்டுமன்று, அடித்தள மக்களுக்கும் தான் என்பதைப் பாடலின் தலைப்பிலேயே விளக்கும்படி அமைத்தார். பள்ளர் களியாட்டத்தில் சுதந்திரப் பள்ளு பாடப்படவேண்டும் என்று விதித்தார். சமூக விடுதலை, அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை அனைத்தையும் வலியுறுத்துவது சுதந்திரப் பள்ளு. "பூமியி லெவர்க்குமினி அடிமை செய்யோம் – பரிபூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்" – என்னும் பாடலின் இறுதி வரிகள் சமூக அடிமைத் தனத்தில் ஆழ்த்தப்பட்டவர்களின் எழுச்சிக்குரலாக ஒலித்தது. 'சுதந்திரம்' எனும் பொருளைத்தரும் 'விடுதலை' எனும் சொல்லின் பன்முறை ஆளுகையும் தனி ஆய்வுக்குரியது.

அரசியலில் அந்நிய ஏகாதிபத்ய ஆதிக்கத்தை எதிர்த்த பாரதி, சமூக நீதிக்குப் புறம்பான ஆதிக்கத்தை எதிர்க்கும் கருத்துருவாக்கத்தையும் 'பாரப்பான்' எனும் சொல்லைச் சிலமுறை ஆண்டு வெளிப்படுத்தியுள்ளார்.

"பார்பபானை ஐயரென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே"

என்று சுதந்திரப் பள்ளு பாட்டிலே 'பார்ப்பானை' எனும் சொல்லில் சாதி அமைப்பின் தலைமைச் சக்தியாகக் கருதப் பெற்ற பார்ப்பன சாதியின் வீழச்சியைச் சுட்டிக்காட்டுகிறார். வசன கவிதையில் "தமிழ்நாட்டில் சாஸ்திரங்களில்லை. உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றையும் மறந்து விட்டுத் தமிழ்நாட்டுப் பார்ப்பார் பொய்க் கதைகளை மூடரிடங் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்" என்று பாரதியார் கூறியுள்ளார்.

'உயிர் பெற்ற தமிழர்' என்னும் பாடலில் ஆண்டுள்ள 'பார்ப்புக்கு' எனும் சொல்லாட்சியும், பாரதியாரின் சமூக நீதி கருத்துருவாக்கத்தைக் குறிப்பதாகும்.

"சூத்திரனுக்கொரு நீதி – தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் – அது
சாத்திரமன்று சதி என்று கண்டோம்."

இது "உயிர் பெற்ற தமிழர்" பாட்டின் வெடிப்புறப் பேசுதலாகும். மறவன் பாட்டிலே ஆளப்பட்டுள்ள 'பொய்மைப்பார்ப்பார்' எனும் சொல்லும் 'பேராசைக்காரனடா பார்ப்பான்' எனும் சொல்லும் அவருடைய கருத்தாக்கத்தை விளக்குவனவாகும். "நந்தனைப் போலொரு பார்ப்பான் – இந்த நாட்டினிலில்லை" எனும் கவிதை வரியிலே தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த நந்தனைப் பாரப்பானாகப் போற்றிய பாரதியின் சொல்லாட்சியும் கவனிக்கத்தக்கது. "பார்ப்பனக் குலங் கெட்டழி வெய்திய, பாழடைந்த கலியுக மாதலால்" என்னுமிடத்திலும் தமது சொல்லாட்சியின் குறிக்கோளை உணர்த்துகின்றார் பாரதியார். பார்ப்பனர் என்னும் சொல்லின் மற்றொரு வடிவமான 'வேதியர்' எனும் சொல்லைக்கொண்டு "வேதியராயினு மொன்றே, மற்ற வேறு குலத்தின ராயினுமொன்றே" எனும் சமத்துவ நோக்கை வெளிப்படுத்தினார் பாரதியார்.

நான்கு வகுப்பு பேதம் வர்ணாச்ரம அமைப்பை விளக்குமிடத்தில் "வேத மறிந்தவன் பார்ப்பான் – பலவித்தை தெரிந்தவன் பார்ப்பான்" என்று குறிப்பிட்டதோடு,

"நாலு வகுப்பும் இங் கொன்றே – இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்

வேலை தவறிச் சிதைந்தே – செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி"

என்றும் குறிப்பிடுகிறார். இந்து சமூக அமைப்பிற்குரிய வர்ணாசிரம அமைப்பில் நான்கு வகுப்புகளும் சமமே என்று சாற்றிய பாரதி இந்த அமைப்பு வீழ்ந்தால் மானிடச் சாதி என்று குறிப்பட்டு அது வீழும் என்று கூறியதின் நுட்பம் ஆராய்ச்சிக்குரியது. நால் வகுப்புப் பாகுபாடு இந்து சமூக அமைப்பிற்குரியது. இந்து சாதி வீழ்ச்சிக்கு என்று கூறாமல் 'மானிட சாதி' என்று ஏன் கூறினார் என்பது ஆய்விற்குரியது. வர்ணாச்சிரம அமைப்பை நீர்மூலமாக்க பாரதியார் முழங்கவில்லை. அந்த அமைப்பை 'நாசமுறச் செய்தனர் சில மூடர்' என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

'வருண சிந்தாமணி' எனும் நூலிற்கு அளித்த சாற்றுக்கவியில் உழுதுண்டு வாழ்வார் வாழ்க்கை – அதாவது வேளாளர் வாழ்க்கைஃ வேதமோதல் ஊழியத்தினுஞ் சிறப்பாம்" என்று குறிப்பிட்டுள்ளார் பாரதியார். இந்தச் சாற்றுக்கவியில் தொடக்கப்பாடலான பின்வரும் பாடல் 'குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' எனும் கண்ணோட்டத்திற்கு இயைந்ததாகும்.

"செந்தன்மை பூண்டொழுகுந் திறத்தானே
யறவோர்தஞ் சிறப்பு வாய்ந்த
அந்தணரப் பிரமநிலை யறிகுநரே
பிராமணரென் றளவி னூற்கள்
சந்ததமுங் கூறியதைத் தேராமே
பிறப்பொன்றாற் றருக்கி நாமே,
எந்தநெறி யுடையர்பிற ரெனினு மவர்
சூத்திரரென் றிகழ்கின் றேமால்."

'ஸ்ரீ கபிலர் அகவல்' எனும் கவிதையில் பண்டைய கபிலரகவல் கவிதையின் பார்ப்பன எதிப்புக்குரல் ஒலிக்கவில்லை. பாரதியாரின் இந்தக் கவிதையில் பிறப்பு – இறப்புச்சுழற்சியின் வாழ்க்கைத் தத்துவம் பேசப்பட்டுள்ளது. முடிவுறாத இந்தக் கவிதையின் பின்வரும் இறுதி வரிகளைத் தொடர்ந்து பாரதியார் என்ன சொல்ல நினைத்தாரோ என்பது அறிய முடியாமற்போனது பேரிழப்பாகும்.

"நேயங்கொள் பார்ப்பனர் – ஒன்று
நிகழ்த்திடக் கேட்பீர் நுமக்குமிங் கே".

## தமிழ்

பாரதியார் பன்முறையாண்ட சொற்களில் 'தமிழ்' எனும் சொல், தமிழின் பண்டைய சிறப்பு, பின்னர் அதன் வீழ்ச்சி, தேசிய இயக்கத்தால் ஏற்றப்பட்ட அதன் எழுச்சி, தன்னேரில்லாத அதன் பல்வகைச் சிறப்புகள், மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் இணைத்துத் தமிழ் இனப்

பெருமையையும், பாரதநாட்டுப் பெருமையையும் சுருதி பேதம் தவறாமல் இசைக்கும் பாங்கும் இன்ன பிறவற்றையும் உணர்ச்சியும் – அறிவும் பின்னிப் பிணைந்த நிலையில் நிறுவியுள்ளது. "தமிழால் பாரதி தகுதிபெற்றதும், பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும் பாவேந்தர் பாரதிதாசன் சாற்றியுள்ள பல்வேறு கருத்துகளில் கலங்கரை விளக்கொளியாக விளங்குகின்றது.

கவிதையில் "சொல்லில் உயர்வு தமிழச் சொல்லே" என்று முழங்கிய பாரதி, கட்டுரையொன்றில் 'தமிழில் எழுத்துக்குறை' யைக் கண்டதும், அதற்கு அவருடைய யாத்த நண்பர் வ.உ...சி. தெரிவித்த கண்டனமும் குறிப்பிடத்தக்கது.[18]

"நவீனத்துவமும் பாரதியும்" எனும் நல்லாய்வுக் கட்டுரையில் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், "மொழித்துறையிலே பாரதியின் நோக்கு புரட்சிகரமானதாக இருப்பதைக் காணமுடிகிறது." என்று கூறியுள்ளார்.[19]

ஆனால், அவர் பாரதியாரின் "தமிழ்த்தாய்" எனும் கவிதையின் தொடக்கத்தில் வரும் பாடலில் பாரதியார் விஞ்ஞானபூர்வமான வரலாற்று நோக்கிற்குப் பதிலாக "பொது ஜன ஐதீகங்களை (popular myth) அடியொற்றிய நோக்கிற்கு இடமளித்து விட்டார் என்று விமர்சனம் செய்துள்ளார்.[20]

ஆதிசிவன் பெற்று விட்டான் – என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்.

தமது இந்தக் கருத்தைப் பாரதியார், "தமிழ்நாட்டு மாதருக்கு" எனும் கட்டுரையில் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார்.

"ஆதியில் பரமசிவனால் படைப்புற்ற மூல பாஷைகள் வடமொழியென்று சொல்லப்படும் 'ஸம்ஸ்கிருதமும் தமிழுமேயாம்' என்று பண்டைத் தமிழர் சொல்லியிருக்கும் வார்த்தை வெறுமே புராணக் கற்பனை அன்று. தக்க சரித்திர ஆதாரங்களுடையது" என்று பாரதியார் நிறுவ முயல்வதைப் பேராசிரியர் நுஃமான் "மிகவும் அபத்தமாகவே அமைகின்றது" எனக் குறிப்பிட்டு, "அகநிலைச் சார்பான அறிவுக்குப் புறம்பான கருத்துக்கள். ஒவ்வொருவருக்கும் அவரது மொழி சிறந்ததாக இருப்பதில் ஆச்சரியமில்லை," என்று கூறி முடிக்கின்றார். தேசிய பெருமித உணர்ச்சியை ஊக்குவிக்கக் கூறப்பட்டாலும் அறிவார்ந்த நிலையில் இத்தகையக் கருத்து ஏற்கப்படவில்லை.

## சாத்திரம்

'சாத்திரம்' எனும் சொல்லைப் பன்முறை பாரதியார் ஆண்டுள்ளார். பாரதியார் சாத்திரங்களை வெறுத்தவர் அல்லர்; போற்றுபவர். ஆனால் பொய்மைச் சாத்திரங்களைச் சாடுவதில் வீரவாள் சுழற்றியவர் பாரத மாதாவைச் சாத்திரம் கோடி சொல்லருமாண்பினை ஈன்றனை' என்று பாடினார்.

"பாரத ஜனங்களின் தற்கால நிலை" "துடிக்கும் நெஞ்சம்" எனும் கவிதையில் விளக்க வந்த பாரதியார்.

"சாத்திரங்க ளொன்றுங்காணார் – பொய்ச்
சாத்திரம் பேய்கள் சொலும் வார்த்தை நம்பியே" மக்கள் சீழிவதைச் சாடியுள்ளார்.

'கண்ணன் என் காதலி' பாட்டில் "சொன்னவர் சாத்திரத்தில் மிக வல்லவர்காண் – அவர் சொல்லிற் பழுதிருக்கக் காரணமில்லை" என்று சாத்திர வல்லார் பெருமை பேசுவார் பாரதியார்.

'தமிழ்த்தாய்' பாடலில் "சாத்திரங்கள் பல தந்தார் – இந்தத் தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்" என்று கூறுமிடத்தில் சாத்திரப் பெருமையைப் பேசியுள்ளார் பாரதியார்.

'புதுமைப்பெண்' எனும் பாடலில், "சாத்திரங்கள் பலபல கற்பராம்; சவுரியங்கள் பலபல செய்வராம்" என்றும் கூறியுள்ளார் பாரதியார்.

'கண்ணன் – என் தாய்' கவிதையில், 'சாத்திரங் கோடி வைத்தான் – அவை தம்மினு முயர்ந்ததோர் ஞானம் வைத்தான்" என்று கண்ணன் அருளிய சாத்திரங்களைப் போற்றுகின்றார் பாரதியார்.

'கனவு' எனும் தமது சுயசரிதைக் கவிதையில் 'சாத்திரங்கள்' பெயரால் தமது இளவயது திருமண நிகழ்வில் ஏற்பட்ட தமது வெறுப்பைப் பாரதியார் பின்வருமாறு பாடியுள்ளார்.

"சாத்தி ரங்கள், கிரியைகள் பூசைகள்
சகுன மந்திரத் தாலி மணி யெலாம்
யாத்தெ னைக் கொலை செய்தன ரல்லது
யாது தர்ம முறையெனக் காட்டிலர்".

'தமிழச்சாதி' எனும் கவிதையில், தமிழ்ச் சாதியின் உயிர்த்தலம் சாத்திரம் என்பதையும் பின்வருமாறு உணர்த்தியுள்ளார் பாரதியார்.

சாத்திரம் கண்டாய், சாதியில் உயிர்த்தலம்
சாத்திரம் இன்றேல் சாதியில்லை.

இதைக்தொடர்ந்து, "பொய்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள், பொய்மை யாகும் புழுவென மடிவர்" என்றும் எச்சரித்துள்ளார். மேலும் தொடர்ந்து இசைத்ததில் 'சாத்திரம்' என்பதற்குப் பின்வரும் வரைவிலக்கணத்தைத் தந்துள்ளார்.

"சாத்திரம் – (அதாவது, மதியிலே தழுவிய கொள்கை, கருத்து, குளிர்ந்திடு நோக்கம்)–

பாரதியார் கவிதையில் கூறப்படும் கருத்துகளை, பாரதியார் கட்டுரைகளில் கூறப்படும் கருத்துக்களுடன் இணைத்துப் புரிந்து கொள்ளவேண்டும்.

'சாஸ்திர விதி' பற்றி பாரதியார் எழுதியதில் பின்வரும் பகுதி இங்கு இணைத்துச் சிந்திப்பதற்குரியதாகும்.

"சாஸ்திரம் மனிதனால் எழுதப்பட்டது. ஆதலால் இன்றும் நிறைவு பெறவில்லை. தெய்வ விதிகளை கூடியவரை பின்பற்றியே சாஸ்திரக்காரர் எழுத முயற்சி செய்திருக்கிறார்கள். .................. சாஸ்திரங்களையெல்லாம் காலத்துக்குத் தகுந்தபடி மாற்றிக் கொண்டு போகிறோம்' ........... தெய்வ விதிக்குப் பரிபூரணமாக உட்பட்டு சாஸ்திர விதிகளையும மேன்மேலும் புத்திசாலித்தனமாக சீர்திருத்திக் கொண்டு வந்தால் மனுஷ்ய ஜாதிக்கு சேமம் உண்டாகும்."

சாத்திரம் பற்றிய பின்வரும் தமது முக்கியமான கருத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார் பாரதியார்.

"இஹலோக ஞானத்தை இகழ்ச்சியாகப்பேசும், ஆத்ம சாஸ்திரம்' பொய். உண்மையான ஆத்ம சாஸ்திரம் இஹலோக ஞானத்தை விளக்கும்".

## வேதம்

வேதம், வேதநெறியில் பாரதியார் தோய்ந்து உறைந்தவர். 'கண்ணன் – என் அரசன்' எனும் பாடலில் "வித்தை நன்கு கல்லாதவன் என்னுளே வேத நுட்பம் விளங்கிடச் செய்திட்டான்' என்று பாடியுள்ளார். தம்மை "வேதங்களாக்கிடுவீர்" என்பது ஒன்றாகும். 'வேத வழியே வழி' என்றும், வியனுலகனைத்தையும் அமுதென நுகரும் வேத வாழ்வினைக் கைபிடிப்போம்" என்றும் அழைக்ககின்றார். வேதச் சொற்களுக்கு பொருள் காண்பதில் அரவிந்தரின் Vedic Symbolism வழியைப் பின்பற்றுகின்றார்.

பாரதமாதாவின் கையை, "மிக நன்று பல் வேதம் வரைந்தகை" என்றும், 'எங்கள் தாய்' நாவினில் வேதமுடையவள்" என்றும், வெறிகொண்ட தாய் "வேதங்களைப் பாடுவள் காணீர்" என்றும் பாரதமாதா திருப்பள்ளியெழுச்சிக்கு, "தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன" என்றும்,

பாரததேவியின் திருத்தலத்தில் ஒன்றாக "முக்தி தரும் வேதமுரசு" என்றும் பலவாறாக வேதத்தை வழுத்தும் தமது கருத்துருவாக்கத்தைத் தந்துள்ளார். அதே சமயத்தில் "கோத்த பொய்வேதங்களையும்" என்றும், "போதச் சுடரை புகையிருள் சூழ்ந்தது" என்றும் பொய்மை வேதத்தைச் சாடியுள்ளார். பாரதியாருடைய வேதப் பயிற்சியின் முடிமணியாக ஒளிர்வது அவர் படைத்த 'வேதரிஷிகளின் கவிதை.'[21]

"தமிழா! வேதத்தை நம்பு" என்பதும் அவர் விடுத்த அழைப்புதான்.

## குறிப்புகள்

1. ஸ்ரீ அரவிந்தர் அருளிய ரிக்வேதம் – அக்னி ஸூக்தங்கள் – 1947 – மொழிபெயர்த்தோர், தி.வி. கபாலி சாஸ்திரிகள் – ப.1
2. "The "AHANA" of Shri Aurobindo Ghose" - Agni and other poems and translations and essays and other prose fragments - 1980 - published by A.Natarajan - p.73.
3. "மறுமலர்ச்சி" – வ.வே.சு. ஐயர் கட்டுரைகள் – தொகுப்பு – 1981 – பெ.சு.மணி – ப.26
4. மேற்படி நூல் – ப.16
5. 'இந்தியா' – தமிழ் வார இதழ் – புதுச்சேரி – ஆசிரியர், பாரதியார் – 21–9–1909.
6. "அனுபந்தம்–5", – பாரதி நூல்கள் – கவிதை – முதற்பதிப்பு – சென்னை அரசாங்க வெளியீடு – 1954.
7. விபுலானந்த தரிசனம் – 1993 – வ.சிவசுப்பிரமணியன் – மட்டக் களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுவிழாச் சபை வெளியீடு – ப.82
8. மேற்கோள் – சுவாமி விபுலானந்தர் –1992 – பெ.சு.மணி – மணிவாசகர் நூலகம் – சென்னை – ப.89
9. பாரதி புதையல் – மூன்றாம் தொகுதி – 1975 – பதிப்பாசிரியர் – ரா.அ. பத்மநாபன் – ப.2.
10. பாரதி நூல்கள் – இரண்டாம் பகுதி – வசனம் – தத்துவம் – 1960 – சென்னை அரசாங்க வெளியீடு – ப.155, 156.
11. Sri Aurobindo's complete volume No.29 - p.375
12. முற்கூறிய "பாரதி நூல்கள் – இரண்டாம் பகுதி" – பக்.131–132

13. முற்கூறிய பாரதியாரின் ஆங்கில கட்டுரைகளின் தொகுப்பு நூல் – ப.122.

14. Essays on Bharathi - Volume three - Bharathi Tamil Sangam, Calcutta - 1970 - pp.16-22

15. தமிழ்ப் புலவர் மரபும் பாரதி மரபும் – 1995 – பெ.சு. மணி – பூங்கொடி பதிப்பகம், சென்னை – பக்.64–65

16. "பாரதியின் சொல்லாட்சி" – கட்டுரை – டாக்டர் இரா.குமரவேலன் – பல்கலை நோக்கில் பாரதி –1982 – தொகுப்பாசிரியர், பேராசிரியர் ம.வி. சுதாகர் – பூரம் பப்ளிகேஷன்ஸ், சென்னை – ப.47

17. பாரதி நூல்கள் – நான்காம் பகுதி – வசனம் – அரசியல் – 1963 – தமிழ் நாடு அரசாங்கம் வெளியீடு – ப.203.

18. விவரமறிய பார்க்கவும் – "ஞானபாநுவில் பாரதி – வ.உ.சி. கருத்துப் போர்". வீரமுரசு சுப்பிமணிய சிவா – 1984 – பெ.சு. மணி – நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் – சென்னை – ப.301–306

19. பாரதி பன்முகப் பார்வை – 1984 கட்டுரைத் தொகுப்பு – தேசிய கலை இலக்கிய பேரவை – கொழும்பு – இலங்கை – ப.175

20. மேற்படி நூல் பக்.176

21. வேதம் பற்றிய பாரதியாரின் விரிவான கருத்தாக்கத்தை அறிய பார்க்கவும் பெ.சு. மணியின் "பாரதியாரின் வேத ரிஷிகளின் கவிதை" – 1978.

# 2

# தமிழ் என்ற கருத்தாக்கம்

மீனாட்சி முருகரத்தனம்

## ஆய்வுப்பொருள்

கருத்தாக்கம் என்ற சொல், கருப்பொருள், பாடுபொருள், மையக்கருத்து என்ற பொருளில் ஆளப்படுகிறது. Theme என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளை ஒட்டியதாக இங்கே வழங்கப்படுகிறது. பாரதியாரின் பாடல்களில் தேசியம், மனித விழுமியங்கள், கடவுள், பெண்மை, தீண்டாமை, தலைமை எனப் பல்வேறு கருத்தாக்கங்கள் உள்ளன. அவற்றில் தமிழ் ஒன்று.

'தமிழ்' பற்றிப் பாரதியார் என்னென்ன கூறியுள்ளார் என்பதை மட்டுமன்றித் தமிழ் அவர் பாடல்களில் ஒரு கருத்தாக்கமான காரணம் என்ன, மொழி என்ற கருத்தாக்கம் தமிழில் வேறு யாரால் பாடப்பட்டுள்ளது, பேசப்பட்டுள்ளது. பிற மொழிகளில் இதேபோல் மொழியைக் கருத்தாக்கமாக்கிய இலக்கியப் படைப்புக்கள் உள்ளனவா? மொழிபற்றிய சிந்தனையில் பாரதியின் தனித்தன்மை என்ன? அவர் வாரிசுகளின் இன்றைய 'தமிழ்'க் கருத்தாக்கம் எவ்வாறு உள்ளது, -- இப்படிப் பலவாறு சிந்தித்துப் பார்க்கலாம்.

பாரதியின் படைப்புக்கள் பலவகையின. கவிதை, கட்டுரை, சிறுகதை, உரைச்சித்திரம், வசனகவிதை எனப் பல திறத்தன. அவற்றுள் கவிதைகளில் அமைந்த கருத்தாக்கம் பற்றி மட்டுமே இக்கட்டுரை பேசுகிறது.

## பாரதியின் 'தமிழ்' என்ற கருத்தாக்கம்

'தமிழ்' என்ற பெயர்ச்சொல் பலவற்றுக்கு அடைமொழியாகித் தமிழ் சார்ந்த பலவற்றை உணர்த்துவது. தமிழ்மொழி, இனம், இலக்கியம், நாடு, மக்கள் எனப் பலவும் அதில் அடங்கும். பாரதியாரின் கவிதைகளில் தமிழ் என்ற கருத்தாக்கம் ஆறு தலைப்புக்களில் அமைந்துள்ளது. செந்தமிழ்நாடு, தமிழ்த்தாய், தமிழ், தமிழ்மொழி வாழ்த்து, தமிழ்ச்சாதி, வாழிய செந்தமிழ் என்ற அந்த ஆறனுள் தமிழ்சார்ந்த அனைத்தையும் பற்றி அவர் பேசிவிடுகிறார்.

உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பங்களைப் பாடியோரில் பிறர் போல மூன்றில் ஒன்று பற்றிக் கால, இட எல்லைகட்குக் கட்டுப்பட்ட

கருத்துக்களைப் பேசாமல் மூன்றையும் பற்றிப் பொதுமை அறம் பாடி பாடாத 'வீடு' பற்றிப் பலவும் நினைக்க வைத்த வள்ளுவர் போல தமிழ்நாடு, இனம், மொழி என்ற மூன்றும் பாடியவர் பாரதியார். ஒரே நேரத்தில் பலரைச் சமாளிக்கும் திரைக்கதைத் தலைவன் போலத் தமிழ்பற்றிப் பாடிய பலரையும் தன் தனிப்பட்ட சிந்தனைப்போக்கால் வெல்ல வல்லவர் பாரதி. தமிழ்பற்றிய அவர் கவிதைகள் தன்னுணர்வுப் பாடல்கள். அவற்றின் வழி அவரை அறியலாம்; அவரது வாழ்வியற் கோட்பாடுகளை, விழுமியங்களை உணரலாம். மொழியை ஒலி, வரி என்னும் இருவகை வடிவங்களாக மட்டும் அவர் காணவில்லை. உயிராக, உணர்வாக மதித்தார். எனவே தமிழை அது பேசும் மக்களிடமிருந்து, அவர்கள் சிந்தனையிலிருந்து அவர்கள் பண்பாட்டிலிருந்து பிரித்து வெறும் கருத்துப் பரிமாற்றக் கருவியாக அவர் காணவில்லை. அத்துடன் விழுதுகள் படர்ந்தாலும் வேர்கொண்டு நிற்கும் ஆலமரம் போலப் புதுமைகளில் நாட்டம் கொண்டாலும் பழமரபுகளையும் போற்றிய மனம் அவருடையது. அதனால் தமிழ் பற்றிய அவர் கருத்துக்கள் பல மரபின் செல்வாக்கு மாறாதவை.

## பாரதியார் கருத்தாக்கப் பண்புகள்

### *தெய்வீகம்*

தமிழ் மொழி தெய்வீகமானது என்ற கருத்தாக்கம் பாரதியாரின் மரபுசார்ந்த சிந்தனைகளில் தலையாயது. "ஆதிசிவன் பெற்றுவிட்டான் என்னை" (தமிழ்த்தாய் :1) என்று தமிழே சொல்வதாகப் பாடுகிறார். இதைத் தொடர்ந்து, "ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர் வேதியன் கண்டு மகிழ்ந்தே நிறை மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்" என்பதும் (மேற்படி 2–4) தமிழ் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகளிலிருந்து பெற்ற கருத்தாக்கம்.

### *தொன்மை*

தமிழ் மிகத்தொன்மையானது என்பதும் பாரதியாரால் பலவிடங்களில் வலியுறுத்திக் கூறப்படும் கருத்து. ஆனால் இதை நேரடியாகக் கூறுவதைவிட ஆரியத்துக்கு நிகரான பழைமை சான்றது என்றே உணர்த்துகிறார். அதனாலேயே அது தந்தை பெரியாரின் கண்டனத்திற்கு உள்ளாகிறது. தமிழ்நாட்டின் அரசியாக வீற்றிருந்தேன் என்று பாரதியாரின் தமிழன்னை பேசவில்லையே என்று சுட்டிக்காட்டுவார். அந்த ஆதங்கத்தில் ஒரு நியாயமும் உண்டு. எனினும் யாருடைய படைப்பை ஆராயும்போதும் படைப்பாளர் எந்த நோக்கில் யாருக்காகத் தன் கருத்தை வெளியிட்டார் என்பதை மனத்தில் கொண்டே மதிப்பீடு வழங்கவேண்டும் என்பதால் பாரதியார் வாழ்ந்த காலத்தில் இந்தியா முழுவதையும் உள்ளடக்கிய தேசிய உணர்வே முதன்மை பெற்றிருந்ததால் அங்ஙனம் கூறினார் எனலாம்.

அத்துடன், 'சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திப் பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை' என மாதவி போற்றப்படுவது போன்றே பிறந்த இனத்திற்கு அப்பாற்பட்ட மனவுணர்வினர் என்றாலும் வேதங்களைப் போற்றிய பாரம்பரியமும் சூழலும் அவரது கருத்தாக்கத்தில் ஆளுமையைச் செய்திருக்கக்கூடும். தமிழின் தொன்மை சுட்டச் சங்க இலக்கியங்களோ தொல்காப்பியமோ பேசப்படவில்லை என்பதை மறுக்க முடியாது. ஆரியத் தாக்கம் பெற்றவை எனப் பெரியாரால் சுட்டப்பட்ட சிலம்பும் கம்பராமாயணமுமே சுட்டப்படுகின்றன. திருக்குறள் விதிவிலக்கு. அதுகூடப் பெரியார் அதில் கண்ட பகுத்தறிவும் மானுடப் பொதுமையும் வைதீக எதிர்ப்பும் பிறரால் காணப்படாமை காரணமாக இருக்கலாம். மூவேந்தர்களும் தமிழ்ப் புலவோரும் வளர்த்தனர் என்பதைப் பாரதியார் மறவாமல் சுட்டத்தான் செய்கிறார். அத்துடன், மொழியியல் ரீதியாக மூலத்திராவிடம் என்று அழைக்கத்தக்க ஒன்றுடன் பழந்தமிழ் மிக நெருங்கிய உறவு கொண்டிருக்கப் பின்னர்த் தோன்றிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை பழந்தமிழின் கூறுகள் பலவற்றை ஒத்திருக்க, படைப்பாளர்க்கே உரிய கற்பனையுடன் பழந்தமிழ்த் தாய் பெற்றெடுத்த பிள்ளைகளாய் அவற்றைச் சுட்டுவதும், பல்வேறு காரணங்களால் பேச்சு வழக்கறும் மொழி காலப் போக்கில் புதிய படைப்புகள் குறைய வழக்குக் குன்றுவதை வாழ்விழந்ததாய்ப் பேசுவதுமான கவிமரபை ஒட்டிப் பாரதியாரும் திசைமொழிகள் பல மறையத் தமிழ் மட்டும் வாழ்வதாகப் பாடுகிறார். எனினும்

"கன்னிப் பருவத்தில் அந்நாள் – என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்னவோ பெயருண்டு – பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்"

அவர் சுட்டும் திசைமொழிகளும் அவற்றின் அழிவும் அவர் கருத்து யாதெனச் சிறிது திகைக்கவும் ஐயுறவும் வைக்கின்றன. சுந்தரம் பிள்ளை போல, "ஆரியம்போல் உலகவழக்கு அழிந்து ஒழிந்து சிதையாத சீரிளமைத்திறம்" பாரதியாரால் சுட்டப்படவில்லை. இங்கு மட்டுமல்ல எங்குமே வடமொழியின் வழக்கருமை அவரால் பேசப்படவில்லை. சமயம், கல்வித் துறைகளில் அவர் காலத்தில் அது ஆளுமை செலுத்தியதும் ஒரு காரணம். பிற திராவிட மொழிகளைச் சுட்டியிருக்க முடியாது. ஏனெனில் அவை இன்றும் வாழ்கின்றன. அவ்வாறாயின் அவர் திசை மொழி என்றது எவற்றை என்பது விளங்கவில்லை. பாலி, பிராகிருதம் போலத் தமிழின் தொன்மைக் காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கிய பழங்குடி மக்களின் மொழிகளைச் சுட்டுவதாக எண்ணலாம். திசைச்சொல் என்பது போன்ற கலைச் சொல்லாக அவர் திசைமொழி என்ற சொல்லை ஆளவில்லை என்று தெரிகிறது. எவ்வாறாயினும் வடமொழிக்கு நிகரான தொன்மை சான்றது தமிழ் என்கிறார். அத்துடன் வடமொழிக்கு இணையாகச்

சொல்வதன்றித் துணையாகவோ அதிலிருந்து தோன்றியதாகவோ சொல்லவில்லை. 'ஆதிசிவன் பெற்றுவிட்டான்' என்று தனியான தோற்றமே சுட்டுகிறார். பெற்றது மகேசனோ மக்களோ தமிழ் தானே தோன்றிய மொழி என்பது பாரதியின் கருத்தாக்கம்.

## *நீடித்த, நிலைத்த வாழ்வு*

தமிழின் நெடுவாழ்வை வெளிப்படையாகப் பாரதி சுட்டும் இடங்களுடன் தம் கவிநயத்தால் அத்தகு பொருள் கொள்ள இடம்தரும் வகையில் சொல்லாட்சியை அமைத்துள்ளதும் காணலாம். "தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்" (தமிழ் – 4:4) என்கையில் தமிழமுதின் சுவை அமரர் சிறப்பாகப் பேசப்படுகிறது. இந்த இடத்தில் 'அமரகதை' என்பதற்கு நகைச்சுவை உணர்வுடன் 'கல்கி' கூறிய விளக்கம் அதை அறிந்தவர் மனத்தில் எழாமல் இராது. தமிழமுதின் சுவை என்பது இலக்கியச் சுவை. தமிழிலக்கியத்தின் தனிச்சுவை எது? ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் 'தமிழ்' அறிவிக்கக் கபிலர் ஏன் குறிஞ்சிப் பாட்டைப் பாடினார்? தமிழ் அறிவித்தல் என்பது தமிழ்ப் பண்பாட்டை உணர்த்தல் என்ற கருத்தினால்தான் தமிழ்ப் பண்பாட்டின் உயிர்நாடியாய் அவர் உணர்ந்த 'அறத்தொடுநிற்றல்' கூற்று அமையப் பாடினார். அறமே பண்பாடு பண்பாடே இலக்கியத்தின் உயிர்நாடி. எனவே இலக்கியச் சுவை என்பது அது உணர்த்தும் பண்பாடே. தமிழர் பண்பாடு, 'மன்னா உலகத்து மன்னுதல் குறித்த' புகழெனின் உயிரும் கொடுப்பது. எனவே தமிழறிதல் பண்பாட்டைத்தரும். பண்பாடு புகழொடு வாழ வைக்கும். புகழ், இறவாமை தரும். அமரரின் சிறப்பு அமுது. அமுதின் தனித்தன்மை இறவாமை. எனவேதான் தமிழமுதின் சுவை கண்டார் அமரரின் சிறப்புக் கண்டவர் ஆகின்றார்கள் – தமிழ், தன்னை அறிந்தாரைப் பண்போடு, புகழோடு, இறவாமல் வாழவைக்கும் என்ற கருத்தைப் பாரதியின் பாடலடிகளில் பெறலாம்.

மற்றொரு விளக்கமும் கூறலாம். தமிழமுதின் சுவை என்பது நல்ல படைப்பின் நயமுணர்தல். அதற்கு அடிப்படை ரசனையுணர்வு. அதை அளிப்பது அழகியல் கோட்பாடு. அழகுணர்வு வாழ்நாளைப் பெருக்குவது. எண்ணிக்கையை மட்டுமல்ல; தரத்தையும் கூட. அதனாலும் தமிழமுதின் சுவை கண்டார் வானோர்க்கொத்த வாழ்வினராகி அமரர் சிறப்புக் கண்டவர் ஆவார்கள்.

தமிழ் நீடித்த வாழ்வுடையது; அதைக் கற்றல் நீடித்த வாழ்வு தரும் என்று கூறும் பாரதியின் பாடல் அந்த இலக்கணத்திற்கேற்ற இலக்கியமாகி நவில்தொறும் நூல்நயம் தந்து தானும் வாழ்ந்து தமிழையும் வாழவைத்து இன்புறும் தமிழரையும் வாழவைக்கிறது. மகிழ்ச்சி, வாழ்நாட்களை நீட்டிக்க வல்லதல்லவா?

## தமிழின் ஆற்றல்

இலக்கியச் சிறப்பு மட்டுமின்றி மொழி என்ற நிலையில் தமிழின் ஆற்றல் பற்றி நம்மை எண்ணிப் பார்க்க வைக்கும் இடங்களும் பாரதியின் பாடலில் உண்டு. 'தமிழ் மொழி வாழ்த்து' என்ற தலைப்பில் 'வானமளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே' என்றும் பாடியுள்ளார். வானமளந்தது என்பது கடந்த காலத்தில் அறியப்பட்ட அனைத்தும் வெளியிட வல்லமை சுட்ட, மொழியின் ஆற்றல் (Potentiality) புரியும். அதனால் அது வண்மொழி – வளமான மொழி. வானமறிந்தது – இன்றைய தெளிவும் நாளைய அறிவும் சுட்ட அதை ஏற்கும் மொழியின் திறம் (Possibilities) விளங்கும். அதனால் அது வண்மொழி மட்டுமல்லாது வளர்மொழியும் ஆகிறது. தன்னிடம் உள்ளதே மிகுதியாய்க் கொண்ட வண்மொழி பிறவற்றிடம் பெற்றுப் பெருகும் வளர்மொழியும் ஆகிறது. தமிழின் ஆற்றலை உணர்த்த அவர் பயன்படுத்தும் சொற்களே தமிழின் சொல்வளத்தை உணர்த்துமாறு அமைந்தது. தமிழின் சொல் ஆற்றலொடு பாரதி எனும் தமிழனின் சொல் ஆற்றலையும் உணர்த்துகிறது.

## தமிழின் தலைமை

தாமறிந்த புலவரிலே வள்ளுவன்போல் கம்பனைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என்பது வெறும் புகழ்ச்சியில்லை உண்மை என விளம்புபவர், தாமறிந்த, மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்றும், அடித்துப் பேசித் தமிழின் தலைமை சுட்டுகிறார். மொழியியல் ரீதியாகப் பார்த்தாலும் சரி பண்பாட்டு அடிப்படையில் நோக்கினாலும் சரி, உண்மையில் எந்த ஒப்புமையிலும் தன்மை அடிப்படையிலான வேறுபாடுகளைச் சுட்டுவதுதான் சரியானதும் முறையானதும் ஆகும். தர அடிப்படை வேறுபாடுகள் அகவய நோக்கைச் சுட்டுவன. எனவே தமிழ் மற்றவற்றினின்றும் வேறுபட்டிருப்பது அதன் தனித்தன்மைய்ய உணர்த்தும் எனலாமே தவிர வேறுபாடுகள் உயர்வுக்கு அடிப்படை எனல் ஏற்கக் கூடியதல்ல. ஆனால் ஆய்வில் நாம் கூறும் இந்த நியாயங்கள் உணர்ச்சியும் கற்பனையும் மிகைநவிற்சியும் கொண்டு சுவை பயக்கும் இலக்கியங்களில் எதிர்பார்க்கக் கூடியதல்ல. எனவே தமிழின் தலைமை அதன் உயர்தனிச் செம்மொழி இயல்புகளைச் சுட்டுவதாகவே கொண்டு அமையவேண்டும். இங்கே நாம் உணரவேண்டிய உண்மை பாரதியின் கருத்தாக்கத்தில் புலனாகும் அவரது மொழிப்பற்றும் புலமையுமே.

இந்த இடத்தில் தமிழின் சிறப்பும் உயர்வும் தனித்தன்மையும் தலைமையும் பற்றிப் பாரதி பாடக் காரணம் என்ன என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று.

## கருவான காரணம்

தன் படைப்பின் கருப்பொருள் இன்னது எனத் தீர்மானிக்கும் முழு உரிமையும் படைப்பாளனுக்கு உண்டு. எனினும் அவனது கருப்பொருள் தேர்வின் காரணம் காணல் திறனாய்வில் சுவையும் பயனும் தருவது. இலக்கியத்தின் கருவியே – அது வாய்மொழியானாலும் வரிவடிவமானாலும் – மொழிதான். கருவியின் சிறப்பே கருப்பொருள் ஆவதைப் பிற கலைகளில் காணமுடியுமா? தூரிகையை வரைந்த ஓவியன், உளியைச் சிற்பமாக்கிய சிற்பி, கரணங்களையும் அதைக் காட்டும் உடலையும் போற்றும் பதத்திற்கு அபிநயிக்கும் ஆடற்கலைஞன் உண்டா? இசையின் மேன்மை போற்றும் பாடல் இருப்பது உண்மை. ஆனால் அங்கேயும் இசையின் அடிப்படைக் கருவியான ஒலியால் ஒலி போற்றப்படவில்லை. ஒலியின் விளைவை மொழி பாராட்டுகிறது. ஆனால் இலக்கியத்தில் கருவியே கருப்பொருளாகிறது, மொழியே பாடுபொருள் ஆகிறது ஏன்? சமூகச் சூழலே காரணம். மொழியின் ஆற்றலில் நம்பிக்கையின்றி, மொழியின் வளர்ச்சியில் அக்கறையின்றிப் பிற மொழிகளில் ஈடுபாடும் மதிப்பும் கொண்டு ஒரு மொழியினம் வாழ்க்கையில் மொழியினைப் பாடு பொருளாக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. பாரதி காலத்தில் நிலவிய சூழல் அதுதான். அதனால்தான் தமிழ் என்ற கருத்தாக்கம் அவர் படைப்பில் அந்த முறையில் அமைகிறது.

தமிழில் மட்டுமல்ல பிற திராவிட, இந்திய மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளில் சிலவற்றிலும் கூட இந்த நிலையைக் காணமுடிகிறது. மலையாளத்தில் எழுத்தச்சன் எழுத்து, மொழி, இலக்கியம் ஆகியவற்றில் சீர்திருத்தம் கொணர்கிறார். செறு சேரி, திதியாக்ஷர பிராசம் – அதாவது எதுகைக்காக வடமொழிக் கலப்பு – வேண்டாம் என்று அதை நீக்க வேண்டுகிறார். ஓட்டந் துள்ளலில் வல்ல குஞ்சன் நம்பியார், "படஜனங்களொட நடுவிலுள்ளொரு படயணிக்கிச் சேருவான் வடிவியன்னொரு சாரு கேரள பாஷதன்னே சிதம்வரு" என்று மொழிச் சிறப்பைப் பேசுகிறார். கடினமான மொழிப்பிரயோகம் வேண்டாம் என்பதை "வா பொளிச்சும் பொளிப்பிச்சும்" மொழிப் பயன்பாடு வேண்டாம் என 'உள்ளூர்' கூறுவது நடைஎளிமையை வற்புறுத்திய பாரதியின் கருத்தாக்கத்தை ஒத்தது. மிக வெளிப்படையாகத் தனித்தமிழ் வேண்டிய மறைமலை அடிகள் போலவே பச்ச மலயாள பிரஸ்தானம் ஒன்று கேரளத்தில் நடைபெற்றது. வெண்மணிக் கவிஞர்கள், வள்ளத்தோள், சங்கம்புழ ஆகியோர் படைப்புகளில் மொழி என்னும் கருத்தாக்கம் முதன்மை பெற்றது. "சன்னி கிருஷ்டாப்திதன் கெம்பீர ஷைலியும் சாக்ஷால் தமிழிடை மாதுரியமும் ஒன்று சோந்துள்ளொரு பாஷயானென்பாஷா மாத்தாடி கொள்க அபிமானமே" என்பர் வள்ளத்தோள்

தெலுங்கிலும் இலக்கியத்தில் மொழியும் நாடும் முதன்மை பெற்றன. தெலுங்கின் தொன்மை, தெலுங்கு வீரர்களின் பராக்கிரமங்கள், தெலுங்கு அரசர்களின் தியாகம், தெலுங்குதேசச் சிற்பம், இசை முதலியவற்றின் சிறப்பு, தெலுங்கு தேச நதிகள் புண்ணியத் தலங்கள் ஆகியவற்றின் மேன்மை இவையெல்லாம் பாரதியின் பாடல்களில் இடம்பெற்ற அதே பட்டியல் – பாடுபொருள் ஆயின. தன்னுணர்வுப் பாடல்களே மிகுதியாக எழுந்தன. விஸ்வநாதாவின் ஆந்திரப் பிரசஸ்தி, ஆந்திர பௌருஷமு, இராய்ப்ரோலுவின் ஆந்திரமாதா, கொடாலியின் ஹம்பிக்ஷேத்ரமு. இந்திர கண்டியின் தாட்சா ராமமு, புட்டபர்த்தி நாராயணாச்சார்யாவின் பெனுகொண்ட லக்ஷிமி, தும்மலாவின் ராஷ்ய் கானமு, ஜந்தியாலா பாப்பையா சாஸ்திரியின் உதயஸ்ரீ, ஜாஷீவாவின் அஸருபூஜ், அகண்ட கௌதமி ஆகியன தெலுங்கு மொழி, நாடு மக்களின் பெருமை பேசுவன. சங்கரம்பாடி சுந்தராச்சாரியார், "எங்கள் தெலுங்குத் தாய்க்கு எழிலார் மல்லிகை மாலை". என்று தெலுங்கு தேசத்தைப்பாடிய பாடல் இன்றும் தமிழ்நாட்டில் பாரதி பாடல்கள் போலவே பெருவழக்கில் பேசப்படுகிறது.

கன்னடத்தில் கி.பி.9ஆம் நூற்றாண்டிலேயே ஸ்ரீவிஜயா என்பவர் கவிராஜ மார்க்கம் இன்னதெனக் கூறக் கன்னட மொழியும் கன்னட மக்களும் பாடுபொருள் ஆயின. தொடர்ந்து பம்பா என்பவர், 'பறவை நதி ஆகியவற்றின் ஒலியைக் கேட்டால் என் கன்னட மண் நினைவுக்கு வரும்' என்று பாடுகிறார். மற்றொரு புலவர் 'கன்னடம் என்ற சொல்லைக் கேட்டால் என் இதயத் துடிப்பு அதிகமாகும். புளகாங்கிதம் ஏற்படும், என்று பாடுகிறார். இந்திய மொழி இலக்கிய வரலாற்றை நோக்கினால் குஜராத்தி, இந்தி, மராத்தி ஆகிய பல மொழிகளிலும் மொழி அடிப்படையிலான நாட்டுப்பற்றுணர்வு பாடுபொருளாக இருந்திருப்பதை அறிய முடிகிறது. ஐரோப்பியர் ஆட்சியில் மாநில மொழிகளின் நிலை பின்னடைந்ததன் பொதுவான விளைவே இந்த நாடளாவிய இலக்கிய நிலை.

பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் அந்தந்த மொழிகளின் முதன்மை நிலை பின்னடைந்தபோது அவற்றின் சிறப்பை உணர்த்தியும் பிறமொழிக் கலப்பின்றித் தூய்மையை நிலைநாட்ட வேண்டுமென வற்புறுத்தியும் இலக்கியப் படைப்புகள் எழுந்துள்ளமையை அந்தந்த மொழி இலக்கியங்கள் பற்றிப் பேசும் நூல்களிலிருந்து அறிய முடிகிறது.

இதில் குறிப்பிடத் தகுந்த செய்தி என்னவெனில் இருபதாம் நூற்றாண்டில் வடமொழிக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளமைதான். 'லஸது ஸமஸ்திருதம் கிருஹே கிருஹே' (வீடுதோறும் வெகுகாலம் சமஸ்கிருதம் மீண்டும் பிரகாசிக்கவேண்டும்) என்று மொழியைக் கருப்பொருளாக்கிய படைப்புகள் எழுகின்றன.

எனவே பாரதியாரின் பாடல்களிலும் சரி பிறருடைய/பிறமொழிப் படைப்புக்களிலும் சரி மொழி என்ற கருத்தாக்கம், சமூகச்சூழல்

காரணமாகவே இடம் பெறுகிறது. பாரதியாரின் தமிழ் பற்றிய கருத்தாக்கத்தில் குறிப்பிடத்தக்கதும் பிற புலவர்களின் மொழிக் கருத்தாக்கத்தில் காண இயலாததுமான ஒரு தனித்தன்மை பாரதியின் தேசிய உணர்வு. தமிழைத் தேசியத்தின் ஒரு கூறாகவே பாடுகிறார். பாரதிதாசனிடமோ நாமக்கல்லாரிடமோ சுந்தரம் பிள்ளையிடமோ நாம் காணாத தன்மை அது. தமிழரான பாரதியின் பாடல் தொகுப்பில் தேசிய கீதங்கள் என்ற பகுதியில் நூற்றுக்கணக்கான பாடல்களுக்கிடையில் ஆறே பாடல்கள் தமிழ் பற்றியன. தமிழக எல்லை கூறுங்கால் வடவேங்கடம் தென்குமரி எனத் தொல்காப்பிய எல்லையையே பேசுகிறார். "நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி எல்லை – வட மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு" என்கிறார். 'எங்கள் நாடு' என்ற தலைப்பில் பாரத நாட்டையே பாடுகிறார். வாழிய செந்தமிழ் எனத் தொடங்குபவர், வாழ்க நற்றமிழ் எனத் தொடர்ந்து வாழிய பாரத மணித்திருநாடு என்று அவரது மொழிபற்றிய கருத்தாக்கத்தில் பாராட்டிற்குரியவொரு பண்பு தமிழின் தலைமை கூறும் பொழுது பிறவற்றை இழித்தோ பழித்தோ பேசாமை. பேச்சு வழக்கில் பிற திராவிட மொழிகளில், 'தெலுங்கு தேனு, கன்னட கஸ்தூரி அரவம் அத்வானு' என்பதுண்டு. ஒரே ஒரு இடத்தில் பிற மொழிகளின் நிலையை ஒப்பிடுகிறார். அப்போதும் திசைமொழிகள் வழக்கிறந்தன என்று வருத்தமே படுகிறார்.

சாதிக்கு எதிரான பாரதி பேசிய ஒரே சாதி தமிழ்ச் சாதி. எனவே அவரது மொழிபற்றிய கருத்தாக்கத்தின் முதன்மைச் சிறப்பாக இதைச் சுட்டலாம். மொழி அடிப்படைச் சாதியமே அவரால் பேசப்பட்ட ஒரே பிரிவு. இந்திய இனத்தின் ஒரு பிரிவு அது. மொழி பற்றிய அவரது கருத்தாக்கத்தில் அந்த மொழி பேசும் இனத்தவரால் மொழிநிலை என்னவாகிறது? தமிழச்சாதியின் செயல்பாடுகள் தமிழைப் பாதிக்கும் விதம் யாது? என்பதும் இடம்பெறுகிறது. இது அவரது சிந்தனையைக் கருத்தளவில் நில்லாமல் செயலாக்கச் சக்தி (Kinetic energy) உடையதாக ஆக்குகிறது.

## தமிழச்சாதியின் தன்மை

'இருதலைக் கொள்ளியிடையே' என்ற தலைப்பில் அவர் எழுதிய பாடல் 'தமிழச் சாதி' என்ற தலைப்பில், பாடலினுள் அவர் பயன்படுத்திய சொல்லாட்சியைப் பயன்படுத்தித் தொகுப்பாளர் வழங்கிய தலைப்பில் – தமிழரின் தன்மைகள், செயற்பாடுகள், மொழிகுறித்த அவர்கள் மனநிலை, அதன் விளைவால் மொழி பாதிக்கப்படும் வகை, மொழிநிலை உயர வழிகள் ஆகியன வரிசையாகப் பேசப்படுகின்றன.

தமிழைப் பேசும்போதெல்லாம் உயர்வாகவும் தமிழரைப் பேசும்போது தாழ்வாகவும் பேசுகிறார். மொழிப் பற்றால் விளைந்த ஆதங்க உணர்வே

அவ்வாறு வெளிப்படுகிறது. தமிழரின் உயர்வுக்கும் தமிழின் முன்னேற்றத்திற்கும் தடையாக இருக்கும் தலையாய பண்பு கருத்துத் தெளிவின்மை எனக் கண்டறிந்து மொழிகிறார். தமிழ்நாட்டில் அறிவுத் தலைமை தமக்கெனக் கொண்டோர் இருவகையாக இருப்பதாகவும் ஒருசாரார் மேலை நாகரிகமே மேலானது என்றும் மற்றொரு சாரார் தொன்மையான பண்பாடே உயர்ந்தது என்றும் பேசி வருவதாகவும் கூறி," இங்கிவ் விருதலைக் கொள்ளியின் இடையே நம்மவர் எப்படி உய்வர்?" என்று கேட்கிறார். மொழிக்கும் தமக்கும் எது முன்னேற்றம் என முடிவெடுக்க இயலாத தடுமாற்றம் தீர்ந்தாலே தமிழும் தமிழரும் உயரலாம் என்ற எண்ணம் இங்கே தெளிவாகிறது. தமிழர் தெளிவு பெறாவிடில் தமிழுக்கு அழிவு என்ற நடப்பியல் உண்மை புலனாகிறது.

> "விதியே விதியே தமிழச் சாதியை
> என்செய நினைத்தாய் எனக்குரையாயோ?
> விதியே தமிழச் சாதியை எவ்வகை
> விதித்தாய் என்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்".

என்று தன் வேதனையை வெளியிடுகிறார். (தமிழச்சாதி :5–6; 17–18)

## தமிழின் வருங்காலம்

எதிர்காலத் தமிழ் எளிமையும் தெளிவும் சான்றதாதல் வேண்டும் என்பது தமிழின் நடை பற்றிய அவர் கருத்தாக்கம். அந்த எளிமையும் பழம்பெருமை பேசுதற்காக அல்லாமல் புதியன நுழைய இடம் தருவதற்காக அமையவேண்டும் என்பார். 'பழையன கழிதலும் புதியன புகுதலும்'. கருத்திற்கு மட்டுமின்றி நடைக்கும் உரியதாதலின்', சொல் புதிது சுவை புதிது நடை புதிது வளம் புதிது' எனப் புதுமைகள் தமிழில் பொருந்தவேண்டும் என்று விரும்புவார். இதன் அடிப்படைக் கருத்து, தமிழின் அறிவுக்கண்கள் தகஅமைவுதிறன் (Accomodation Power) பெற்றிருக்கவேண்டும் என்பது. டார்வினின் கூர்தலறக் கொள்கை. மொழியும் வல்லதே வாழும்; தக அமைவு திறனுடையதே வெல்லும் என்ற கருத்துக்கள் உயிர்களுக்கு மட்டுமல்ல; மொழிக்கும் பொருந்தும். வாழ்கின்ற, வளர்கின்ற, உயிருடைய மொழிக்கு மொழியின் உயிர் வளர்ச்சிக்கு – அது தேவையல்லவா? எனவே

> "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
> தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
> இறவாத புகழுடைய புதுநூல்கள்
> தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

என்கிறார். (தமிழ் :3:1–4) அத்துடன் கிணற்றுத் தவளையாக நாட்டு வளப்பம் அறியாமல் முடங்கிக் கிடப்பதை விடுத்து உலக அரங்கில் தமிழ் ஒலிக்கவேண்டும் என்பதை,

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை

திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்".

என்றும் (தமிழ் :3:5–8) தெரிவிக்கிறார். மொழிபெயர்ப்பு, புதுநூல்கள், வெளிநாட்டாரின் மதிப்பு ஆகிய மூன்றும் மொழிவளர்ச்சிக்கு மிக முக்கியமானவை. தமிழின் இலக்கியம், இலக்கணம், திறனாய்வு ஆகியவை குறுகிய சிந்தனை வட்டத்தில் சுழலாமல் விரிந்து பரந்து அமைய மொழிபெயர்ப்புகள் தேவை. தேங்கிக் கிடக்காமல் தொடர்ந்து வளரப் புதுநூல்கள் வேண்டும். சான்றோன் மகன் என்பது தனக்கு மட்டும் தெரிந்தால் போதாது; உலகமும் உணரவேண்டும் என்பதால் சான்றோன் எனக் கேட்ட தாய் ஈன்ற பொழுதினும் பெரிதுவப்பாள் என்று வள்ளுவர் கூறுவார். அதேபோல் தமிழின் பெருமையை உலகறிய வேண்டும். இன்று ஆங்கில மொழியில் வெளியாகியுள்ள கலைக்களஞ்சியங்கள் பலவற்றில் இந்திய இலக்கியம் பற்றிய பகுதியில் வடமொழிபற்றி விரிவான விளக்கமும் தென்னிந்திய மொழிகள் அனைத்தும் பற்றி ஒரு தொகுப்புரையும் அதில் தமிழ் பற்றி ஓரிரு பத்திகளுமே வெளியாகியிருப்பதும் இந்திய வரலாற்று நூல்கள் பலவற்றில் தமிழக வரலாறு சுருக்கமாகப் பேசப்படுவதும் சிலவற்றில் மொகலாயர் காலம் வரை தமிழகம் பற்றிய பேச்சே இல்லாமல் இருப்பதும் எதனால்? தென்னிந்தியக் கிராமத்துத் தெய்வங்கள் பற்றிப் பேசும் ஒயிட்ஹெட் (Rev. Father Whitehead: The village Gods of South India) பெண்களின் நிலைபற்றிப் பேசும் அல்டேகர் (Altehar: Status of women in India) ஆகியோர் சங்க இலக்கியங்கள் பற்றி அறிந்திருந்தால் பல முக்கியமான முடிவுகளைச் சொல்லியிருக்க முடியும். எனவே தமிழின் எதிர்காலம் வளம் குறித்த பாரதியின் கருத்தாக்கம் மிக முக்கியமானது. இருதலைக் கொள்ளியின் உள்எறும்பாக "நன்மையும் அறிவும் எத்திசைத்தெனினும் யாவரே காட்டினும் மற்றவை தழுவி" வாழவேண்டும் என (தமிழச்சாதி: 119–121) அறிவுரை வழங்குகிறார்.

## வளத்திற்கான வழிகாட்டல்

இருப்பதை மட்டும் அன்றி இருக்கவேண்டிய முறையையும் அதற்கான வழியையும் கூறுவது பாரதியின் கருத்தாக்கச் சிறப்பு. இந்த இடத்தில் அவர் சொற்களில் புதைந்துள்ள பொருள்நயம், குறிப்பிடத்தகுந்தது. தமிழச் சாதியின் விதி எத்தகையதாகுமோ, என்று புலம்புவர், "அழியாக் கடலோ, அணிமலர்த் தடமோ, வானுறு மீனோ, மாளிகை விளக்கோ, கற்பகத் தருவோ, காட்டிடை மரமோ, விதியே தமிழச் சாதியை எவ்வகை விதித்தாய்" என்று கேட்குமிடத்தில் தமிழ் எப்படி இருக்கவேண்டும் என்ற பாரதியின் உட்கிடக்கையை உணர்த்துவனவாக அவரது உருவகங்கள் அமைகின்றன.

அணிமலர்த் தடம் சிறியது; ஓரிடத்தில் அமைந்தது. அழியாக் கடல் பெரியது; பேரிடம் தழுவியது. காட்டிடை மரம் அச்சம் தருவது; பயனற்றுப் பூத்தும் கனிந்தும் நிற்பது (மரங்கள் மழைக்கு உதவுமென்றாலும் மரப் பொருட்கள் நாட்டவர்க்கு உதவுவதில்லை என்பதால்) கற்பகத் தருவோ மகிழ்ச்சி தருவது; வேண்டியதைத் தருவது; மாளிகை விளக்கு சிலர்காண, சிலர் அறியச் சிலர்க்கு மட்டும் அதிலும் உயர்மட்டத்தவர்க்கு மட்டும் பயன்படுவது; வானுறு மீன் பலர்காண, பலரறியப் பலர்க்கும் வேற்றுமை இன்றிப் பயன்படுவது. தமிழ் வருங்காலத்தில் மாளிகை விளக்காக இல்லாமல் வானுறு மீனாகப் பலருக்கும் பயன்படவேண்டும். காந்தியடிகள் கூறுவதுபோல இலக்கியமும் கல்வியும் ஏற்றம் இறைப்பவனுக்கும் உரியதாக வேண்டும். கடையனுக்கும் கடைத்தேற்றம் காசில் மட்டுமின்றிக் கல்வியிலும் கருத்து வளத்திலும் வேண்டுமெனில் மொழியின் பயன்பாடு மொழி பேசும் அனைவர்க்கும் உரித்தாக வேண்டும். அதே போல் காட்டிடை மரமாக அன்றிக் கற்பகத் தருவாகச் சொல் வளம், கருத்து வளம் நிறைந்து முத்தமிழொடு கலைத்தமிழும் அறிவியல் தமிழும் இணைந்து கற்பவர் விழைவதெல்லாம் கற்பிக்கும் ஆற்றலைத் தமிழ் பெறவேண்டும். அணிமலர்த் தடமாக இல்லாமல் அழியாக் கடலாகத் தமிழக எல்லை தாண்டிப் பரவி உயர வேண்டும். "எங்க தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது" என்று பேசிக் கொண்டிருக்காமல் எங்களுக்கு ஒரு சாட்டிலைட் இருக்கிறது என்று சொல்ல முடிய வேண்டும். இந்தக் கருத்தாக்கம் பாரதியின் மொழி பற்றிய சிந்தனையின் முத்தாய்ப்பு.

## ஒப்பியல் வாய்ப்புக்கள்

அவர் காலத்தில் அவரைப் போன்றே தமிழ் என்னும் கருத்தாக்கத்தைப் போற்றிப் பாடியவர் அவரது தாசன். எனினும் இருவரின் கருத்தாக்கங்களிலும் அடிப்படை வேறுபாடுகளும் உண்டு. பாரதியின் கருத்தாக்கம் மரபு வழி வளர்ச்சியான புதுமை, ஆன்மீகம், தேசியம், தெய்வீகம், குறிக்கோள் நிலை ஆகியன கொண்டது. தாசனுடைய கருத்தாக்கம் மரபை மாற்றும் புதுமை, பகுத்தறிவு வாதம், திராவிடம், மானுடம், நடப்பியல் ஆகியன கொண்டது. தாசனின் கருத்தாக்கத்தில் பகுத்தறிவு இயக்கச் சார்பு உண்டு. பாரதியின் கருத்தாக்கத்தில் அவரால் முற்றிலும் வெளிவரமுடியாத சநாதனச் சார்பு உண்டு.

இதேபோல் நாமக்கல்லார், கவிமணி, சுரதா இவர்கள் வழி வந்த இன்றைய புதுக்கவிஞர்களின் படைப்புக்களில் தமிழ் என்ற கருத்தாக்கம் எவ்வாறு அமைந்துள்ளது? பாரதியிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? தமிழ் இலக்கியத்தில் அன்று முதல் இன்று வரை தமிழ் என்ற கருத்தாக்கத்தின் வரலாறு யாது? தமிழ் பற்றி நேரடியாகப் பாடிய பாடல்கள் தவிர மற்றவற்றிலிருந்தும் பாரதியின் தமிழ் பற்றிய கருத்தாக்கமாக நாம் உயர்த்துரைக்க கூடியவை என்ன? – இவ்வாறு நிறைய ஆராய வழியுண்டு.

# 3

# கவிதை என்ற கருத்தாக்கம்

துரை.சீனிச்சாமி

சொல்லுக்கும் பொருளுக்குமான தொடர்பு இடுகுறித்தன்மை கொண்டதுதான். ஆனால், மனிதனுடைய அறிவும் உணர்வும் முனைப்புற்று வளர்ந்து வரும் வரலாற்றனுபவத்தால், சொற்கள், மனித அனுபவங்கள் சார்ந்த கருத்துக்களின் குறியீடுகளாக மாறிவிடுகின்றன. ஒரு மொழிபேசும் மக்களின் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், சமூகத்தரநிலைகள், மூர்க்கங்கள், வேட்கைகள் – அனைத்தின் ஒலிக்கூடுகளாகச் சொற்கள் மாறிவிடுகின்றன. கால ஓட்டத்தில், இக்கூடுகளுக்குள் சிக்கியவர்களாகவும் மனிதர்கள் மாறிவிடநேரிடுகிறது. கூடுகள் சிறைகளாக மாறிவரும் நிலையில் மாறியதை உணரும் நிலையில் சொற்களின் பொருண்மை வெடித்துக் கிளம்புகிறது. இம்மீறல், சமூக உணர்வுமிக்க கவிஞர்களிடம் – மொழியையே தங்களின் மூச்சொலியாகக் கொண்ட கவிஞர்களிடம் – ஒரு புதிய மாறுதலின் முளைவிடலாக அமைந்துவிடுகிறது. சி.சுப்பிரமணியபாரதியின் தமிழ்க்கவிதைகளில் சொல்லுக்கும் பொருளுக்குமான தொடர்பு, கூட்டைவிட்டு வெளியேறலாகவும் வெளியேறலின் சிராய்ப்புத் துகள்களாகவும் காணப்படுகிறது. 'கவிதை' என்ற சொல்லின் பொருள் பாரதியில் பெறும் கருத்தாக்கம் குறித்து இக்கட்டுரையில் சில குறிப்புக்கள் முன் வைக்கப் பெற்றுள்ளன.

பாரதியின் கவிதைகளில் கவிதை என்ற சொல் கிட்டத்தட்ட 45 இடங்களில் இடம் பெற்றுள்ளது. எவ்வித விவரிப்புமின்றி பொதுவாக, கவிதை(கவி) என்று சில இடங்களில் குறிக்கப் பெற்றுள்ளது.[1] தமிழ்ப் பல்கலைக்கழகம் (தஞ்சாவூர், 1987) வெளியிட்டுள்ள 'பாரதி பாடல்கள்' என்ற கவிதைத் தொகுப்பு நூல்முறைப்படி எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன. (20, 2 : 1; 24 : 1; 101, 12 : 1; 102, 8:9; 151, 1 : 1; 261, 1 : 1)

சான்றுகள்

"நின்னைக் கவியால் நிகழ்த்துநல்நா" (1 : 56)
"கவிதையும் அருஞ்சுவைக்கான நூலும்" (20, 1 : 1)

இதுபோன்ற வேறு சில குறிப்புகளும் உள்ளன.[2] இவை, அவ்வளவாக முக்கியத்துவமுடையன அல்ல.

இனி கவிதை பற்றிய கருத்தாக்கங்களில் முக்கியமான முதல்கூறு; கவிதையைப் புலன் அனுபவமாக வெளிப்படுத்தியிருத்தல்.

1. "தீஞ்சொற் கவிதையஞ் சோலை" (56, 3:1)
2. "கள்ளைக் கடலமுதை – நிகர்
கண்டதொர் பூந்தமிழ்க்கவி சொலவே" (71, 3:3)
3. "கொள்ளை இன்பங் குலவு கவிதை" (89, 1 : 2)
4. "கவிதைக் கனிபிழிந்த சாற்றினிலே" (91,362)
5. "பொன்னனைய கவிதை" (131, 6:2)
6. "..........அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர்நாடு" (199, 1:2)

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களிலிருந்து வாய்ச்சுவை, உடல்தொடும் உணர்வு, காட்சி உணர்வு ஆகிய புலன் அனுபவங்களின் இனிமையாகக் கவிதை காட்டப்பட்டிருப்பதை அறியலாம். கவிதையின் படிமம் புலனுணர்வுகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

கவிதை பற்றிய மேலும் பல படிமங்கள் பாரதியிடம் காணப்படுகின்றன. அவை வருமாறு.

1. கவிதை ஒரு காதலி

'............ கவிதையாம் மணிப்பெயர்க் காதலி' (47, கவிதாதேவி,1–171)

2. கவிதை ஒரு மனைவி

'வாழ்க மனைவியாங் கவிதைத்தலைவி'.
(207, மனைத்தலைவிக்கு வாழ்த்து, 1)

3. கவிதை ஒரு வெறி

"முன்னிக்கவிதை வெறி மூண்டே நனவழிய' (91, குயில், 11:2)

4. கவிதை ஒரு தீ

'தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே'
(1:22, விநாயகர் நான்மணிமாலை, 3:4)

"இளையும் வந்தாள் கவிதை வந்தாள்
இரவி வந்தானே – இந்நேரம்
விளையும் எங்கள் தீயினாலே
மேன்மையுற்றோமே" (137, தீ, 15)

5. கவிதை ஓர் இளமை உணர்வு

"ஆற்றங்கரைதனிலே – தனி
ஆனதோர் மண்டப மீதினிலே தென்றற்

காற்றை நுகர்ந்திருந்தேன் – அங்கு
கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள்"
(154, மூன்று காதல், 3:1–2)

இனி, கவிதை எப்படிப்பட்டது என்பது பற்றிய சில குறிப்புக்களையும் பாரதி பாடல்களில் காணலாம்.

1. கவிதை இனிமையானது

"கல்வியில் மிகச்சிறந்தோன் – அவன்
கவிதையிலினிமை யோர் கணக்கில்லை"
(99, கண்ணன் என் தந்தை, 2:2)

2. கவிதை நேசமிக்கது

"............. நல்ல
நேசக் கவிதை சொல்லும் பறவை"
(108, கண்ணன் என் காதலன், 4:2)

3. கவிதை உள்ளத்தின் ஒளி

"உள்ளத்திலுண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின் ........................"
(128, தமிழ், 4:1–2)

4. கவிதை மெய்ப்பொருள் உடையது

"................ கவிதையில்
மெய்ப்பொருள் ஆய்வதில் மிஞ்சிய விழைவும்"
(102, கண்ணன் என் சீடன், 8–9)

5. கவிதை சக்தியாவது

"சக்தி என்று நேரமெல்லாம்
தமிழ்க்கவிதை பாடி"
(156, உப்பளம், முத்துமாரி, 4:1)

6. கவிதை தெய்வீகமானது

"கல்வியே தொழிலாகக் கொண்டாய்
கவிதையே தெய்வமாக"
(125, எட்டயபுரம் ..........3:1–2)

"தெய்வீகச் சாகுந்தல மெனும் நாடகம்
செய்த தெவர் கவிதை"
(214, பாரதமாதா, 12)

7. கவிதை ஈனத்துக் கெதிரானது

"ஆடுதல்பாடுதல் சித்திரம் – கவி
ஆதியினைய கலைகளில் – உள்ளம்
ஈடுபட்டென்று நடப்பவர் – பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவர்"
(103, கண்ணன் என் சற்குரு, 11:1–2)

8. கவிதை மகிழ்ச்சியின் வெளிப்பாடு

"பாட்டுக்கலந்திடவே – அங்கே ஒரு
பத்தினிப் பெண்வேணும் – எங்கள்
கூட்டுக் களியினிலே கவிதைகள்
கொண்டு தரவேணும்."
(141, காணிநிலம், 3:1–2)

9. கவிதை கவிஞனின் தொழிலாவது

"நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்"
(122, விநாயகர் நான்மணிமாலை, 3:4)

10. பண்–கற்பனை கலந்தது கவிதை

"பண்ணிலின்பமும் கற்பனைவிந்தையும்
ஊட்டி எங்கும் உவகை பெருகிட
ஓங்கு மின்கவி ஏதெனும் வேறொன்றே"
(151, பராசக்தி, 2:3–4)

அடுத்து, கவிதை மானிட உணர்வாலும் பராசக்தி எனும் தெய்வீக சக்தியாலும் செய்யப்படுவது என்ற கருத்து நிலையையும் பாரதி கொண்டுள்ளார்.

1. கவிதை : பராசக்தி செய்வது

'செய்யுங் கவிதை பராசக்தியாலே செய்யப்படுங்காண்'
(122, விநாயகர் நான்மணிமாலை, 26:1)

"கவிதை ..............................
இச்செயல்கள் மகாசக்தி அருள்புரிக".
(வசனகவிதைகள் –2, சக்தி, 2:14)

2. கவிதை : வாணி செய்வது

"............... புகழ்சேர்வாணியுமென்
னுள்ளே நின்று தீங்கவிதை
பெய்வாள்......................"
(122, விநாயகர் நான்மணிமாலை, 31:3–4)

3. கவிதை : காதலால் வளரும்

"காதல் கவிதைப்பயிரை வளர்க்கும்"
(171, அந்திப்பொழுது, 4:2)

கவிதை யாருக்காக என்ற ஒரு கேள்விக்குக் கீழ்க்கண்ட ஒரு பதிலும் பாரதியிடம் இருக்கிறது.

கவிதை : பராசக்திக்கு

'..................... பராசக்தி ஏழையேன்
கவிதையாவும் தனக்கெனக் கேட்கின்றாள்'.
(151, பராசக்தி, 3:4)

இவ்வாறாகக் கவிதைப் படிமம், கவிதைப்பண்பு, கவிதைக்காரணி, கவிதை நோக்கு என்ற சில கூறுகள் பற்றிய கருத்துக்கள் கவிதை என்ற சொல்வழி அறியக் கிடக்கின்றன. பாரதி, கவிதை பற்றிய தனது கலையின் தன்மையையும் தானே வரலாற்று ரீதியாக விளக்கிக் கூறியுள்ளார். இது, வரைவிலக்கணப்படுத்தும் முறையில் உள்ளது.

கவிதை : புதிதானது

"சுவைபுதிது பொருள் புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மகா கவிதை.............................."
(124, ஸ்ரீமான் எட்டயபுரம் ..................... 3:3–4)

'கவிதை' என்ற சொல் பாரதியால் ஆளப்பட்டிருக்கும் பொருள் நிலைகளிலிருந்து மேற்கண்ட கருத்துக்கூறுகள் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. இனி, இவற்றின் துணை கொண்டு விரிவாகப்படர்ந்திருக்கும் கவிதைக் கருத்தாக்கம் குறித்துக் காணலாம்.

மேற்கண்ட பொருள் நிலைகளைக் கீழ்க்கண்டவாறு மூன்று அடுக்கு நிலைகளாகப் பகுத்துக் கொண்டு பார்த்தால் பாரதியின் கவிதைக் கருத்தாக்கம் பற்றிய அடிப்படையான கோட்பாட்டை அறிந்து கொள்ளலாம்.

1. புலன் அனுபவ அடுக்கு

காட்சி – தொடல் – சுவை – வெறி – தீ – இளமை – காதலி – பண், கூத்து, கற்பனை – காதலால் உருவாவது.

2. சமூக சமத்துவ உணர்வடுக்கு

இனிமை – நேசம் – மகிழ்ச்சி – ஈனத்துக்கெதிர் – தொழில்

3. சக்தி அடுக்கு

உள்ளத்து ஒளி – மெய்ப்பொருள் – தீ – பராசக்தியால் – வாணியால் – மனைவி – தெய்வீகம் – பராசக்திக்கு,

இம்மூன்று அடுக்குநிலைகளைக் கொண்டது பாரதியின் கவிதைக் கருத்தாக்கம். எனவேதான், இது, "சோதிமிக்க நவ கவிதை; எந்நாளும் அழியாத மகாகவிதை" ஆகிறது. இவ்வடுக்குநிலை குறித்துச் சற்று விரிவாகக் காணலாம். அடுக்குநிலைச் செறிவில்– கவிதை பற்றிய சொற்கள் சிலவற்றின் பொருள், விரிவுடன் படர்ந்திருக்கிறது. இவ்விரிவுப்படர்ச்சியுடன் அடுக்குநிலைவழி கவிதைக் கருத்தாக்கத்தை அடையாளம் காணவேண்டும். விரிந்து படர்ந்து செறிவு நிலை பெற்ற கவிதைக் கருத்தாக்கத்தின் தளத்திலிருந்து வெளிப்பட்ட பொருள்களே கவிதைச் சொற் பொருள்.

## புலன் அடுக்கு

புலன் அனுபவங்களாக மேலே எடுத்துக்காட்டப் பெற்ற கவிதைச் சொற்பொருள்கள் அனைத்தையும் ஒன்றுபடுத்திப் பார்க்கவேண்டும். இளமைக் காலத்துத் தன்னுணர்ச்சிப்பாங்கு, இயற்கையில் ஈடுபடல், காதல் உணர்ச்சி ஆகியவற்றின் ஒருமிப்பு வீறுடன் வெளிப்பட்டிருப்பதே புலன் அனுபவத்தின் சாரம். கவிஞன் தன்னனுபவத்தை வெளிப்படுத்துகிறான். தன் வேட்கையின் மிகுதியை, களிப்பின் ஏற்றத்தை வெறி என்கிறான். இவ்வெறியே தீயாகப் பற்றுகிறது. 1909இல் பாரதி எழுதிய கவிதையில் இளமையின் காதல் அனுபவம்போல் இயற்கை ஈடுபாடு போல – கவிதை இயங்கியது அல்லது இவையே கவிதையாகின என்று கூறுகிறான். வறுமை சூழ்ந்த பிறகு இந்த உணர்வு எங்கோ ஓடிவிட்டது. வாழ்க்கையின் வறுமை, காதலின் இழப்பு ஆகிய இரண்டு நிகழ்ச்சிகள் பாரதி வாழ்வின் உணர்ச்சிகரமானவை.

வாராய் கவிதையாம் மணிப்பெயர்க்காதலி
பன்னாள் பன்மதியாண்டு பல கழிந்தன
நின்னருள் வதனம் நான் நேருறக் கண்டே (47, 1–3)

இங்கே வதனம் என்பது இளமையில் பொங்கிய வீறுணர்வு என்றாலும் காதலின் மயக்கமும் இதனுள் கலந்தே கிடக்கிறது. கவிதைக்காதலி குயிலாகவும் விளிக்கப்படுகிறாள்.

"........................ அணியியற்குயிலே
நின்முக நகையும் நின்விழியாழ்மையும்
நின்னுதற் தெளிவும் நின்சொல் இனிமையும்
நின் பரிசத்தே நிகழ்ந்திடும் புளகமும்

ஈதெலாம் பின்னரும் எண்ணிடைத் தோன்றப்
பின்னுமோர் முறையான் பெருமையோய் நின்னைச்
சரணென அடைந்தேன் ......................" (47, 139–145)

"அன்றெனக் கிருந்த இளைமையு(ம்) அகத்திடைத்
தெளிவுமிந் நாட்களிற் செத்தன அன்றோ
இளமையின் மானுட ரெனெவருந்தேவரே" (47,165–67)

கவிதைவெறி, கன்னிக் கவிதை, தீஞ்சொற்கவிதை, கடலமுது, கவிதைக்கனி, பண்ணிலின்பமும் கற்பனைவிந்தையும், காதல் வளர்க்கும் பயிர், காதலியிடம் பெறும் அனுபவம் – எனத் தீயைப் போன்று எழும் கவிதை என்பது பாரதியின் இளமைக்காலத்து அற்புதமனோநிலையின் தன்னுணர்ச்சி வெளிப்பாடாக உள்ளது எனலாம். இவற்றின் ஊடோடும் அனுபவம் புலன் அனுபவமே. புலன் அனுபவங்களின் வீறு மிக்க அற்புத உணர்வாகக் கவிதையின் சொற்பொருள் வலுவான ஓர் அடுக்குநிலை பெற்றுள்ளது. பாரதியின் கவித்துவப் படைப்பாக்கத்தில் புலன் அனுபவ அற்புத உணர்வு வெளிப்பாடு, நவீன காலத்தின் தனிநபர்க்குரிய மிக முக்கியமான சுதந்திரமான–திறந்த உணர்வனுபவமாகும். இயற்கைபற்றிய பரவசக் கவிதைகளில் இவ்வெளிப்பாடு படர்ந்து விரிவு பெற்றுள்ளது.

## *சில சான்றுகள்*

1. "திங்களைக் கண்டவுடன் – கடல்
திரையினைக் காற்றினைக் கேட்டவுடன்
கங்குலைப்பார்த்தவுடன் – கடல்
காலையிலிரவியைத் தொழுதவுடன்
பொங்குவீர் அமிழ்தெனவே – அந்தப்
புதுமையிலே துயர் மறந்திருப்பேன்"
(202, சரஸ்வதிஸ்தோத்திரம், 1 : 2–4)

2. எல்லையில்லாததோர் வானக்கடலிடை
வெண்ணிலாவே – விழிக்
கின்பமளிப்பதோர் தீ வென்றிலகுவை
வெண்ணிலாவே
சொல்லையும் கள்ளையும் நெஞ்சையும்
சேர்ந்திங்கு வெண்ணிலாவே – நின்றன்
சோதி மயக்கும் வகையதுதானென் சொல்
வெண்ணிலாவே
(84, வெண்ணிலா, 1–4)

இவ்விரண்டாம் பாடலில் வரும் சொல், கள், நெஞ்சு ஆகியவற்றினூடாகப் பொங்கி வந்திருப்பதே கவிதை. இதுவே புலனனுபவ

அற்புதக்கவிதை. (இதனையே, பாரதிதாசன் "கண்ணுளே நெஞ்சை வைத்துக் கவிதையைக் காணச் சொல்லும்" என்பார்).

பாரதியின் கவிதைகளைக் காலவரிசைப்படி நோக்கினால் 1912 வரை இழப்புணர்வு, தனிமை நாட்டம், காதல் வேட்கை, உள்முகத் தேடல், சுதந்திர வேட்கை, – ஆகிய உணர்வோட்டங்கள் உள்ளீடுகளாக இருப்பதைக் காணலாம். தாயின் அன்பு போன்ற பாதுகாப்பான எல்லாம் மேன்மையாக இருந்ததான ஒரு பழமையான வாழ்வு நோக்கிய பார்வையும், தன் அகநிலைக்குள்ளே தனது புலன்களின் வழியிலான இன்ப துன்பங்களில் கலந்திருத்தல் என்ற நிலையும் – ஆக மேற்குறித்த இவை அனைத்தும் ஒன்றில் ஒன்றாய்ப் பதிவுபெற்றிருப்பதைக் காணலாம். இதன் முழுப்பரிமாணத்தைக் குயில்பாட்டில் காணலாம். எனவே, இப்பதிவுகளின் கவிதைப் படிமமாக புலன் அனுபவங்கள் சார்ந்த காதலியாக உருக் கொள்கிறது. வெறி, தீ, இளமை, சுவை, தொடல், காட்சி என யாவும் இப்படிமத்தின் வண்ணங்களாகி அமைகின்றன. இக்கவித்துவ அடுக்கு அற்புதத்தன்மை கொண்டது என்பதில் ஐயமில்லை.

இது, பாரதி என்ற தனி நபரின் திறந்த உணர்வு வெளியீட்டுத் தளத்தில், தனது காலத்தின் தாக்கத்திற்கும் தனது வேட்கை அனுபவங்களுக்கும் இடையிலான ஒரு அற்புத மொழியாகக் கவிதையின் பொருண்மை உருவாகி நின்ற நிலையாகும். இதன் அடிச்சக்தி தனி நபரின் வேட்கையும் இழப்பும் பரவசமுமேயாகும். இதன் சுற்றில் முளைத்து உருவான இன்னொரு அடுக்கு சமூக சமத்துவ உணர்வாகும்.

## சமத்துவ உணர்வடுக்கு

இழப்பும் ஏக்கமும் நிறைந்த பாரதியின் இளமை அனுவங்கள் வறுமை புகுந்த குடும்ப அனுபவங்கள் அனைத்தும் பாரதியிடம் பிறரிடத்துக் கொள்ளும் நேசமாகவும், மகிழ்ச்சியானதாகவும், உள்ளத்தின் ஒளியாகவும், கீழ்மைக்கு எதிரானதாகவும் ஆக விரிகின்றன. கவிதைக்கு இனிமை, நேசம், உள்ளத்து ஒளி, மகிழ்ச்சி, என்றெல்லாம் பொருள் பொதிந்து இருப்பதற்கான காரணம் இதுதான். மற்றும் கவிதை ஈனத்துக் கெதிரானது, கலைஞுனுக்குரிய தொழில் என்று அதன் பொருள் விரிவு பெறும் நிலையில் கவிஞன் சமூக சமத்துவ உணர்வுடையவனாக இருப்பவன் என்ற பரிமாணம் பொருண்மைக்கு வருகிறது. எனவேதான், பாரதியின் அத்வைதம், கூளத்தை மலத்தை வணங்கவேண்டும் என்று கூறும் அளவிற்கு வேறுபாடற்ற நிலைக்குச் செல்கிறது. இது, உலகவாழ்வை ஏற்று உலகப் பொருள்கள் அனைத்திலும் வேற்றுமையற்ற நிலையைக் காணும் போக்காகும். கவிதையைத் தீ எனக் கூறும் பாரதி, தீ என்பதன் பொருளை முதல் நிலையில் வெறும்புலன் அனுபவம் என்ற நிலையில் உள்ளத்தின் கனல் என்று கூறுகிறான். இரண்டாவதாக, அன்பு, துணிவு, நேர்மை, அச்சமின்மை, தவம் என்றெல்லாம் கூறி அதனைக் கவி அமுது

என்றும் கூறியுள்ளான். "அக்கினி வந்தான்" என்று தொடங்கும் 'தீ' என்ற கவிதையில் இப்பொருண்மைக் கூறுகள் அனைத்தும் உள்ளன. இது, சக சமத்துவமான நேரிய உலகியல் வாழ்விற்குரிய உணர்வோட்டமே எனலாம். பாரதியின் சுதந்திரப்பாடல்கள், இரஷ்யப்புரட்சியை வாழ்த்திப் பாடியமை, மாதர் விடுதலைக்கான பாடல்கள், தொழிற் பாடல்கள் மற்றும் இந்திய முன்னேற்றம் குறித்த அத்தனைபாடல்களுமே பாரதியின் சமூக சமத்துவ முன்னேற்றம் குறித்த உணர்வோட்டங்களே. இத்தகைய பல்வேறு பாடல்களின் அடிச்சக்தியாக இருக்கும் சமூக சமத்துவ உணர்வோட்டம் பாரதியின் கவிதைக் கருத்தாக்கத்தின் இரண்டாவது முக்கிய அடுக்கு எனலாம். இவ்வடுக்குகளோடு ஒன்றறக் கலந்து, மேலோங்கி, கவிதைக் கருத்தாக்கத்தின் திரட்டாக, உயிர்ப்பாக இருக்கும் அடுத்த முக்கிய அடுக்கு, சக்தி அடுக்காகும். "சக்தி என்று நேரமெலாம் தமிழ்க்கவிதை பாடுதல்" என்பதுவே இவ்வுயிர்ப்பாகும். இதன் மேலடுக்கில் சமூக சமத்துவ உணர்வு 'தீ' யாக்வும் வெளிப்பட்டிருத்தல். பாரதியின் கவித்துவச் செறிவின் திரளாகும்.

'தீ' கவிதையின் சமூக உணர்வுக் கூறுகள் கீழ் வருமாறு

> "தீ வளர்த்திடுவோம் – பெருந்
> தீ வளர்த்திடுவோம்". (227, அக்கினி பகவான், 1)

அன்பு

> "ஆவியினுள்ளும் அறிவினிடையிலும்
> அன்பை வளர்த்திடுவோம் – விண்ணின்
> ஆசை வளர்த்திடுவோம்" (227, 2:1–2)

துணிவு

> "சித்தத் துணிவினை மானுடர்கேள்வனை
> தீமை அளிப்பவனை" (227, 3:1)

நேர்மை

> "ஒளிர்நேர்மைப் பெருங்கனலை:" (227, 5:2)

அச்சமின்மை

> "அச்சத்தைச்சுட்டாங்கு சாம்பருமின்றி
> அழித்திடும் வானவனை" (227,6:1)

தவம் – அறம் – காதல் – ஆசை

> "இச்சையும் வேட்கையும் ஆசையுங் காதலும்
> ஏற்றதோர் நல்லறமும் – கலந்தொளி
> ஏறுந் தவக்கனலை" (227, 6:3–4)

தீ என்பது புலன் அனுபவத்தின் வெளி என்ற நிலையோடு சமூக வாழ்வின் அன்பு – அறம் – நீதி இவற்றின் படிமமாகிறது. மூன்றாவது நிலையில் ஆன்ம சக்தியாகவும் பொருண்மை பெறுகிறது. கவிதைக் கருத்தாக்கத்தின் மூவடுக்கு நிலையே இது.

## சக்தி அடுக்கு

சக்தி அனுபவம் 1912இற்குப் பின்னர் பாரதியிடம் முன்னோக்கிய அனுபவமாக மூள்கிறது. 1910இல் கனவு (சுயசரிதை) எழுதும்போது – தனது 28ஆம் வயதில் தன்னை மையமாகக் கொண்டு பின்னோக்கி இழப்புணர்வைக் கவிதையாக்கிய பாரதி – 1912இலிருந்து முன்நோக்கி நகர்கிறான். வெகுகனத்துடன் சக்தி, பராசக்தி, காளி, ஏசு, நபி, வள்ளி என யாவும் மனதின் வலுவுக்கான – வாழ்க்கைப் போராட்டத்துக்கான ஆன்மசக்தியாக மாறிவிடுகிறது. இந்த இயக்கம் பின்களத்திலிருந்து முளைவிட்டு வந்தவையே கவிதை என்ற சொல் பெற்றிருக்கும் பொருள் நிலைகள். புலன் அனுபவம் என்பது மாறி அமையும் நிலையில் மனதின் அடி ஆழத்துச் சக்தியாக மாறிவிடுகிறது. 'தீ' என்பது மூன்றாவது பொருண்மையாக அகத்தின் ஆன்மசக்தியாகத் திரண்டு விடுகிறது.

"தீயை அகத்தினிடை மூட்டுவோம்" (149, சொல், 4:1)

அனைத்தையும் தேவர்க்காக்கி அறத்தொழில் செய்யுமேலோர்
மனத்திலே சக்தியாக வளர்வது நெருப்புத் தெய்வம்"
(93, ஞானபாநு, 3:1–2)

மனதின் சலனமற்ற, உழல்தலற்ற, ஊசலாட்டமற்ற ஒருமைநிலைக்கான தூண்டுசக்தியாக ஒரு வலிமையை நாடும் உணர்வோட்டம் எல்லா விடுதலைகளுக்கும் உரியசக்தியாகப் பாரதியிடம் வெளிப்படுகிறது.

"ஈடற்ற கற்பனைகள் – காடுற்ற சிந்தனைகள்
மூடிக்கிடக்கு நெஞ்சின் – ஊடுற்றதை அமரர்
தேடித்தவிக்கு மின்ப – வீடொத்தினிமை செய்து
வேடத்தி சிறுவள்ளி வித்தை என்கண்ணம்மா".

வேதமந்திரத்தன்மை சொல்லுக்கு வேண்டும் என்ற கருத்து பாரதியிடம் ஆழமாக வேர்பிடிக்கிறது. மனம் – சொல் – மந்திரம் – கவிதை இவற்றின் ஒன்றிணைப்பு மனிதவாழ்வின் உயிர்ச்சக்தியாக மாறிவிடுகிறது. வேத ரிஷிகளின் கவிதை இத்தகைய சக்தி உடையது எனப் பாரதி அறுதியிட்டுக் கூறுகிறான்.

"ரிஷிகள் உள்ளத்தைத் தெளிவு செய்து கொண்டோர். ஆதலால் அடிவரை எளிதாகப் பாய்ந்து அங்கிருந்து மந்திரங் கொண்டு வந்தனர். அம்மந்திரங்களுக்குத் தேவர் வசப்படுவர். வெறும் 'சொல்'லுக்கு மகிமை இல்லை. அச்சொல் உள்ளத் துணிவை உணர்த்துமாயின் அதற்கு

மஹிமை உண்டு. எதனை நினக்கிறாயோ அதுவேயாகிறாய் என்பது தவறாத உண்மை" (பெ.தூரன், பாரதி தமிழ், பக். 187–188)

மனதின் வலிமை – தெளிவு – அதுவேயாதல் என்பது மனிதனின் ஆன்மபலமாகும். தன்னை ஒருமைப்படுத்தவும் உலகில் போராடி தீயதை அழிப்பதற்குமான சக்தி இதுவே: தன்னை அடக்கிப் பொது நோக்கில் திரண்டு நிற்றல்; இச்சக்தியே பராசக்தி; இதனைத் தருபவளும் பராசக்தியே. "பராசக்தி ஏழையேன் கவிதையாவும் தனக்கெனக் கேட்கிறாள்". "செய்யுங்கவிதை பராசக்தியாலே செய்யப்படுங்காண்" என்ற வரிகளின் பொருண்மை கவிதைச் சொல்லுக்கும் பொருளுக்குமான மந்திரத்தன்மையிலே உள்ளது. மந்திரத்தன்மை என்பது, வலிமையுடையதாக மனதை வசப்படுத்திச் சொல்லை ஆன்மசக்தி ஆக்குதல். இத்தகைய நிலையில் கவிதை மனைத்தலைவியாக மாறுகிறது. புலன் அனுபவங்களின் இளமைத்திரட்சியாக இருந்த கவிதையின் காதலி படிமம் மனைவிப் படிமமாக மாறுகிறது. "மனைத்தலைவிக்கு வாழ்த்து" என்ற கவிதையில் இதனைத் தெளிவாகக் காணமுடிகிறது.

"............... வெள்ளறிவுடைய
மாயாசக்தியின் மகளே, மனைக்கண்
வாழ்வினைவகுப்பாய், வருடம் பலவினும்
ஓர் நாட்போல் மற்றோர்நாள் தோன்றாது
பலவித வண்ணம் வீட்டிடைப்பரவ
நடத்திடுஞ் சக்தி நிலையமே .................. (207, 6–11)

.........................
அனைத்தையும் ஆங்கே அழகுறச் செய்து
இலௌகிக வாழ்க்கையிற் பொருளினை இணைக்கும்
பேதைமா சக்தியின் பெண்ணே, வாழ்க!
காளியின் குமாரி அறங்காத்திடுக!" (207, 19–22)

இந்த மனையகத் தலைவியையே பாரதி "வாழ்க மனைவியாம் கவிதைத்தலைவி" எனப் போற்றுகிறான். எனவே, தொடக்க நாட்களில் காதலியாக இருந்த கவிதை மனைவியாக மாறுகிறது. இதில் ஒரு குடும்ப அமைப்பு சார்ந்த சமூக ஒழுங்கின் நியதியே கவிதை என்ற சொல்லின் பொருளாகிறது. இம்மனைத்தலைவி, காளியின் மகளாகும் போது அவள் மந்திரச் சொல்லில் பிறந்தவளாகிவிடுகிறாள். பராசக்தியின் வடிவமாகிறது கவிதை.

"சொல்லினுக் கெளிதாகவும் நின்றிடாள்
சொல்லை வேறிடஞ் சொல்ல வழிவிடாள்
அல்லினுக் குட்பொருள் காண்பவர்
அன்னை சக்தியின் மேனி நலங்கண்டார்
கல்லினுக்குள் அறிவொளி காணுங்கால்

புல்லில் வயிரப்படை தோன்றுங்கால்
பூதலத்தில் பராசக்தி தோன்றுமே................" (151,5)

சொல் – சுடர் – அன்னை – அறிவு – நடை – பராசக்தி என யாவும் ஒன்றின் வியாபகங்களே. இதுவே கவிதை என்பதன் பொருள்

பாரதியின் படைப்புக்களை ஒட்டு மொத்தமாக நோக்கி, அவற்றினூடாக, கவிதை என்ற சொல்லின் பொருள் பெற்றிருக்கும் பொருள்நிலைகளை ஆராய்ந்து காண்பதே கவிதைக் கருத்தாக்கம் பற்றிப் பாரதியின் நிலையை அறிந்து கொள்ளும் முறையாகும். இவ்வாறு அணுகிய நிலையில் கவிதைக் கருத்தாக்கம் அற்புதப்பரவச மனோபாவத்துடன்கூடிய ஆன்ம சக்தியாக அமைந்துள்ளது எனச் சுருக்கமாகக் கூறலாம். வேதகாலத்து ரிஷிகளின் மந்திரத்தன்மை சொல்லுக்குள் வரவேண்டும். அதுவே கவிதையாகிப் பொய்மைகளை அழிக்கவேண்டும் என்ற சக்தியின் திரளாகக் கவிதை உருப்பெருகிறது. ஆயினும், இயற்கையிலும் வேட்கைகளிலும் ஈடுபட்டு மயங்கிய – இழப்புணர்வில் வீழ்ந்த – புலன் அனுபவங்களும் கவிதை என்ற காதலியாகப் படிமம் பெற்றுள்ளது. காதலி மனைவியாதல் என்ற மாற்றம் புலன் அனுபவங்களின் வழியில் புலன்களை மீறிய ஆன்மிக ஆற்றலாக மாறுதல் என்ற நிலைக்கு வளர்கிறது. 1912இற்கு முன் புலன்களின் வெறிமிக்க பரவசம், பின்னர் சக்தியின் களியாட்டம், இவ்விரண்டுடே சமூகவாழ்வின் சமத்துவ நிலைக்கான வேள்வி. இம்மூன்றின் ஒன்றில் ஒன்றான செறிவுடன் கூடிய திரட்சியே பாரதியின் கவிதைக்கருத்தாக்கம். கவிதை என்ற சொல் ஆளப்பெற்றிருக்கும் நிலைகளில் இது வெளிப்பட்டுள்ளது.

4

# காதல் என்ற கருத்தாக்கம்

அ. ஆலிஸ்

"சுவை புதிது; பொருள் புதிது; சொற் புதிது; சோதி மிக்க நவகவிதை" என்று தனது கவிதைக்குப் பாரதியார் தரும் விளக்கம் ஒரு நல்ல கவிதைக்குப் புதிய சொற்களும் புதிய பொருளும் கட்டாயம் தேவை என்ற கருத்தை முன்வைக்கிறது. "ஒரு படைப்பின் சிறப்புக்கு அதனுள் பயன்படுத்தப்படும் சொற்களும் இன்றியமையாத காரணங்களாகின்றன; சொற்களின் தேர்வு, பயன்படுத்தும்முறை, புதியனவற்றை ஆக்கும் திறமை, புதிய பொருள்களை ஏற்கும் திறமை முதலியவை இன்றியமையாத நடையியல் உத்திகளாகும்."[1] என்ற ஜெ.நீதிவாணனின் கருத்து சொற்பயன்பாடு மற்றும் புதுமை ஆக்கம் ஆகிய இரண்டும் கவிதையின் முக்கியக் கூறுகளெனத் தெரிவிக்கிறது. இளம் வயதிலேயே கவிதை படைக்கும் ஆற்றல் வாய்க்கப் பெற்றிருந்தவரும் மகாகவி என்று போற்றப்பெறுபவருமாகிய பாரதியாரின் கவிதைகள் சோதி மிக்க நவ கவிதைகளென்பதால் மேற்சுட்டப்பட்ட புதிய பொருள் தெரிவு, தகுந்த சொற்பயன்பாடு, புதுமை, ஆக்கம் ஆகிய கூறுகளைக் கட்டாயம் கொண்டிருக்கவேண்டும். இவ்வகையில் பாரதியாரது பாடல்களில் 'காதல்' என்ற சொல் உணர்த்தும் பொருளையும், கருத்தாக்கங்களையும் காண்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். பாரதியின் பாடல்களில் 'காதல்' என்ற சொல் உணர்த்தும் பொருள்கள் பின்வருமாறு அமைகின்றன.

## I. காதல் என்பது அன்பெனும் பெருவெள்ளம்

காதல் என்ற சொல்லுக்குப் பொதுவாக நடைமுறையில் நாம் என்ன பொருள் கொள்கிறோமோ அப்பொருளே பாரதியாரின் சில பாடல்களில் கொள்ளப்படுகிறது. ஆணும் பெண்ணும் கொள்ளும் காதல் வாழ்வின் அடித்தளம் மட்டுமன்று வாழ்வுக்கு இனிமை சேர்ப்பதும் ஆகும். எனவேதான் "பூமியில் சொர்க்கம் காணும் சுகமான உணர்வுதான் 'காதல்'; உலகின் இயக்கத்திற்குக் காற்று, நீர், நெருப்பு, சூரியன், சந்திரன் இவை மட்டுமல்ல, இந்தக் காதல் உணர்வும் காரணமாகிறது" என்று போற்றப்படுகிறது. இம்முறையில்தான் சங்க இலக்கியமும் ஐந்திணை ஒழுக்கத்தை அன்பின் ஐந்திணை என்று போற்றியது. 'பிள்ளைக்காதல்', 'காதலின் புகழ்' போன்ற சில கவிதைகளில் தன் இவ்வெண்ணத்தைப் பாரதியார் வெளிப்படுத்துகிறார். இளம்பிராயத்தில், பாரதியாருக்குப் பத்து

வயது ஆன காலத்தில் ஒன்பது வயதுப் பெண் ஒருத்தியிடம் காதல் அரும்பியதைச் சுயசரிதையில் பிள்ளைக்காதல் பகுதி விளக்குகிறது.

"கன்னியென்றுறு தெய்வத மொன்றனைக்
கண்டு காதல் வெறியிற் கலந்தனன்" (ப.213)

என்று கூறித் தன் காதல் பிழையோ என்று கேட்டுவிட்டு, 'அன்பெனும் பெருவெள்ளம் இழுக்குமேல் அதையாவர் பிழைத்திட வல்லரே' என்று விளக்குகிறார். எனவே, காதல் உணர்வுக்கு அன்பெனும் பெருவெள்ளம் என்று கொள்வது ஒரு பொருள். அதே கவிதையில் "இளம்பிராயத்துக் காதல்தான் சிறந்தது; வய்து முற்றிய பின்னுறு காதலே மாசுடைத்தது; இயலுபுன்மையுடலினுக்கின்பம் விளைவது" என்று கூறுமிடத்துக் காதலின் பொருளைச் சிறிது வேறுபடுத்திப் பார்ப்பார்.

"வயது முற்றிய பின்னுறு காதலே
மாசு டைத்தது தெய்வீக மன்றுகாண்
இயலு புன்மை யுடலினுக்கின்பெனும்
எண்ண முஞ்சிறிதேற்றதக் காதலாம்" (ப.213)

என்பன அவ்வரிகள்.

'காதலின் புகழ்' கவிதையில் "காதலினால் மானுடர்க்குப் புகழ் உண்டு; கவலை தீரும்; கவிதையுண்டு; சிற்பமுதற் கலைகளுண்டு" என்று விளக்கி

"ஆதலினாற் காதல் செய்வீர் உலகத்தீரே" (ப.232)

என்னும்போதும் 'அன்பு செலுத்துதல்' என்ற பொருளிலேயே காதல் என்ற சொல் கையாளப்படுகிறது. ஆனால், இதே கவிதையில் 'காதல் செயு மனைவியே சக்தி கண்டீர் கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்' என்னும்போது காதலின் பொருள் இல்வாழ்வின் அடித்தளமாம் பெண்ணை – மனைவியைச் சக்தியுடையதாக்கும் ஊக்கப்பொருள் என்று விரிகிறது.

இவ்வாறு வீட்டின் அடித்தளம் காதல் என்றவர், நாட்டின் மந்திரிமாரும் காதலிலே இன்பமெய்திக் களித்து நின்றால் – மாதருடன் மனமொன்றி மயங்கி விட்டால் போர்த் தொழிலை மனங்கொள்வாரோ (காதலின் புகழ் ப.233) என்று நாட்டமைதிக்குக் காதல் சாலச் சிறந்தது என்று பேசுகிறார். நாடு தழுவிய இக்கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே 'செந்தமிழ் நாடு' என்னும் கவிதையில்,

"காதல் புரியும் அரம்பையர்போல் – இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு" (ப.39)

என்று பேசுகிறார். அதற்கு முந்தைய அடிகளில் 'வேதம் நிறைந்த தமிழ்நாடு, உயர் வீரம் செறிந்த நாடு' என்று பேசிவிட்டு, வேதம், வீரம்

இரண்டனுக்கும் இணையாகக் காதல் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறுகிறார். எனவே, நாட்டின் அமைதிக்கு வழிவகுப்பது காதல் என்ற அவர்தம் சமுதாயக் கண்ணோட்டம் காதல் என்ற சொற்பயன்பாட்டின் வழிப் புலனாகிறது.

## 2. காதல் என்பது அன்பும் பாசமும்

'சுதந்திரப் பயிர்' என்ற கவிதையில், சுதந்திரப் போரிலே வீரர் பலர் – மேலோர் பலர் வெஞ்சிறையில் அல்லலுறுவதை விளக்கும்போது,

> 'மாதரையும் மக்களையும் வன்கண்மையாற் பிரிந்து
> காத லிளைஞர் கருத்தழிதல் காணாயோ' (ப. 47)

என்கிறார். இங்குக் காதல் என்ற சொல், மனைவியையும், மக்களையும் உள்ளடக்குவதால், அன்பு, பாசம் என்ற இரு பொருள்களை உள்ளடக்கி நிற்கிறது. பாரதியார் 'செந்தமிழ் நாடு', 'சுதந்திரப் பயிர்' ஆகிய கவிதைகளில் காதல் என்பதை நாட்டு நிலை மேம்பாட்டுக்கு விரித்து நோக்கும் உயரிய நோக்கு தெரிகிறது.

## 3. காதல் என்பது இறையருளும் இறைவன்-பக்தன் உறவு நிலையும் ஆதல்

பாரதியாரின் முப்பெரும் கவிதைப் படைப்புக்களுள் குயில் பாட்டும், கண்ணன் பாட்டும் கடவுளுக்கும் பக்தனுக்கும் உள்ள ஆன்மீக உறவைக் காதல் என்ற சொல்லால் சுட்டுகின்றன. "பாரதியாருடைய படைப்பிலக்கிய ஆண்டுகளில் 1912–ஆம் ஆண்டு மணிமுடியாகத் திகழ்கிறது. புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்து பல இன்னல்களுக்கு ஆளாகி இருந்தாலும், வறுமை வெந்தழலிலே உழன்ற பாரதியாருடைய உள்ளம் புடமிட்ட பொன் போல் உயர்ந்த இலக்கியங்களைப் படைத்து அவருக்கு அழியாப் புகழ் தந்தது. அந்த ஆண்டில்தான் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு என்ற இணையற்ற இலக்கியங்கள் உருவாயின"[2] என்பார் தூரன். இவர்தம் இவ்விளக்கம் பாரதியாரின் இப்பாடல்கள் உருவான காலத்து அவர் தம் வாழ்க்கைப் பின்னணி நிலவிய பான்மையை நமக்குப் புலப்படுத்துகிறது. பாரதியார் இயற்கைப் பிரியராதலால் இயற்கைவளம் மிகுந்து விளங்கும் புதுவை முத்தியாலுப்பேட்டையில் தன் நண்பர் கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத்திற்கு அடிக்கடி பாரதியார் போக அங்குதான் குயில்பாட்டு எழுந்தது என்பது வரலாறு.[3]

குயில்பாட்டில் குயில் பறவை கவிஞர் மீது காதல் கொள்ள, இடையே குரங்கும் மாடும் குயிலுடன் காதல் பேச, கவிஞர் அய்யுற,

இறுதியில் குயில் தன் பூர்வ ஜென்ம வரலாற்றைச் சொல்லி விளக்கிக் கவிஞரின் கரங்களில் விழுந்து பெண்ணாக மாற்றம் பெறுகிறது. மேலோட்டமாகப் பார்த்தால் இக்கவிதையில் 'காதல்' என்ற சொல் மானுடக் காதலைக் குறித்தாலும், பாடலின் இறுதியில் பாரதியார்,

"ஆன்ற தமிழ்ப் புலவீர் கற்பனையே யானாலும்
வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்று இடமிருந்தால் கூறீரோ"

என்று வினவுவதால், பல அறிஞர் பெருமக்களது கருத்துப்படி இப்பாடலில் காதல் என்ற சொல் ஜீவாத்மா, பரமாத்மா உறவு நிலை என்ற பொருளுடையதாகிறது. "குயில் ஜீவாத்மா, கவிஞன் பரமாத்மா. பரமாத்மாவிடம் கொள்ளும் காதல் உண்மையான காதல். மாடு விலங்கின் உணர்ச்சியைச் சுட்டுகிறது. குரங்கு மனத்தை உணர்த்துகிறது. மனம், புத்தி ஆகியவற்றின் வழி செல்லும் ஜீவாத்மா மாயையால் மயங்குகிறது. கவிஞன் தன் வாளால் குரங்கையும் மாட்டையும் வீழ்த்திச் சிறைப்பட்டுக் கிடந்த தம் ஆத்மாவாம் குயிலை விடுதலை செய்கிறார். பரமாத்மாவிடம் அன்பும் ஐக்கியமும் ஏற்படும்போது பிறப்பும் சாவும் நீங்கும். இதுவே உள்ளடங்கிய கருத்தாக இருக்கலாம்"[4] என்று கூறப்படுகிறது.

குயில்பாட்டின் மையமாக இசைக்கும்
"காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்"

என்பது ஜீவாத்மா பரமாத்மா உறவு நிலையைச் சுட்டுகிறது. அதேபோல,

"காதலை வேண்டிக் கரைகின்றேன் இல்லையெனில்
சாதலை வேண்டித் தவிக்கின்றேன்" (ப. 343)

"காதலருள் புரிவீர் காதலில்லை யென்றிடிலோ
சாதலருளித் தமது கையால் கொன்றிடுவீர்" (ப. 359)

என்று குயில் பாடும் வரிகள் பரமாத்மாவின் அருளை ஜீவாத்மா வேண்டி நிற்பதைக் குறிக்கின்றன.

இதே உள்ளுறைப் பொருளுக்கு 'நாதமாக விளங்கும் பிரமம், நாதத்தை (இசையை) நினைத்து ஏங்குதல் தவித்தல் என்றும், நான்காம் நாள் குயிலைக் காணும்போது நாதமும் சோதியும் இணைகின்றன' என்றும் சுப. அண்ணாமலை கூறும் விளக்கம்[5] நாதம், சோதி–உறவுநிலை என்ற பொருளைக் காதல் என்ற சொல்லுக்குக் கொண்டு வருகிறது.

காதல் என்ற சொல்லுக்குச் 'சிறந்த கவிதை' என்ற உள்ளுறையும் கொண்டு சிறந்த கவிதை ஆற்றல் எள்ளப்படுகிறதே என்று வருந்தும்

கவிஞன் நல்ல கவிதை குறித்து ஏங்குவதாகவும் ஒரு பொருள் கொள்ளப்படுகிறது. குயில் கவிதாசக்தி என்றும் கவிதைக் காதலி என்றும் குறியீடாகச் சொல்லப்பட்டு, அக்கவிதைக் காதலி கவிஞரை நாடுவதாகவும் கவிஞர் அக்கவிதையிடம் எல்லை இல்லா மோகம் கொள்ளுவதாகவும் குரங்கும் மாடும் வெற்றுக் கவிதை புரியும் போலிகளாகவும் ஒரு பொருள் கொண்டு விளக்குகிறார் ந. சுப்புரெட்டியார்.[6] இவ்வகையில் காதல் என்ற சொல்லுக்குக் கவிதைக்கும் நல்ல கவிஞருக்கும் உள்ள ஈடுபாடு என்ற பொருள் கிடைக்கிறது.

இதே போல வைணவ ஆழ்வார்களின் பாசுரங்களின் தாக்கத்தினால் கண்ணனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் கண்டு பரவசமடையும் கவிதைகளும் தன்னைக் காதலனாகவும் கண்ணனைக் காதலியாகவும் கொண்டு பாடியிருக்கும் கவிதைகளும் இதே நிலையில் காதல் என்ற சொல்லுக்குக் கடவுள் 'அருள்' என்பதையே பொருளாக உரைக்கின்றன. சரஸ்வதி, திருமகள், சக்தி ஆகிய மூன்று தெய்வங்களின் மீது பாடும் பாடல்களிலும் இப்பொருளே தொனிக்கிறது.

காற்று வெளியிடை கண்ணம்மா – நின்றன்
காதலை எண்ணிக் களிக்கிறேன் (ப. 131)

என்னும்போது, நின்'னருள்' வேண்டுகிறேன் என்ற பொருளையே பெறுகிறோம்.

'ஞாயிறு வணக்கம்' என்ற பாடலில்

"மன்று வானிடைக் கொண்டுலகெல்லாம்
வாழ நோக்கிடும் வள்ளியதேவா
காதல் கொண்டனை போலும் மண்மீதே"

............... ............... ...............

மாதர் பூமியும் நின்மிசைக் காதல்
மண்டினாள் இதில் ஐயமொன்றில்லை" (ப. 148)

என்ற வரிகள் அமைகின்றன. ஞாயிறு மண் மீது கொள்ளும் காதல் 'அருள்' என்ற பொருளையும், பூமி கொள்ளும் காதல் 'மகிழ்ச்சி' என்ற பொருளையும் உடையதாகிறது. இயற்கைப் பொருட்களைக் கண்டு காதல் வயப்பட்டு நிற்கும்போதுகூட உலக இன்பத்தில் அதில் மட்டுமே மூழ்கிவிடாமல் ஞாயிறு, பூமி இரண்டன் இயக்கம் நாட்டு மக்களுக்கு உதவுமாற்றைக் கூறும் வழி பாரதியார் தம் நாட்டுணர்வினைப் புலப்படுத்துகிறார்.

## 4. காதல் என்பது ஆசை என்ற பொருளுடையதாதல்

கண்ணனைக் காதலியாகவும் தன்னைக் காதலனாகவும் கொண்ட பாடலில்

"வாலைக் குமரியடீ கண்ணம்மா
மருவக் காதல் கொண்டேன்" (கண்ணம்மா என் காதலி–261)

என்னுமிடத்தில் காதல் என்ற சொல் 'ஆசை, விருப்பம்' என்ற பொருள்களை உடையதாகிறது.

## 5. காதல்-காதல் நிறை பண்பாளர் என்ற பொருள் தருதல்

காதல் என்ற சொல்லே அடைமொழியாகிக் காதல் நிறை பண்பாளரைக் குறித்து நிற்பதையும் காண முடிகிறது.

கண்ணுள் மணி யெனக்குக் காதலி ரதியிவள்
பண்ணி லினிய சுவை பரந்த மொழியினாள்
உண்ணு மிதழமுத ஊற்றினள் கண்ணம்மா (ப. 132)

என்று காதல் தன்மை நிறைந்த ரதி என்று கண்ணம்மாவைக் குறிக்கிறார்.

காதலொருத்தி இளைய பிராயத்தள்
வெண்ணிலாவே ... ... நின்
தண்முகந் தன்னில் விளங்குவ தென்னை சொல்
வெண்ணிலாவே!

என்னுமிடத்துக் காதல் என்ற சொல் இதேபோல் காதல் தன்மை நிரம்பியவள் என்ற பொருள் பெறுகிறது. சமுதாய மக்களின் பண்பு நலன் பற்றிச் சிந்திக்கும் பாரதியாருக்குக் காதல் என்ற சொல் பொருத்தமுடையதாகத் தெரிகிறது. அவர் தம் சமுதாயக் கருத்தாக்கத்தில் காதல் என்ற சொல் முக்கியத்துவம் பெறுகிறது.

## 6. காதல் என்பது இல்லறப் பண்பினை உணர்த்தல்

பெண் விடுதலைக் கும்மியில்,

காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்தே
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி (ப. 183)

என்று பாடுமிடத்து, காதல் தன்மையுடைய அன்பு நிறை பண்பாளன் என்பது மட்டுமல்லாமல் மாதரறங்கள் பழமையைக் காட்டிலும் நன்கு மாட்சி

பெறுவதற்கு உதவுபவன் கணவன் என்ற பொருளையும் கொண்டு காதல் என்ற சொல் பொருள் பரந்து நிற்கிறது. இங்கு பாரதியாரின் பெண் விடுதலைக் கருத்தாக்கத்திற்குக் 'காதல்' என்ற சொல் முக்கியப் பொருளுடையதாகிறது.

## 7. காதல்-கற்பு என்னும் பொருண்மையுடையதாதல்

'விடுதலைக் காதல்' என்ற கவிதையில், காதலிலே விடுதலை என்று மேனாட்டில் நிலவும் கொள்கையைச் சாடுகிறார் பாரதியார்.

பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போலே பிரியம்வந்தால் கலந்து அன்பு பிரிந்துவிட்டால் வேதனையொன்றிலாதே பிரிந்து சென்று வேறொருவன்றனைக் கூடவேண்டும் என்பார் மேனாட்டார். அவ்வகைக் காதலாகிய

"விடுதலை யாங்காதலெனிற் பொய்மைக்காதல்" (ப. 233)

என்று பாரதியார் சாடுமிடத்து அக்கவிதையின் பிற்பகுதியில் சுவைமிக்க களவின்பம் வேண்டிப் பெண்ணலம் நுகரும் ஆண்மக்கள் தம் இல்லத்தின் பெண்களுக்கும் 'கற்பு' 'கற்பு' என்று கதைப்பதனைத் தவறு என்று சாடுகிறார். "பேணுமொரு காதலினை வேண்டியன்றோ பெண் மக்கள் கற்பு நிலை பிறழுகின்றார்" என்று பேசுமிடத்தில் 'கற்பு நிலை பேணாத காதல் பொய்மைக் காதல்' என்று பறைசாற்றும் பாரதியைக் காண முடிகிறது. இங்கு பாரதியின் சமுதாய அக்கறை, நம் நாட்டு மரபுவழித் தமிழ்ப் பண்பாட்டுச் சிந்தனையின் வழி பிறந்த கருத்தாக்கம் எனலாம்.

## 8. காதல் எஜமானனுக்கும் சேவகனுக்கும் உள்ள புரிதல் தன்மை என்ற பொருளுடைத்தாதல்

கண்ணனை ஆண்டவனாகப் பாவித்தும், தன்னை அடிமையாகப் பாவித்தும் பாடும் 'கண்ணன் என் ஆண்டான்' என்ற கவிதையில்

"கண்ணனடிமை யிவனெனுங் கீர்த்தியில்
காதலுற்றிங்கு வந்தேன்" (ப. 266)

என்கிறார். 'காடு கழனிகள் காத்திடுவேன்' என்னும்போது, ஆண்டவனாகிய கண்ணனிடம் அடிமையாவதற்கு விருப்பமுற்று, ஆசையுற்று, தணியாத விருப்பமுற்று வருதல் என்ற பொருள் தருகிறது. ஆண்டானிடம் விருப்பமுற்று--மிகவும் புரிந்து கொண்டு அடிமை வருவது வியப்பிற்குரியது. 'கண்ணன் என் சேவகன்' என்ற கவிதையில் தன்னிடம், சேவகனாக வந்து சேர்ந்த கண்ணனிடம் 'கூலியென்ன கேட்கின்றாய் கூறு' என்கிறார் பாரதியார்.

"தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிகளேதுமில்லை
நானோர் தனியாள்! நரைதிரை தோன்றா விடினும்
ஆனவயதிற் களவில்லை. தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரிதில்லை யென்றான்" (ப. 243)

பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே கண்டு மிகவும் களிப்புடனே நானவனை ஆளாக ஏற்றுக் கொண்டேன் என்று பாடுகிறார். இங்கு அடிமைக்கும் ஆண்டானின் அன்பு, பாசம், பற்று, எல்லாவற்றுக்கும் மேலாகப் 'புரிந்து நடத்தும் எஜமானத் தன்மை' தேவை என்பதைக் குறிக்கிறது.

## 9. காதல் என்பது நட்பு என்ற பொருளுடையதாதல்

'சத்ரபதி சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறியது' எனும் கவிதையில் பாரதப் போரில் பார்த்தன் கண்ணன் அம்பு எய்யச் சொல்பவர்களை ஒரு முறை பார்க்கிறான்.

தன்னெதிர் நின்ற தளத்தினை நோக்கிட
மாதுலர் சோதரர் மைத்துனர் தாதையர்
காதலின் நண்பர் கலைதரு குரவரென்று
இன்னவர் இருத்தல் கண்டு இதயம் நொந்தோனாய் (ப.54)

என்னும் வரிகளில் காதல் என்ற சொல் ஆழ்ந்த நட்பு என்னும் பொருளைத் தருகிறது.

## 10. காதல் என்பது கோயில் என்னும் பொருளுடையதாதல்

பிறிதோர் கவிதையில்

"கோலமிட்டு விளக்கினை யேற்றிக்
கூடிநின்று பராசக்தி முன்னே
ஓலமிட்டுப் புகழ்ச்சி சொல்வார்
உண்மை கண்டிலர் வையத்துமாக்கள்

ஞால முற்றும் பராசக்தி தோற்றம்
ஞானமென்ற விளக்கினை யேற்றிக்
கால முற்றும் தொடுத்திடல் வேண்டும்
காதலென்பதோர் கோயிலில் கண்ணே

என்று கூறி காதல் என்பதற்குக் 'கோயில்' என்ற பொருள் விரிவாக்கத்தைத் தருகிறார்.

இவ்வாறு பாரதியின் கவிதைகளில் காதல் என்ற சொல் அன்பெனும் பெருவெள்ளம், பாசம், இறையருள், மகிழ்ச்சி, ஆசை, காதற் பண்பு, இல்லறப் பண்பு, கற்பு, புரிந்துகொள்ளல் தன்மை, நட்பு, கோவில் என்று பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்கின்றது. இச்சொற் பொருள்களின் வழி பாரதியின் மானுடம், ஆன்மீகம், பெண் முன்னேற்றம், தேசியம் என்று பல கருத்தாக்கங்களை நாம் பெற்றாலும், 'காதல்' என்ற சொற்பயன்பாட்டைப் பொறுத்தவரை பாரதியார் இரு நிலைகளில் தன் கருத்தை முன் வைக்கிறார். அவை 1) மானுடக் காதல் 2) ஆன்மீக அடிப்படைக் காதல். இதற்குக் காரணம் பாரதியார் பெற்றிருந்த வேத, உபநிடத அறிவின் தாக்கமே எனலாம். "தன் புலமையை உருவாக்கிய இளங்கோ, கம்பன், திருவள்ளுவர் ஆகியோருக்குப் பாரதி பெரிதும் கடமைப்பட்டுள்ளார். வடமொழிக் காவியங்களும் வேத உபநிடதங்களும் அவரைப் பெரிதும் வளர்த்துள்ளன"[7] என்ற கூற்று இதற்கு அரண் செய்யும்.

பாரதியார் தன் பல கவிதைகளில் பொய், மாய சாத்திரங்கள், விதி, பழவினை, கர்மவசம் போன்ற பல சொற்களைக் கையாண்டு உலகில் இவற்றின் வசப்பட்டு மனிதன் வாழ வேண்டிய கட்டாயத்தைக் கண்டு வருந்தினாலும் சாத்திரத்தை வெறுத்துப் பேசினாலும் – இவற்றினூடாக வாழ்க்கையை வாழ்ந்து முடிக்க வேண்டிய நியதி உள்ளது என்று கண்டு கொண்டாலும் – இவற்றையெல்லாம் மீறிப் புத்துணர்ச்சியோடு தன் காதல் விருப்பத்தைப் புலப்படுத்துகிறார். குயில் பாட்டு பற்றி "இக்கதை நம் இனத்தினர் நம்பிக்கைகளோடும், மரபுகளோடும் ஒத்துப் போகிறது. ஆன்மாவின் மறுபிறப்பு, காதலுக்கு உள்ள எதிர்ப்பு, விதி ஆகிய எல்லாம் பழைய மரபுகளே. இந்த மரபு அடிப்படையில் உணர்ச்சியும் அறிவும் கற்பனையும் பொங்க பாரதியார் இறவாப்புகழ் பட கலைக்கோவில் கட்டி முடித்திருக்கிறார்''[8] என்பர். எனவே, மரபுக் கட்டு பற்றிய விழிப்புணர்வுடனேயே அவற்றினூடேயே வாழ்வின் அனுபவத்தினூடேயே மேலும் நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டு நல்வாழ்வு வாழ விரும்பும் பாரதியாரைக் காதல் என்ற சொற் பயன்பாட்டின் வழியும் காதற் கவிதைகள் வழியும் அறிய முடிகிறது.

பிரம்மசமாஜத்துக்கு எதிரிடையாக 1875–இல் தோன்றிய ஆரிய சமாஜத்தின் செல்வாக்குக்குப் பாரதியார் ஆளாகியிருந்தமையை க.கைலாசபதி நிறுவுவதற்கிணங்க,[9] ஐயத்திற்கிடமின்றி வேதாந்தங்களைச் சிக்கெனப் பிடிக்கும் போக்கையும் தெய்வத்தை நம்புவதுபோல வேதங்களை நம்பும் போக்கையும் பாரதியார் கொண்டிருந்தார் என்பதனையும் பாரதியாரின் வேதாந்த ஈடுபாட்டினை குயில்பாட்டு, கண்ணன் பாட்டு உணர்த்துகின்றன. பக்தியின் ஈடுபாட்டினால் தெய்வங்களோடு இடையறாத தொடர்புடன் விளங்குவதை 'மானுடக் காதல்' என்ற பொருளில் அவர் காதல் என்ற சொல்லைப் பயன்படுத்துமிடங்களில் காணலாம். நேரிய காதல், நேர்மையான உண்மைக் காதல் என்ற பொருள்பட 'ஆவிக்கலப்பு' என்ற அவர்தம்

சொற்பிரயோகமும் ஒப்பு நோக்கத்தக்கது. இருவரிடத்தும் நேர்மை நிலவும் தூய காதல் அமையும்போது களித்தலும் தன்னை மறத்தலும் பாரதியாரின் உள்ளக் கிடக்கைகள். எனவே, காதல் என்ற சொல்லுக்குப் பெரும்பாலும் 'மானுடக் காதல் தன்மை', 'ஜீவான்மா பரமான்மா உறவு நிலை' என்ற இருபொருள் தருவதன்வழி உலகியல் இன்பத்தை முன்வைத்து நேர்மையுறு காதல் வாழ்வு வாழுகின்ற அதே வேளையில் இறைவனிடம் எப்போதும் சரணாகதி அடைந்தும் வாழுகிற வாழ்வியல் கருத்துக் கோட்பாட்டினைப் பாரதியார் பெரிதும் முன்வைக்கிறார். அவரது அத்தகைய ஆளுமையையும் இச்சொற்பயன்பாடுகள் நமக்குக் காட்டி நிற்கின்றன எனலாம்.

## *குறிப்புகள்*

1. ஜெ.நீதிவாணன், நடையியல், ப. 46
2. பெ. தூரன், பாரதியும் பாட்டும், பக். 12–13
3. ப.கோதண்டராமன், புதுவையில் பாரதி, ப. 62.
4. மேலது.
5. சுப. அண்ணாமலை, 'வேதாந்தக் குயில்', பாரதியார் நூற்றாண்டு மலர், ப.245.
6. ந. சுப்புரெட்டியார், 'குயில்பாட்டு – ஒரு மதிப்பீடு', பக். 71–73.
7. கா. மீனாட்சி சுந்தரம், 'குயில்பாட்டு – நுண்பொருள்', பாரதி என்றொரு மானுடன், ப. 157.
8. மேலது, ப. 166.
9. க.கைலாசபதி, பாரதி ஆய்வுகள், பக். 126–130.

# 5

# சக்தி என்ற கருத்தாக்கம்

அ.பிரேமா

பாரதி காலத்துக் கருத்துக்கள், அக்கருத்துக்களுள்ளும் வெளிப்படையாக நின்றவை, அடிப்படைகளாகவிருந்து சிந்தனைகளை உந்தியவை, பாரதிக்கும் அவனது சமூகச் சூழலுக்குமிருந்த உறவு, அவனது கோட்பாடுகள், விருப்பு வெறுப்புகள், அவன் வளர்ந்த பின்னணி ஆகியவற்றை ஆராய்ந்து பாரதியின் ஆளுமையில் அவை வெளிப்பட்ட முறைமையினை நிர்ணயஞ்செய்து கொள்ளுதல் பாரதியின் விமரிசனத்துக்கு அத்தியாவசியமான ஒன்றாகும் என்பர்.[1] பாரதியை அவனது சரித்திரச் சூழலில் வைத்து நோக்குதல் வேண்டும் என்பார் கைலாசபதி.[2]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்தியாவில் எழுந்த சமயச்சார்பான மறுமலர்ச்சி இயக்கங்கள் அனைத்தும் ஏதோவொரு வகையில் ஆரிய சமாஜம், பிரமசமாஜம் ஆகிய பிரிவுகளுக்குள் அடங்கும். ஆரிய சமாஜத்தினர் வேதகால வாழ்க்கை என்ற வரம்புக்குள் ஒருவகையான எளிமை, படாடோபமின்மை, சிக்கனம், கிராமியத்தன்மை, நேர்மை முதலியவற்றைக் கருதினர். இதன் காரணமாகப் பிரமச்சாரிகள், துறவிகள், சாதுக்கள், தியாகிகள் முதலானோர் ஆரிய சமாஜம் வாயிலாக இந்திய அரசியலரங்கில் பிரவேசித்தனர். பாரதிக்கும் இத்தகைய துறவிகளின் தொடர்பு அதிகமிருந்தது.[3] இத்தகைய சூழலால் ஆன்மீகத்தாக்கம் அவர் மனதில் ஆழப்பதிந்திருந்தது. இது மட்டுமல்ல. வடமொழியின் வேதாகம புராணங்களையும் தமிழில் கம்பனையும் வள்ளுவரையும், தாயுமானவரையும் நன்கு கற்றிருந்தார். இதனால் சிறுவயதிலேயே பாரதிக்குப் பழைய செல்வங்களில் – மரபில் மனம் பதிந்துவிட்டது. பிராமணக்குடும்பத்தில் பிறந்தவராதலால் வருணாசிரம தருமம், வேதப்பயிற்சி, வடமொழிப்பற்று, புராண இதிகாசப் பயிற்சி முதலியன பாரதியார் சிறுவயதிற் பெற்ற பாரம்பரியமாகும். ஆங்கிலக் கல்வி, வடநாட்டு யாத்திரை இவற்றால் சமுதாய உணர்வு, புதுமைப்பித்து முதலியவற்றைப் பெற்றார்.[4] வடமொழியிலும் தமிழிலும் உள்ள தொன்மையிலக்கியங்கள் மட்டுமின்றிப் பிற்காலத்துச் சித்தர்பாடல்கள், இசைப்பாடல்கள், தெருப்பாடல்கள் முதலியவற்றையும் பாரதி ஆர்வத்துடன் படித்துத் தனதாக்கிக் கொண்டமையை அவரின் படைப்புக்கள் புலப்படுத்துகின்றன.

இந்துமத நம்பிக்கையும் பிடிப்பும் பாரதியிடம் இருந்தாலும் அவை அவனை மீறிக்கொண்டு கவிதைத்தன்மையை அழுத்துகின்றன என்று எப்படிச் சொல்ல முடியாதோ அதுபோலவே அவனுடைய சமூகவுணர்வு, இனத்தனித்துவம், தேசீயம், சர்வதேசீயம் ஆகியவற்றுக்குச் சிறிதும் பங்கம் விளைவிக்கவில்லை என்பதையும் நாம் அறிதல் வேண்டும். மதத்தின் பாத்திரம் பற்றிய மார்க்சிஸ பார்வையில் பாரதியின் மதக்கருத்துக்கள், ஒரு தத்துவ அறிஞர் என்றவகையில் அவருக்குச் சறுக்கலை உண்டாக்கியிருப்பினும் சமூகத்தில் எந்தத் தீய விளைவுகளையும் உண்டாக்கவில்லை; சமயப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கே துணைசெய்தன. அவர் காலத்திய தமிழ்ப்புலவர்கள், அரசியல்வாதிகளோடு ஒப்பிட்டால் அவரின் பெருமை புரியும் என்று பெ.மணியரசன் கூறும் கூற்று[5] குறிக்கத்தக்கது.

பழம்புராணக்கதைகள் உலகத்தைக் காண பூர்வீக மனிதன் முதலில் கடைப்பிடித்த வழிமுறைகள் மனிதனின் மிகப்பழைய வெளியீட்டுமுறையான இது, பழைய மனிதனது ஆன்ம வேட்கைக்கு உந்துதல் கொடுத்தது. தலைமுறை தலைமுறையாகச் சமூக ஒற்றுமையின் உறவுக்கட்டை ஏற்படுத்தியது.[6] பாரதியும் அந்நிய ஆட்சிக்கு எதிராக மக்களைத் திரட்டுகிற முயற்சியில் அகண்ட பாரத மக்களிடம் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த தன் முன்னோரின் ஆன்மீக மார்க்கத்தைத் தேசீய மார்க்கத்தில் இரண்டற இணைத்து, புதிய நவீன தேசபக்தி மார்க்கத்தை முதன்முதலாக ஏற்படுத்தினார்.

எளிய மக்களின் வாழ்க்கையையும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராட்டத்தையும் இணைத்துப் பிரச்சாரம் செய்து அதன்மூலம் தேசீயத்தை வளர்க்கும் தத்துவஞானம் அன்றைய தலைவர்களுக்கு இல்லை. மக்கள் மத்தியில் இந்திய தேசீய உணர்வை வளர்ப்பதற்கு வேறு எளிய வழிகளைத் தேடினர். மக்களின் மத உணர்வு அப்போது அவர்களுக்குக் கைகொடுத்தது.[7] இந்திய சுதந்திரப்போராட்டத்திற்கு இந்துமதம் சாதகமாகத் துணைபுரிந்துள்ளது.[8] பாரதி மதத்தைப் பழமைவாதத்திலிருந்து மீட்டுச் சமூகவாழ்வுடன் இணைத்து அறிவுவாத அடிப்படையில் தேசீயவுணர்வைத் தட்டி எழுப்பப் பயன்படுத்தினார். இத்தன்மையே பாரதி கவிதைகளின் சமூகவியல் கோட்பாடாகும். ஆன்மீகத்தையும் சமூகவாழ்வையும் ஒன்றிணைத்துக் கவிதையில் சமூகச் சார்புடைய நவீனமரபைத் தொடங்கி வைத்தார். அதுதான் இன்றுவரை தொடர்கிறது. இனியும் அதுதான் தொடரும். பாரதியின் நவீனத்துவத்தின் பிரதான அடிப்படையும் அதுதான் என்று நுஃமான் கூறும் கருத்து நோக்கத்தக்கது.

சாசுவத கோட்பாட்டின் பிடிப்பு பாரதியிடம் சிறிதளவு இருந்ததை மறுக்க முடியாததாயினும் மாற்றத்தை விதியாகக் கொண்ட இயக்கவியலைப் பாரதியார் உணர்வு ரீதியாக ஏற்றுக்கொண்டிருந்தார் என்பதையும்

மறுக்கமுடியாது.[10] பாரதியின் இலக்கியக்கோட்பாடு இயக்கவியல் கோட்பாடுதான். பாரதியைப் பொறுத்தவரை மதம் ஆன்ம ஈடேற்றத்துக்கான அல்லது மோட்சத்துக்கான ஒருவழி அல்ல.[11] அது வாழ்வுக்கான இயக்கவியல் நெறியாகும்.

தேசிய தனித்துவத்தைத் தேடுகின்ற தேடலின் ஒரு அம்சமாகவும் ஐரோப்பிய கலாச்சாரத்திற்குச் சற்றும் குறைவானது அல்ல இந்து மக்களும் இந்தியக் கலாச்சாரமும் என்ற கருத்தாக்கத்தை உருவாக்கவும் தான் இந்து மதத்தையும் இந்துக்கலாச்சாரத்தையும் தேசீய இயக்கத்தோடு இணைத்துப் போற்றிய தன்மையாகும்.[12] அக்கால தேசிய இயக்கவாதிகளுக்குச் சரியான தேசிய சமூகவிஞ்ஞான தத்துவஞானமும் ஏற்ற புறச்சூழலும் இல்லாதநிலையில் இந்துமதத் தத்துவத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தேசபக்தியை வளர்க்க வேண்டியதாயிற்று. லோகமான்ய திலகரிலிருந்து, பங்கிம்சந்திரர், அரவிந்தகோஷ், பாரதியார் ஈறாக தேசியத்தையும் இந்து மதத்தையும் தேசபக்தியையும் தெய்வபக்தியையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கவொண்ணாத தத்துவங்களாக ரசவாதம் செய்ய நேர்ந்த கதை இதுதான்.[13] இந்த வரலாற்று அடிப்படையிலேயே பாரதி பயன்படுத்திய 'சக்தி' கருத்தாக்கம் தேசிய, சமுதாய, சமய, பண்பாட்டுக் கருத்தாக்கங்களை உணர்த்திய முறைமையை ஆய்தல் வேண்டும்.

## தேசீயம்

"சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில் சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய 'தேசபக்தி' என்ற நவீனமார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தனையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன்.[14] என்று பாரதி கூறுகிறார். இவ்வாக்கியங்களில் தேசபக்தி அன்று வாழ்வின் நவீனமார்க்க மாயிருந்ததையும் அந்தத் தேசபக்தியும் தன் தெய்வபக்தியால் ஏற்பட்டதாகவும் பாரதி எழுதுகிறார். தேசபக்தியும் தெய்வபக்தியும் அன்றைய காலக்கட்டத்தில் பிரித்து எண்ணமுடியாத நிலையிலேயே இருந்தது என்பதை உய்த்துணர முடிகிறது.

பாரதியின் தேசியப் பாடல்களில் தெய்வ பக்தியையும், பக்திப்பாடல்களில் தேசபக்தியும் வெளிப்படுதலை அறியலாம். இந்த இரண்டுவிதமான படைப்புமுறையில் முதலாவது முறையே பாரதியிடம் மிகுந்திருந்தது.[15] பாரதி தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரததேசத்து மக்களுக்கு மலர்ச்சியும் மகிழ்ச்சியும் கொடுக்க நம்பிக்கையும் பிடிப்பும் உந்துதலும் ஏற்படுத்த 'சக்தி' என்ற தெய்வக்குறியீட்டு உருவகமுறையைப் பயன்படுத்துகிறார்.

நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்பதை வாழ்க்கைக்கோட்பாடாகக் கொண்டிருந்த பாரதி மரபுபோற்றலை விரும்பியவராக இருந்தாலும் சக்தி என்ற தெய்வக் குறியீட்டு உருவகமுறையைப் புதிய உலகம் படைக்க, புதிய சமூகம் படைக்க நவீனமரபாகக் கையாண்டார். பாரதியைப் பொறுத்தவரை உலகில் உள்ள அத்துணையும் சக்திரூபமே; சக்தியின் தொழிலே. அவர் பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் "தமிழ் ஜாதிக்குப் புதியவாழ்வு தர வேண்டுமென்று கங்கணங்கட்டிநிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாள் ஆதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந்தருவதாகும் என்றே நம்புகிறேன்."[16] என்கிறார். தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர கவிதை படைத்தலை இதயசுத்தியாகத் தன் தொழிலாக ஏற்றுக்கொண்ட பாரதி அதனைப் பராசக்தியின் செயல்பாடாகக் கூறித் தன்னையும் பராசக்தியையும் பிரித்துக்காண முடியாது என்பதைச் சொல்லி, மக்களை மிக எளிய முறையில் தன் பக்கம் அணுகச் செய்கிறார்.

"வந்தே மாதரம் என்போம்; எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்"[17] என்று பாரதநாட்டை அன்னையாகப்போற்றி மாநிலத் தாயை வணங்கும் நவீன தேசிய மார்க்கத்தை உண்டு பண்ணி ஆண்டவனுக்கும் அரசியலுக்கும் பாலம் அமைக்கிறார்.

"சேதமில் லாதஹிந்து ஸ்தானம் – இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா"[18]

என்றும் பாடுகிறார். இக்கருத்துரு பற்றி "நாடு பராசக்தியாகி விடும்போது நமது நாட்டு அன்பு பக்தியாகிறது, தேசபக்தி ஒரு மார்க்கம் அல்லது மதம் ஆகிறது" என்கிறார் ப. அருணாசலம்.[19]

பாரததேவியின் திருத்தசாங்கம் என்ற கவிதையில் பழைய இலக்கியமரபில் தேசியம் என்ற கருத்தாக்கத்தைப் புகுத்திப் பாடுகிறார். இக்கவிதையில் பாரததேசத்தைப் பராசக்தி அன்னையாகவே குறியீட்டு உருவக முறையில் பாடுகிறார். நாமம் என்ற தலைப்பில்,

"............................ இச்சகத்தில்
பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டுவித்த
பாரதமா தேவியெனப் பாடு".[20] என்கிறார்.
"......................... தேரிற்
பரிமிசை ஊர்வாள் அல்லள் பாரனைத்தும் அஞ்சும்
அரிமிசையே ஊர்வாள் அவள்"[21]

என்பதில் சிங்கவாகனத்தில் ஊர்ந்துவரும் சக்தியாகவே பாரத அன்னையை உருவகிக்கிறார்.

'எங்கள் தாய்' என்ற கவிதையில்

"பூமியி னும்பொறை மிக்குடையாள் பெரும்
புண்ணிய யாம்எங்கள்தாய் – எனில்
தோ மிழைப்பார் முன்நின்றிடுங்கால் கெடுந்
துர்க்கையு மாம்எங்கள் தாய்"[22] என்றும்

"வெண்மை வளர்இம யாலசன் தந்த
விறல்மக ளாம்எங்கள் தாய்"[23] என்றும் பாடுகிறார்

'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி' என்ற கவிதையிலும்

"நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத்து ஏற்றாய்
நிர்மலையே பள்ளி எழுந்தருளாயே"[24]

என்றும் 'பாரதமாதா' என்ற கவிதையில்[25] இந்து மதத்தின் புராதன கருத்துக்களைப் பாரதமாதாவின் செயலாக்கமாகவும் படைக்கிறார். 'பாரத மாதா நவரத்னமாலை' கவிதையில்[26] பாரதமாதவை அன்னை சக்தியாகக் குறியீட்டு உருவகம் செய்கிறார்.

தேசியப்பாடல்களில் அல்லாமல் பிறபாடல்களிலும் இப்புதியமார்க்கம் வெளிப்படுகிறது.

தனக்கு ஆங்கிலக் கல்வியால் நேர்ந்த தீது பற்றிப் பாடும்போது
"சிலமுன் செய்தன நல்வினையானும் நம்
தேவி பாரதத்தன்னை அருளினும்
அலைஉறுத்து நம்பேரிருள் வீழ்ந்துநான்
அழிந்தி டாதொரு வாறு பிழைத்ததே"[27]

என்று பாரத அன்னை தனக்கு அருள்பாலித்ததைச் சொல்கிறார்.

ஆதியாம் சிவனும் அவன் சோதியான சக்தியும்தான் அங்கும் இங்கும் எங்கும் உளவாகும் என்று நம்பிக்கைகொண்ட பாரதி, "நல்லதோர் வீணை செய்தே"[28] என்ற பாடலில் நாட்டுத்தொண்டு செய்ய தெய்வத்துணையை நாடுகிறார்.

பாஞ்சாலிசபதத்தில் கண்ணன் அருளால் பாஞ்சாலியின் சேலை வளர வளர துச்சாதனன் சோர்ந்து விழுதலைக் கண்டு

"தேவர்கள் பூச்சொரிந்தார் – ஓம்
ஜெயஜெய பாரத சக்தி! யென்றே
ஆவலொடு எழுந்துநின்று – முன்னை
ஆரிய வீட்டுமன் கைதொழுதான்
சாவடி மறவரெல்லாம் ஓம்
சக்தி சக்தி சக்தியென்று கரங்குவித்தார்"[29]

என்று கர்ஜனையொலியில் கம்பீரமாகப் பாடுகிறார் பாரதி. கண்ணன் அருளால்துன்பம் துடைக்கப்பட்டபோதும் வீட்டுமனும் வீரர்களும் சக்தியென்றே தொழுவதாகவும் தேவர்கள் ஜெய ஜெய பாரதசக்தி என்று பூச்சொரிந்ததாகவும் பாடுகிறார். 'பாரதசக்தி' என்ற சொல்லாட்சி பாரதத்தைச் சக்தியாக உருவகிப்பதை மிகத்தெளிவாக உணர்த்துகிறது.

இயங்கும் சக்தியைத் தெய்வச்சார்புடன் துடிப்புள்ள மதக்கோட்பாடாக ஏற்கின்ற பாரதி, செயலையும் அதாவது இயக்கத்தையும்–அவ்வியக்கத்தை உண்டுபண்ணும் ஆற்றலாகிய சக்தியையும் தெய்வமாக அறிவுவாத அடிப்படையில் ஏற்றுக் கொண்ட பாரதி மரபு ரீதியான பிடிப்பாலும் அதன் இயல்பூக்கத்தாலும் இந்துமதம் வழி நிற்கும் மக்களின் போக்கினைக் கண்டு நாட்டைச் 'சக்தி' என்ற தெய்வக்குறியீட்டு உருவகத்தில் பொருள் கொள்கிறார். இக்கருத்தாக்கப்படைப்பினைக் குறித்து "மதம் என்ற இரும்புக் குண்டு காலில் கிடந்து இவ்வளவு இழுத்தாலும் செயல்வீரர் என்ற இயல்பின் காரணமாக எவ்வளவோ முன்னேறியிருக்கிறார். காலில் கிடந்த அந்தக்குண்டை அறுத்து எறிவதற்குப்பதில் அதையே கையிலெடுத்துக்கொண்டு எதிரியை விரட்டலாம் என்று நினைத்தார்."[30] பாரதி "மதவாத கருத்துக்களையும் குறியீடுகளையும் நல்ல குறிக்கோளுக்காகப் பயன்படுத்தினாலும், இதுவே பின்னாளில் தேசிய உணர்வைப் பலவீனப்படுத்த நேர்ந்ததும், வகுப்புவாதச் சிந்தனைகளுக்கும், நாட்டுப்பிரிவினைக்கும் இட்டுச் சென்றதும் வேறுகதைகள்"[31] என்று மா.வளவன் கூறும் கருத்து நுண்ணியமுறையில் சிந்திக்கத்தக்கதாகவே உள்ளது.

## சக்தி கருத்தாக்கமும் சமூகமும்

சக்தி – கருத்தாக்க அடிப்படையிலேயே சமதர்ம சமுதாயத்தைப் படைக்கலாம் என்று நினைக்கிறார் பாரதி.

'முரசு' என்ற கவிதையில்,[32] சாதிக்கொடுமைகள் வேண்டாம், பெண்ணடிமை வேண்டாம், தெய்வம் என்பது ஒன்றுதான், மக்களிடம் அன்பு வேண்டும், மக்கள் எல்லோரும் கல்வி கற்றிட வேண்டும், வாழும் மனிதற்கெல்லாம் வயிற்றுக்குச் சோறிட வேண்டும் என்று பலவாறு கூறி முரசினைக் கொட்டச் சொல்கிறார். முப்பத்திரெண்டு பாடல்களாக அமைந்த இக்கவிதையில் தொடக்கப்பாடல் மிகுந்த கவனத்திற்குரியது.

வெற்றி எட்டுத்திக்கும் எட்டக் கொட்டு முரசே
வேதம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே
நெற்றி ஒற்றைக் கண்ணனோடே நர்தனஞ் செய்தாள்
நித்தசக்தி வாழ்க என்று கொட்டு முரசே.

என்று பாரதி 'முரசு' கவிதையைத் தொடங்குகிறான். சமுதாய அழுக்குகளைச் சலவை செய்ய 'சக்தி' நம்பிக்கை கோட்பாடே அவனுக்கு உதவுகிறது. இது பற்றி "சமய உணர்ச்சியைக் கொண்டே பக்தியாகிய ஆயுதத்தைச் சுழற்றிக் கொண்டே வேற்றுமை உணர்ச்சிகளை வெட்டிக்களைந்து, சமதர்மவிதியை ஆழமாக விதைத்துச் சிறந்த நற் பயனை விளைவித்துக் கொள்ளலாம் என்பது பாரதியார் கனவு"[33] என்கிறார் கனகலிங்கம்.

புதியகோணங்கி என்ற கவிதையிலும் சக்தியே குறிசொல்வதாகப் பாடுகிறார்.

> "தரித்திரம் போகுது; செல்வம் வளருது,
> படிப்பு வளருது, பாவம் தொலையுது,
> படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
> போவான் போவான் ஐயோவென்று போவான்
> வேதபுரத்திலே வியாபாரம் பெருகுது"[34]

என்று சமூகத்தில் அகலவேண்டிய அவலங்களையும் வளரவேண்டிய வளங்களையும் 'சக்தி' குறிசொல்வதாகப் பாடுகிறார். இந்தத் தன்னுணர்ச்சிக் கவிதையில் தூயசமூக உணர்ச்சி பாரதியின் தனித்துவ சிந்தனை வெளிப்பாடாகவே அமைகிறது. பாரதியின் ஆன்மசக்தி ஆன்மீக சக்தியில் காலூன்றி மக்கள் சக்தியை மலரச் செய்யும் ஒரு இயங்குசக்தியாக அமைகிறது. பாரதியின் சமூக விஞ்ஞானவுணர்வும் சக்தி – கருத்தாக்கவுணர்வும் பிரித்து உணரமுடியாதவாறு பின்னிப்பிணைந்துள்ளன.

## சக்தி - கருத்தாக்கமும் பெண்விடுதலையும்

பெண், ஆணின் நுகர்ச்சிக்கு ஏற்ற காமப்பொருளாகவோ, சேவைப்பொருளாகவோ அல்லது தெய்வீகப் பொருளாகவோ இல்லாமல் தன்னிலை (Subject) பெற்றுச் செயலூக்கம் பெறுகின்றபோது இந்த மாற்றம் ஆணுக்குக் கலவரத்தை உண்டுபண்ணும். இந்த மாற்றத்தை ஆணாதிக்கச் சமுதாயம் ஏற்றுக் கொள்வதில்லை. அதனாலேயே ஆண்வழிச் சமுதாயப் பண்பாட்டில் பெண்ணுக்கென்று உன்னதமான புனைவுகள் புனையப்பெற்றன. அவை பெண்ணின் யதார்த்த வாழ்நிலையை மூடிமறைக்கவும் பெண்ணை எல்லாக் காலங்களிலும் ஒரே வார்ப்பாக அமைத்துக் கொள்ளவும் மரபுசார்பான படிமத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் பயன்பட்டன.

ஆணாதிக்கத்தினை ஆன்மீகமயமாக்குபவராகவே பல இலக்கியகர்த்தாக்கள் இருந்தனர். பாரதிதாசன் முதன்முதலில் ஆன்மீகத்தை ஆணாதிக்க ஒழிப்புக்குப் பயன்படுத்துகிறார்.

சமுதாயத்திலுள்ள சமத்துவமின்மையை போக்க முதலில் பாலின ஏற்றத்தாழ்வுகளை அகற்றவேண்டும் என்பது பெண்ணியப் பார்வை, அதனைப் பாரதி மிக நன்றாகவே உணர்ந்திருக்கின்றான். பாரதியின் பெண்விடுதலை அல்லது பெண்ணியம் 'சக்தி' கருத்தாக்கத் தளத்தில் நின்று, சமூகம், பண்பாடு ஆகியவற்றின் இயக்கவியல் தன்மையை நன்கு புரிந்துகொண்டு பழமைக்கும் புதுமைக்குமான முரண்பாட்டில் புதுமையின் வழிநின்று புதிய பெண்ணுலகத்தை, ஆற்றல்மிகு பெண்ணை உருவாக்குவதற்கான முற்போக்கான நவீன சிந்தனைப் போக்கில் அமைந்திருந்தது. "வேதகாலத்திலிருந்து இந்தியத் தத்துவமரபில் வெளிப்படையாகவும் இலைமறைகாயாகவும் இருந்துவந்துள்ள இயக்கவியலை பாரதி அறிவுபூர்வமாகப் பற்றிக் கொண்டிருந்தார்."[35] எனவே தான் ஏட்டுக் கருத்தாகயிருக்கும் வேதாந்த தத்துவத்தை, நாட்டுக்கருத்தாக, நடைமுறை வாழ்க்கையாக மாற்றியமைக்க முனைகின்ற புரட்சிவாதியாகப் பாரதி திகழ்கிறார் என்பார் ரகுநாதன்.[36]

இந்துப்பண்பாட்டில் நம்பிக்கை கொண்ட பாரதி மேற்கத்திய சிந்தனையாலும், நிவேதிதாதேவியாரின் சந்திப்பாலும் உந்தப்பெற்று பெண்விடுதலைக்காக வலிமையான குரல் எழுப்பினான். "சாகித தத்துவத்தில் ஒவ்வொரு பெண்ணுமே தேவியின் அம்சம் தான். பெண்கள் குருவினுடைய ஸ்தானத்திற்கும் உயர்த்தப்பட்டு வணங்கப்படுவர். ஸ்ரீராமகிருஷ்ணர் தனது பரஞான குருவாக சாரதாதேவியாரை அமைத்ததும், அரவிந்தர் அன்னை வழிப்பாட்டைத் தம் ஆசிரமத்தில் ஏற்படுத்தியதும் சக்தி வழிபாட்டின் விளைவேயாகும். உண்மையான சக்தி உபாசகன் பெண்களைப் போற்றுவான். அவர்கள் முன்னேற்றத்திற்காக உழைப்பான்."[37] சக்தி உபாசகனான பாரதிக்குப் பெண்விடுதலை பேசுவது மிகவும் இயல்பானதாகவும் எந்தவித பண்பாட்டுச் சிக்கலையும் தோற்றுவிக்காததாகவும் அமைந்து. அவன் பின்பற்றிய சக்திதத்துவம் அவனைத் தீவிரத்தன்மையுடன் பெண்விடுதலை பேசவே உந்தித்தள்ளியது எனலாம். பாரதிக்கு ஷெல்லியுடன் பெரிதும் உடன்பாடுண்டு. பெண்விடுதலை பற்றிய சில கருத்துக்களை அவன் ஷெல்லியிடமிருந்து சுவீகரிக்கவும் செய்தான்; ஷெல்லியின் நேர்முகமான எதிரொலிகளைக் கூட நாம் பாரதியிடம் காணமுடியும். இந்திய நாட்டிலும், தமிழகத்திலும் ஈஸ்வர சந்திரவித்தியாசாகரர், ராஜாராம் மோகனராய், மாயூரம் வேதநாயகம் பிள்ளை முதலிய பலரும் பாரதிக்கு முன்பே பெண் விடுதலைக்காகவும், பெண்கல்விக்காகவும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். அவர்களது பரம்பரையில் நின்று, இந்தியப்பண்பாட்டின் சிறந்த அம்சங்களையும் தனதாக்கிக் கொண்ட பாரதி, பெண் விடுதலையைப் பற்றிய தனது கருத்துக்களைத் தெரிவிக்கிறான். எனினும் புரட்சிப்புலவனான பாரதி உருவாக்கிக்காட்டும் புதுமைப்பெண் இந்திய மண்ணில் அதற்குமுன் வேறு எவரும் உருவாக்கிக்காட்டாத படைப்பாகும்; சொல்லப் போனால், பாரதியின்

புதுமைப் பெண் பல்வேறு அம்சங்களிலும் ஷெல்லி படைத்த சித்னாவின் வாரிசு என்றே கூற வேண்டும்[38] என்று ரகுநாதன் கூறுவது குறிக்கத்தக்கது.

## *தாய்*

பாரதி பாரதநாட்டைத் தாயாகவும் பராசக்தியாகவும் உணர்ந்து பாடியதைப் போலவே தாயையும் பராசக்தியின் வடிவமாகவுமே காண்கிறார். தாயைத் தெய்வமாகக் கருதும்போக்கு பழைய கருத்தியலேயாகும். தெய்வமான அன்னைவடிவிலுள்ள பெண்களை அடிமைப்படுத்தாதீர் என்று அறிவிக்கின்றார்.

"உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவள் என்று அறியிரோ, உணர்ச்சி கெட்டீர்
பண்டாய்ச்சி ஔவை; அன்னையும் பிதாவும்
பாரிடை முன்னறி தெய்வம் என்றார் அன்றோ"[39]

என்று கூறுதல் நோக்கத்தக்கது.

"தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வம் உண்டோ
தாய் பெண்ணே யல்லளோ? தமக்கை தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணேயன்றோ"[40]

என்று பெண்களை அடிமைப்படுத்தலைக் கண்டிக்கிறார்.

## *மனைவி*

மனைவியையும் சக்தியாகவே காண்கிறார்

"காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்
கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்"[41]

என்கிறார். "ஸ்ரீசெல்லம்மா பாட்டு" என்ற தலைப்பில் அமைந்த கவிதையில்[42] தன் மனைவி செல்லம்மாவைத் திருமகளாகவும் பராசக்தியாகவும் காண்கிறார்.

"விண்ணவர் தொழுதிடும் – வீரச்சிங்காதனத்தே
நண்ணிச் சிவன் உடலை – நாடும் அவள் என்கோ"

என்பது பாரதி கவிதை வரிகள்.

உயிரினும் இனியது பெண்மை என்று பெண்மையைப் போற்றுபவர் அதனைச் சக்தியாகவே குறிப்பிடுகிறார்.

"போற்றித் தாயென்று தாளங்கள் கொட்டடா
போற்றித் தாயென்று பொற்குழல் ஊதடா
காற்றில் ஏறியவ் விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே"[43]

என்றும்

"சக்தி என்ற மதுவை உண்போமடா
தாளங்கொட்டித் திசைகள் அதிரவே"[44]

என்றும் பாடுகிறார். காதலையும் தெய்வமாக மதித்து, காதல் இருக்குமிடம் கோயில் என்கிறார்.[45]

## கவிதைத் தலைவி

கவிதைத் தலைவியை மனைத் தலைவியாகக் கூறுகிறார். அக்கவிதைத் தலைவியை மாயாசக்தியின் மகளே என்றும் சக்தி நிலையம் என்றும் அழைக்கிறார்.[46] மேதை மாசக்தியின் பெண்ணே என்றும் விளிக்கிறார்.[47]

## ஆண்-பெண் நிகர்

'ஞால முற்றும் பராசக்தி தோற்றம்' என்று கூறும் பாரதி, பராசக்தி சரிநிகராகவே ஆண் பெண்ணைப் படைத்தாள் என்கிறார்.

உடையவள் சக்தி ஆண்பெண் இரண்டும்
ஒரு நிகர் செய்து உருமை சமைத்தாள்.[48]

என்கிறார். பராசக்தியின் படைப்பில் கீழ்மேல் இல்லை. பெண்விடுதலை பெண்களாலேயே சாத்தியமாக வேண்டும் என்று ஷெல்லியைப் போலவே பாரதியும் பேசுகிறார்.

"கடமை செய்வீர், நம் தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர், துணிவுற்றே"[49]

என்கிறார். ஆண்களோடு இணைந்து சிறுமை தீர நம் தாய்த்திருநாட்டைத் திரும்ப வெல்வதில் சேர்ந்திங்கு உழைப்போம்"[50] என்று நாட்டுப் பணி ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் உரியது என்கிறார்.

பெண்ணின் விடுதலை உணர்வை, அந்த உணர்வு சக்தியைக் குறைத்து மதித்திட வேண்டாம் என்று எச்சரிப்பது போல,

"அக்கினி குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு – தழல்
வீரத்திற் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ"[51]

என்று நெஞ்சு நிமிர்த்திக் கேள்விக் கணை தொடுக்கிறார் பாரதி.

அன்பையும் அறிவையும் ஒன்றையொன்று மறுக்கின்ற எதிரிடையாகக் காணும் இந்துக் கோட்பாடு குறைபாடானது. இரண்டிற்கும் இடையினுள் இயக்கவியல் உறவை உணராமல் இரண்டின் பிரதிநிதிகளாகப்

பெண்ணையும் ஆணையும் முறையே நிறுத்தி இருவரும் இயற்கையிலேயே இருவேறுபட்ட இயல்புகளையும் வாழ்க்கையையும் செயல்பாடுகளையும் உடையவர்கள் என்று பிரித்துப் பார்க்கும் கருத்தாக்கத்தை முதலில் ஒழிக்க வேண்டும் என்ற அறிவியல் பார்வை கொண்ட பாரதி,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"[52]

என்று கம்பீரமான குரலில் அறிவிக்கிறார். ஆண்மேலின சமுதாயத்தில் ஆணின் நலனை முன்னிட்டு பெண்ணை வீட்டுக்குள் அடைத்து வைத்து அதற்குள் அவளுடைய பாலியல் உற்பத்திச் செயல்பாட்டை மட்டும் பெரிதுபடுத்தும் பண்பாட்டுப் புனைவைத் தகர்த்துப்பாடுகிறார்.

"நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீரசுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்களின் குணங்களாம்"[53]

என்று பெண்ணுக்குப் புதிய படிமத்தைப் படைக்கிறார். பழைய மரபின் மீது பாரதியின் புதுமைப்பெண் காரசாரமாகக் கண்டனக் கணை பாய்ச்சுகிறாள் என்பார் ஜீவா.[54]

எந்தக் கருவி தங்களைக் காலம் முழுவதும் முடக்கி அழுத்திப் போட்டதோ அதைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டதாக பிரகடனம் செய்கிறாள் புதுமைப்பெண். எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை; தகுதி பெற்றவர்கள் பெண்கள். எனவே தனி பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம் என்றும் அறிவிக்கிறாள் பாரதியின் புதுமைப்பெண்.

பெண்ணை ஒரு பக்கம் பாலியல் தளத்தில் நிறுத்தி அவளை அழகுப் பொருளாகப் பார்க்கும் பார்வை. குடும்பம்—சமூகம் என்ற தளத்தில் பெண்ணை நிறுத்தி பத்தினி, பதிவிரதை என்று பார்க்கும் பார்வை. இம்முரண்பட்ட பார்வையில் சிக்கலுக்கு ஆளாகிறாள் பெண். அவளுக்கு ஒழுக்க விதிகள் கடுமையாக விதிக்கப்படுகின்றன. கற்பு என்பது பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டது. எனவேதான் சட்டத்தைத் தன் பொறுப்பில் ஏற்ற புதுமைப்பெண்

"கற்புநிலை யென்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"[55]

என்று சட்டம் வகுக்கிறாள்.

புதுமைப்பெண்ணைத் தாய் சிவசக்தி என்று பாரதி கூறுகிறார்.

"பூணும் நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்"[56]

என்றும்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்கள் ஆக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி அன்னைநல்
அருளி னாலொரு கன்னிகை ஆகியே
தேற்றி உண்மைகள் கூறிட வந்திட்டாள்"[57]

என்கிறார். பராசக்தியே புதுமைப்பெண்ணாக வந்திட்டாள் என்கிறார். பாரதியின் சக்தி தத்துவமே பாரதியின் பெண் விடுதலையின் வித்தாக இருக்கிறதை உணரலாம். 'பிரகிருதி' என்ற படைப்பின் மூலப் பொருளிலிருந்து (மூலப்பொருள் – இயற்கை) மற்ற அனைத்தும் உற்பத்தியாகின்றன என்ற சக்தி தத்துவத்தின் அடிப்படையிலேயே பாரதி புதுமைப்பெண்ணைப் பராசக்தியாகப் படைக்கிறார் எனலாம்.

பாரதி கட்டுரை ஒன்றில் "நான் எல்லா வகையிலும் உனக்குச் சமமாக வாழ்வதில் உனக்குச் சம்மதமுண்டானால் உன்னுடன் வாழ்வேன். இல்லா விட்டால் இன்று இராத்திரி சமையல் செய்ய மாட்டேன். எனக்கு வேண்டியதைப் பண்ணித் தின்று கொண்டிருப்பேன். உனக்குச் சோறு போட மாட்டேன். நீ அடித்து வெளியே தள்ளினால் ரஸ்தாவில் கிடந்து சாவேன். இந்த வீடு என்னுடையது. இதை விட்டு வெளியேறவும் மாட்டேன் என்று கண்டிப்பாகச் சொல்லிவிடவும் வேண்டும். இங்ஙனம் கூறும் தீர்மான வார்த்தையை, இந்திரிய இன்பங்களை விரும்பியேனும், நகை, துணி முதலிய வீண் டம்பங்களை இச்சித்தேனும் நிலையற்ற உயிர் வாழ்வைப் பெரிதாகப் பாராட்டியேனும் மாற்றக் கூடாது. சிறிது சிறிதாக, படிப்படியாக ஞாயத்தை ஏற்படுத்திக் கொள்வோம் என்னும் கோழை நிதானக் கட்சியாளரின் மூடத்தனத்தை நாம் கைக் கொள்ளக்கூடாது. நமக்கு ஞாயம் வேண்டும். அதுவும் இந்த க்ஷணத்தில் வேண்டும். .......................... இப்படிச் சொல்லுவதால் நமக்கு மரணமே நேரினும் நாம் அஞ்சக்கூடாது. ஸகோதரிகளே! ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. தர்மத்துக்காக மடிகிறவர்களும் மடியத்தான் செய்கிறார்கள். ஆதலால் ஸகோதரிகளே; பெண் விடுதலைக்காக இந்த க்ஷணத்திலேயே தர்மயுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்கு மஹாசக்தி துணை செய்வாள்"[58] என்று பாரதி வலுவான வார்த்தைகளால் பெண் விடுதலை பேசுகிறார். அதற்குப் பராசக்தி துணை செய்வாள் என்றும் கூறுதலை நோக்க வேண்டும்.

## பெண்ணிய நோக்கில் சக்தித் தத்துவம்

(1) பெண்ணைத் தியாகத்தின் பிறப்பிடம்; அன்பின் சிகரம்; கருணைக்கடல் என்றுகூறப்படும் கருத்தாக்கங்கள் போலியானவை. இப்போலிப் புனைவுகள் பெண்ணை உயர்நத இலட்சியத்தில் நிறுத்தி, ஒடுக்கப்பட்டவர்களை யதார்த்தநிலைமைக்கு அடங்கிப் போகச்செய்யும் உத்திகளாகும் என்பர். (2) சக்தித் தத்துவம் பெண்ணை முழுமையாக வளர முடியாதபடிச் செய்கிற பெண்மைப்புதிரின் ஓரம்சமாகும். அதனை மேலும் வலுவூட்டுவனவாகும் என்பர்.[50]

(3) சக்தித் தத்துவம் என்பது ஆணாதிக்கக் கருத்தியலின் ஒரு வெளிப்பாடாகும். அது பெண்ணைத் தெய்வம் என்று ஒருபக்கம் புகழ்கிறது; மறுபக்கம் மறுக்கிறது.

(4) பெண்ணைப் பால்அடிப்படையில் மட்டும் அணுகாமல், ஒரு மானிடப் பிறவியாக, சகமனுஷியாகப் பார்க்கவேண்டும். அப்போது பிற தெய்வீகப் புனைவுகள் அவளுக்குத் தேவைப்படாது. பெண்ணை மனித உயிரியாகப் பார்க்காமல் அவளுக்கு மகுடம் சூட்டும் புனைவுகள் இன்னொரு விதமான ஒடுக்குமுறையாகவே பெண்ணியம் கருதுகிறது.

பாரதி 'சக்தி' கருத்தாக்கச் சிந்தனையுடன் பெண்விடுதலை பற்றிப் பேசினாலும் யதார்த்தத்தில் ஒளிவுமறைவு இல்லாமல் கன்னத்தில் அறைவதுபோல உரத்த சிந்தனையுடன் பெண்விடுதலை பற்றிக் கூறியிருக்கிறார் என்பதை மறுப்பதற்கில்லை. பாரதியின் சக்திமார்க்கம் பாலின வேற்றுமையைப் புரட்சிகரமான சமுதாயமாற்றத்தை நோக்கிய செயல்பூர்வமான நம்பிக்கையாகும் என்பதில் ஐயம்கொள்ள இடமில்லை.

## இயக்கமாகச் சக்தி

மாற்றம் ஒன்றே உலகில் மாறாதது. மாறாத இயல்புடைய மாற்றம் நிகழ இயக்கம் நடைபெறுதல் வேண்டும். அந்த இயக்கத்தையும் அவ்வியக்கத்தைத் தரும் ஆற்றலையும் பாரதி சக்தியாகக் கருதுகிறார் என்றும் கூறலாம்.

"எல்லாம் அசைவில் இருப்பதற்கே சக்திகளைப்
பொல்லா பிரமா, புகுத்துவிட்டாய்"[60]

என்று இயக்கத்தைத் தருவது சக்தி என்று பாரதி குயில்பாட்டில் கூறுகிறார்.

இயங்காத பொருள்களிடத்திலும் உறைந்து கிடக்கும் சக்தி; இயங்கும் பொருள்களிடத்தும் பொருந்தி நிற்கும் சக்தி. இதனையே வசன கவிதையில்

"மின்சக்தி இல்லாத இடம் இல்லை
எல்லா தெய்வங்களும் அங்ஙனமே

கருங்கல்லிலே, வெண்மணலிலே, பச்சை இலையிலே
செம்மலரிலே, நீலமேகத்திலே,
காற்றிலே, வரையிலே – எங்கும் மின்சக்தி உறங்கிக் கிடக்கிறது."[61]

என்கிறார்.

மின்சக்தியைக் குறிப்பிட்ட பாரதி ஒலிச் சக்தியையும் அறிவுபூர்வமாக விளக்குகிறார்.

"பாம்புப்பிடாரன் குழல் ஊதுகின்றான்
குழலிலே இசை பிறந்ததா?
தொளையிலே பிறந்ததா?
பாம்புப்பிடாரன் மூச்சிலே பிறந்ததா?
அவனுள்ளத்தில் பிறந்தது; குழலிலே வெளிப்பட்டது
உள்ளம் தனியே ஒலிக்காது. குழல் தனியே இசை புரியாது.
உள்ளம் குழலிலே ஒட்டாது
உள்ளம் மூச்சிலே ஒட்டும். மூச்சுக் குழலிலே ஒட்டும்
குழல் பாடும்
இஃது சக்தியின் லீலை
அவள் உள்ளத்திலே பாடுகிறாள். அது குழலின்
தொளையிலே கேட்கிறது.
பொருந்தாத பொருள்களைப் பொருத்தி வைத்து
அதிலே இசை உண்டாக்குதல் சக்தி"[62]

என்று தொடரும் வசனகவிதையில்

"கருவிபல பாணன் ஒருவன்
தோற்றம் பல சக்தி ஒன்று."[63]

என்று பலப்பல அடிப்படையில் ஒரே ஒலிச்சக்தி விளையாடுகின்றது என்று ஒலிச்சக்தியை நமக்கு உணர்த்துகிறார்.

இயக்கம் கொண்ட காற்றையும் சக்தியின் குமாரனாகவும் சக்தியாகவும் சொல்கிறார்.[64]

வசனகவிதையில் ஞாயிறு பற்றிப்பாடும்போது அறிவியல் பார்வையில் ஞாயிறு என்ற கோளத்தைப் பிற செவ்வாய், புதன் முதலியன வட்டம் இடுவதையும் ஞாயிற்றின் சக்தி எல்லையைக் கடக்காது என்றும் அது ஒரு வரையறுத்த வட்டத்தில் சூழலுவது ஒரு சக்தியால் என்று ஞாயிற்றைப் போற்றுகிறார்.[65]

உடலில் வலிமை இருக்கும் மட்டும் சக்தியாக உயிர் தங்கியிருக்கும். பிறகு அவ்வுயிர் வலிமையுடைய பிறிதொரு உடலில் தோன்றும். உயிராகிய சக்தி தங்குதற்குரிய இடம் தான் உடல். எந்த வடிவுடைய உடலிலும் சக்தி உறையலாம். உடலைப் பேணினால் சக்தியைக் காக்கலாம். சக்தி உடம்பில்

இருக்கும்போதுதான் உடலில் சுகமும் வலிமையும் இருக்கின்றன. உடலுக்கு வலிமை கொடுப்பது சக்தி என்கிறார்

"சக்தி அநந்தம்; எல்லையற்றது, முடிவற்றது,
அசையாமையில் அசைவு காட்டுவது,
பிணைப்பது, கலப்பது, உதறுவது,
புடைப்பது, வீசுவது, சுழற்றுவது,
கட்டுவது, சிதறடிப்பது, தூற்றுவது,
ஊதிவிடுவது, நிறுத்துவது, ஓட்டுவது,
ஒன்றாக்குவது, பலவாக்குவது,
சக்தி குளிர் செய்வது, அனல் தருவது,
குதுகுதுப்புத் தருவது
குதூகலம் தருவது, நோவு தருவது, நோவு தீர்ப்பது,
இயல்பு தருவது, இயல்பு மாற்றுவது,
சோர்வு தருவது, ஊக்கம் தருவது,
எழுச்சி தருவது, கிளர்ச்சி தருவது,
மலர்விப்பது, புளகம் செய்வது,
கொல்வது, உயிர் தருவது,
சக்தி மகிழ்ச்சி தருவது, சினம் தருவது,
வெறுப்பு தருவது, உவப்பு தருவது,
பகைமை தருவது, காதல் மூட்டுவது
உறுதி தருவது, அச்சம் தருவது
கொதிப்பு தருவது, ஆற்றுவது
சக்தி முகர்வது, சுவைப்பது, தீண்டுவது, கேட்பது, காண்பது
சக்தி நினைப்பது, ஆராய்வது, கணிப்பது, தீர்மானம் செய்வது
கனாக் காண்பது, கற்பனை புரிவது, தேடுவது, சுழல்வது,
பற்றி நிற்பது, எண்ணமிடுவது, பகுத்தறிவது,
சக்தி மயக்கம் தருவது, தெளிவு தருவது சக்தி உணர்வு."[68]

என்று மிக நீண்ட விளக்கம் தருகிறார் பாரதி, மெய், வாய், கண் மூக்கு, செவி, மனம், அறிவு ஆகிய இவற்றால் நிகழும் செயல்களையும் அதனால் விளையும் உணர்வுகளையும் 'சக்தி' என்கிறார்.

புவிஈர்ப்பு சக்தியையும் 'சக்தி' என்று காணுகிறார்.

"கடலே காற்றைப் பரப்புகின்றது
விரைந்து சுழலும் பூமிப்பந்தில் பள்ளங்களிலே தேங்கி இருக்கும்
கடல்–நீர் அந்த சுழற்சியிலே தலைகீழாகக் கவிழ்ந்து
திசைவெளியில் ஏன் சிதறிப் போய்விடவில்லை?

..........................

கிணறு நம் தலையிலே கவிழ்கிறதா?
அதுபற்றியே கடலும் கவிழவில்லை.

பராசக்தியின் ஆணை
அவள் மண்ணிலே ஆகர்ஷணத் திறமையை நிறுத்தினாள்
அது பொருள்களை நிலைப்படுத்துகிறது.
மலை நமது தலைமேலே புரளவில்லை.
கடல் நமது தலைமேலே கவிழவில்லை
ஊர்கள் கலைந்து போகவில்லை
உலகம் எல்லாவகையிலும் இயல்பெறுகின்றது.
இஃது எல்லாம் அவளுடைய திருவருள்."67

என்று புவிஈர்ப்பு சக்தியையும் இங்கு பராசக்தியாகப் போற்றுகிறார்.

பராசக்தியின் தோற்றம் அறிவுக்குப் புலப்படாது என்கிறார்.

"பராசக்தியைப் பாடுகின்றோம்.
இவள் எப்படி உண்டாயினாள்? அதுதான் தெரியவில்லை
இ.வள்தானே பிறந்த தாய், 'தான்' என்ற பரம்பொருளினிடத்தே,
இவள் எதிலிருந்து தோன்றினாள்? 'தான்' என்ற பரம்பொருளில்
இருந்து எப்படித் தோன்றினாள்? தெரியாது. படைப்பு நமது
கண்ணுக்குத் தெரியாது; அறிவுக்கும் தெரியாது.
சாவு நமது கண்ணுக்குத் தெரியும்; அறிவுக்குத் தெரியும்.
வாழ்க்கையாவது சக்தியைப் போற்றுதல்
இதன் பயன் இன்பம் எய்தல்."68

இதில் படைப்பு ரகசியமானது என்கிறார்.

வசனகவிதைகளில் விரிவாகப்பேசிய சக்தி பற்றிய விளக்கத்தைப் 'பாரதிஅறுபத்தாறில்'

"தீராத காலமெலாந் தானும் நிற்பாள்
தெவிட்டாத இன்னமுதின் செவ்வி தழ்ச்சி
நீராகக் கனலாக வானாகக் காற்றாய்
நிலமாக வடிவெடுத்தாள், நிலத்தின் மீது
போராக நோயாக மரணமாகப்
போந்து இதனை அழித்திடுவாள்; புணர்ச்சி கொண்டால்
நேராக மோனமஹா னந்த வாழ்வை
நிலத்தின்மிசை யளித்து அமரத்தன்மை ஈவாள்
மாகாளி பராசக்தி உமையாள் அன்னை
வைரவி, கங்காளி, மனோன்மணி, மாமாயி
பாகு ஆர்ந்த தேமொழியாள் படரும் செந்தீ
பாய்திடுமோர் விழியுடையாள் பரமசக்தி
ஆதாரம் அளித்திடுவாள், அறிவுதந்தாள்
ஆதிபரா சக்தி எனது அமிர்தப் பொய்கை"

என்று பேசுகிறார்.

அறிவுவாதம் பேசும் போதே ஆன்மிகவாதத்தையும் உடன் இணைத்துப்பேசுகிறார். பாரதி கடவுள் கொள்கையிலே அறிவுக்குப் புறம்பான அம்சங்களைப் புறந்தள்ளி அறிவுசார்பான அம்சங்களைப் புகுத்தினாலும் இந்துமதப் பிடிப்பு அவரிடம் ஆழப்பதியம் போட்டிருத்தலையும் அறியமுடிகிறது.

## பக்திநோக்கிலும் பரந்துபட்ட நோக்கிலும் சக்தி

உலகையும் உலகில்தோன்றிய பொருள்களையும் அதன் தொழில்கயையும் சக்தி ரூபமாகவே பாரதி கண்டார். பராசக்தியை எந்நேரமும் தன் சிந்தையில் கொண்டவராகவே பாரதி விளங்கினார்.

"வாழ்க பராசக்தி – நினையே
வாழ்த்திடுவோர் வாழ்வார்
வாழ்க பராசக்தி – இதை என்
வாக்கு மறவாதே"[70]

என்று உறுதிபடச் சொல்கிறார். பராசக்தியே தன்மனத்தில் வந்து எழுதுகிறாள் என்பதை

"எனக்குமுன்னே சித்தர்பலர் இருந்தார் அப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்!
மனத்தினிலே நின்றிதனை எழுதுகின்றாள்
மனோன்மணியென் மாசக்தி வையத்தேவி."[71]

என்று உலக அன்னையாக சக்தியை உணர்கிறார். பாஞ்சாலிசபதத்தில் வீமன் கூறும் சபதமொழிகளைத் தடையற்ற பராசக்தியின் வார்த்தைகளாகவே கூறுகிறார்.

"சக்தி தொழிலே அனைத்தும் எனில் சார்ந்த
நமக்கு சஞ்சலம் ஏன்?"[73]

என்று அனைத்துத் தொழிலும் சக்தியின் தொழில் என்கிறார்.

"செய்யும் கவிதை பராசக்தியாலே
செயப்படுங் காண்"[73]
"பாட்டினிலே சொல்லுவதும் அவள் சொல்லாகும்
பயனின்றி உரைப்பாளோ? பாராய் நெஞ்சே"[74]

என்றும் கூறுகிறார்.

"காண்பதுவே உண்மை கண்டாய்
காண்ப தல்லால் உறுதியில்லை
காண்பது சக்தியாம் – இந்தக்
காட்சி நித்தியமாம்"[75]

என்று துடிப்புள்ள மதக்கோட்பாட்டை ஏற்று எல்லாக் காட்சிகளையும் ஏற்று எல்லாக் காட்சிகளையும், காணப்படும் பொருட்களையும் காணப்பயன்படும் சித்தத்தையும் 'சக்தி' என்கிறார்.

அறிவையும் சக்தியாகக் காணும் பாரதி

"போந்த நிலைகள் பலவும் பராசக்தி
பூணும் நிலையாமே – உப
சாந்த நிலையே வேதாந்த நிலையென்று
சான்றவர் கண்டனரே"[76]

என்றும் கூறுகிறார்

"தவறாது உணர்வீர்
புவியீர் மாலும்
சிவனும் வானோர்
எவரும் ஒன்றே
ஒன்றே பலவாய்
நின்றோர் சக்தி."[77]

என்று எல்லாத் தெய்வங்களையும் சக்தி உருவிலேயே காண்கின்றார்.

"..................................................
ஒருமொழி 'ஓம் நமசிவாய' என்பர்
'ஹரி ஹரி' யென் றிடினுமதே; ராமராம
'சிவ சிவ' வென்றிட்டாலும் அஃதேயாகும்
தெரிவுறவே 'ஓம்சக்தி' யென்று மேலோர்
ஜெயம் புரிவது அப்பொருளின் பெயரேயாகும்."[78]

என்று ஹரி, ராமன், சிவன் ஆகிய தெய்வங்களையும் 'சக்தி' என்றே குறிப்பிடுகிறார்.

பாஞ்சாலி சபதத்தில்[79] வாலை, உமாதேவி, மகாளி, துர்க்கை ஆகியோரும் சக்தியின் வடிவமே என்கிறார்.

"யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே
வேதச்சுடரே, மெய்யாங் கடவுளே"[80]

என்று விநாயகரை வழிபடும் பாடலில் அனைத்துத் தெய்வங்களையும் இயற்கைத் தெய்வமாகக் கருதும் பாரதியின் அறிவுவாத தெய்வக்கோட்பாடும் புலப்படுகிறது. மெய்ப்பொருள் ஒன்று. அதை அறிஞர்கள் பல்வேறு பெயர்களால் குறிப்பிடுகின்றனர் என ரிக் வேதம் கூறுகிறது. இதன் அடிப்படையிலேயே மூலமா சக்தியாக அனைத்துத் தெய்வங்களையும் பாரதி கருதுகிறார்.

'சக்தி' என்ற கவிதையில் பாரதி சக்திக்குக் கொடுக்கும் விளக்கம் குறிப்பிடத்தக்கது.

"துன்பம் இலாத நிலையே சக்தி
.இன்பம் முதிர்ந்த முதிர்வே சக்தி"[81]

என்று துன்பமில்லாத இன்பம் நிறைந்த வாழ்வுநிலையைச் 'சக்தி'யாகக் கூறுகிறார்.

"தூக்கம் இலாக்கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி
தெய்வத்தை எண்ணும் நினைவே சக்தி
உள்ளத்து ஒளிரும் விளக்கே சக்தி"[82]

என்று மனித நல்லுணர்வைச் 'சக்தி' யாகக் கூறுகிறார்.

"ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி
சொல்லில் விளங்கும் சுடரே சக்தி
தீம்பழம் தன்னில் சுவையே சக்தி"[83]

என்று சில நற்பண்புகளைச் 'சக்தி' யாகக் கூறுகிறார்.

"முன்பு நிற்கின்ற தொழிலே சக்தி
முத்தி நிலையின் முடிவே சக்தி"[84]

என்று செயலையும் செயலற்ற தன்மையையும் 'சக்தி'யாகவே காண்கிறார்.

"ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி"[85]

என்று செயலூக்கத்திற்குத் தேவையான முயற்சியையும் சக்தியாகவே காண்கிறார்.

"பாம்பை அடிக்கும் படையே சக்தி
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
மாநிலம் காக்கும் வலியே சக்தி
விண்ணை அளக்கும் விரிவே சக்தி"[86]

என்று ஆற்றலைச் சக்தியாக உணர்கிறார்.

"சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி"[87]

என்று தவத்தைச் சக்தியாகவும்

"சாம்பரைப் பூசி மலைமிசை வாழும்
சங்கரன் அன்புத் தழலே சக்தி"[88]

என்றும் கூறுகிறார்.

பாரதியின் 'சக்தி' கவிதை விளக்கத்திலிருந்து செயலும் செயலின் விளைவான பண்புகளும் 'சக்தி' கவிதையில் 'சக்தி' யாகச் சொல்லப்படுகிறது என்று விளக்கலாம். இது மட்டுமல்லாமல் நல்வாழ்வும் அதற்குத் தேவையான நற்பண்பு, நற்செய்கை, ஆற்றல், அறிவு, வலிமை, முயற்சி, தவம், முக்தி ஆகியவற்றையெல்லாம் 'சக்தி' என்ற ஆதாரப் பொருளில் அடக்கிக் காண்கிறார் என்றும் கூறலாம். பாரதியின் கடவுள் கொள்கையிலும் பகுத்தறிவு வாதம் மேலோங்கியிருப்பதை இது உணர்த்துகிறது. பாரதியின் இந்நோக்கினைக் குறித்து "பெண்தான் படைப்பின் அடிப்படைக் காரணமென்பதால் ஆற்றலைப் பெண் தெய்வமாக உருவகம் செய்து வணங்குவதே சாக்தம் என்பது. சக்தி வழிபாடு பகுத்தறிவிற்குப் பொருத்தமாக அமைந்திருப்பதை உணர்ந்தே பாரதி இவ்வழிபாட்டில் ஈடுபட்டார்"[89] என்பர்.

எனவே பாரதி வாழ்க்கை இயக்கத்திற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய ஒன்னறப் பக்தி நோக்கிலும், பரந்துபட்ட நோக்கிலும் 'சக்தி' என்று கருதுகிறார் என்லாம்.

பாரதி நம்பி ஏற்றுக் கொண்ட சக்தி–கருத்தாக்கக் கோட்பாட்டினை அடியொற்றியே அவரின் தேசியம், சமூகம், பெண்விடுதலை, வாழ்நிலையின் இயக்கம், பக்தி பற்றிய கருத்தியல்கள் அமைந்திருக்கின்றன. அக்காலத்திய புறச்சூழலைக் கணக்கில் கொண்டும் சக்தி – கருத்தாக்கத்தைப் பயன்படுத்தினார். இத்தொன்மைக் கருத்தாக்கத்தில் பாரதி நவீனத்துவம் படைத்து இன்னும் ஒரு யுகப்புருஷனாகவே நினைக்கப்படும் மதிப்பைப் பெறுகிறார் என்பதே உண்மையாகும்.

## குறிப்புகள்

1. கார்த்திகேசு சிவத்தம்பி, முடிவில் ஒரு முன்னுரை, பாரதி ஒரு சமூகவியல் பார்வை, ப. 145.
2. க. கைலாசபதி, பாரதி ஆய்வுகள், ப. 178.
3. மேலது, பக். 128–129.
4. மேலது, ப. 4.
5. பெ. மணியரசன், பாரதி ஒரு சமூகவியல் பார்வை, ப. 50.
6. சி. கனகசபாபதி, பாரதியும் பிறகும் பிச்சமூர்த்தியும் பிறரும், ப. 131.
7. மா. வளவன், பாரதி ஒரு சமூகவியல் பார்வை, ப. 28.
8. பெ. மணியரசன், பாரதி ஒரு சமூகவியல் பார்வை, ப. 52.
9. நுஃமான், திறனாய்வுக் கட்டுரைகள், ப. 160.

10. கைலாசபதி, பாரதியின் ஆய்வுகள், ப. 270.
11. நுஃமான், திறனாய்வுக் கட்டுரைகள், ப. 152.
12. மா. வளவன், பாரதி ஒரு சமூகவியல் பார்வை, ப. 39.
13. மேலது, ப. 28.
14. பாரதியார், பாரதியார் கவிதைகள், சக்திவெளியீடு, ப. 479.
15. சி. கனகசபாபதி, பாரதி–பாரதிதாசன் கவிதை மதிப்பீடு, ப. 65.
16. பாரதியார், பாரதியார் கவிதைகள், பாஞ்சாலி சபதம், முன்னுரை, ப. 428.
17. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப. 6.
18. மேலது, ப. 369.
19. ப. அருணாசலம், கவியரசர் பாரதி, ப. 27.
20. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப. 11.
21. மேலது, ப. 12.
22. மேலது, ப. 15.
23. மேலது, ப. 15.
24. மேலது, ப. 21.
25. மேலது, ப. 23.
26. மேலது, ப. 215.
27. மேலது, ப. 321.
28. மேலது, ப. 173.
29. பாரதியார், பாரதியார் கவிதைகள், பாஞ்சாலி சபதம், ப. 533.
30. பெ. மணியரசன், பாரதி ஒரு சமூகவியல் பார்வை, ப. 76.
31. மா. வளவன், பாரதி ஒரு சமூகவியல் பார்வை, ப. 28.
32. பாரதியார், பாரதியார் கவிதைகள், முரசு, ப. 371.
33. கனகலிங்கம், என் குருநாதர், ப. 53.
34. பாரதியார், பாரதியார் கவிதைகள், புதியகோணங்கி, ப. 379.
35. நவபாரதி, இன்றைய தத்துவஞானப் போராட்டத்தில் பாரதியின் பாத்திரம், ப. 11
36. தொ.மு.சி. ரகுநாதன், பாரதியின் காலமும் கருத்தும், ப. 110.
37. ஸ்ரீதரன், பாரதியும் பராசக்தியும், ப. 41
38. தொ. மு. சி. ரகுநாதன், பாரதியும் ஷெல்லியும், ப. 139.

39. பாரதியார், பாரதியார் கவிதைகள், பாரதி அறுபத்தாறு, ப. 335.
40. மேலது, ப. 336.
41. மேலது, பாரதி அறுபத்தாறு, ப. 336.
42. மேலது, ஸ்ரீசெல்லம்மாபாட்டு, ப. 346.
43. மேலது, பாரதியார் கவிதைகள், பெண்மை, ப. 358.
44. மேலது, ப. 358.
45. மேலது, அந்திப்பொழுது, ப. 351.
46. மேலது, மனைத்தலைவிக்கு வாழ்த்து, ப. 320.
47. மேலது, ப. 321.
48. மேலது, பெண்விடுதலை, ப. 360.
49. மேலது, ப. 361.
50. மேலது, ப. 361.
51. மேலது, அக்கினிக் குஞ்சு, ப. 361.
52. மேலது, பெண்கள் விடுதலைக் கும்மி, ப. 359.
53. மேலது, புதுமைப் பெண், ப. 355.
54. ஜீவா, புதுமைப் பெண், ப. 36.
55. பாரதியார், பாரதியார் கவிதைகள், பெண்கள் விடுதலைக்கும்மி, ப. 359.
56. மேலது, புதுமைப் பெண், ப. 355.
57. மேலது, ப. 357.
58. பாரதியார், பாரதியார் கட்டுரைகள், மாதர், ப. 335.
59. பரிமளம், இந்துப் பெண்ணியம், ப. 112.
60. பாரதியார், பாரதியார் கவிதைகள், குயில் கண்ணி. ப. 187, 359.
61. மேலது, வசனகவிதைகள், ப. 652.
62. மேலது, பக். 659–660.
63. மேலது, ப. 660.
64. மேலது, ப. 665.
65. மேலது, ப. 649.
66. மேலது, ப. 666.

67. மேலது, பக். 653–654.

68. மேலது, பக். 676–677.

69. மேலது, பாரதி அறுபத்தாறு, ப. 321

70. மேலது, பிழைத்த தென்னந்தோப்பு,. ப.393

71. மேலது, பாரதி அறுபத்தாறு, ப.321

72. மேலது, விநாயகர் நான்மணிமாலை, ப.140

73. மேலது, ப.140

74. மேலது, நெஞ்சொடு சொல்வது, ப.188

75. மேலது, பொய்யோ? மெய்யோ? பக். 267–268

76. மேலது, அறிவே தெய்வம், ப.256

77. மேலது, கண்ணன் திருவடினமே, ப.205

78. மேலது, பாரதி அறுபத்தாறு, ப.340

79. மேலது, பாஞ்சாலி சபதம், ப.511

80. மேலது, விநாயகர் நான்மணிமாலை, ப.138

81. மேலது, சக்தி, ப. 180

82. மேலது, ப. 180

83. மேலது, சக்தி, ப.180

84 மேலது, ப. 180.

85. மேலது, ப. 180

86. மேலது, ப. 180

87. மேலது, ப. 180

88. மேலது, ப. 180

89. ஸ்ரீதரன், என், பாரதியின் பராசக்தி, ப. 33.

## பயன்பட்ட பாரதியார் கவிதைகள்

1. பாரதியார் கவிதைகள், நியு செஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, ஜனவரி, 1994.

# 6

# சாதி என்ற கருத்தாக்கம்

தே. ஞானசேகரன்

சாதி என்பது இந்தியச் சூழலில் ஒரு யதார்த்தம். நாம் அதை மறுத்துவிட முடியாது. உலகச் சமூக அமைப்பில் சாதி என்பது இந்து மதத்தின் தனிப்பட்ட பங்களிப்பாகக் கருதப்படுகிறது. இச்சாதியின் அடிப்படையிலேயே ஒருவனின் தகுதியும் நிர்ணயிக்கப்படுகிறது. உலகின் எந்தப் பகுதியில் பிறக்கும் எவனொருவன் மீதும் மதம், ஏழை, பணக்காரன் என்ற முத்திரைகள் மட்டுமே பதிக்கப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் பிறக்கின்ற ஒருவன் மேற்சொன்ன முத்திரைகளுடன் சாதி முத்திரையையும் தரித்துக் கொண்டுதான் இந்திய மண்ணில் கால் பதிக்க வேண்டியிருக்கிறது. இப்படியாக இந்தியாவுக்கு மட்டுமே உரித்தானதும் தனித்தன்மை வாய்ந்ததுமான சாதியமைப்பைக் குறித்து பாரதி தனது கவிதைகளிலும் உரைநடையிலும் பல கருத்துக்களைச் சொல்லியுள்ளார். இக்கட்டுரை பாரதியின் பாடல்களில் இடம்பெற்றுள்ள சாதி பற்றிய கருத்துக்களை முறைப்படுத்தி விளக்குகின்றது.

## சாதியின் தோற்றம் : பாரதியின் கருத்துக்கள்

பாரதி வேதங்களில் குறிக்கப்படும் நான்கு வர்ணங்களும் தொழிலின் அடிப்படையில் அமைந்ததென்றும் அது பிற்காலத்தில் பிறப்புடன் தொடர்புபடுத்தப்பட்டதாகவும் கருதுகின்றார். பாரதியின் உரைநடையில் "நாற்குலம்" எனும் தலைப்பில் திலகர் சொல்வதாகச் சொல்லப்படும் கருத்துக்கள் பாரதிக்கும் உடன்பாடே. "நான்கு வர்ணங்கள் பிறப்பினாலேயேல்ல, குலத்தாலும் தொழிலாலும் உண்டாயின." என்று கீதை சொல்கிறது. ஏனென்றால், எல்லாச் செய்கையும் ஈசனுடைய செய்கை, சோம்பல் ஒன்றுதான் இழிவு, அதுதான் சண்டாளத்தனம். எந்தத் தொழிலையும் நேரே செய்வோர் மேன்மக்கள்.[1]

ஒருவன் தான் பிராமணனாக வேண்டும் என்று கருதினால், அவன் உண்மை ஆராய்ச்சியே முதற் காரியமாகக்கொண்டு வாழக்கடவான். க்ஷத்திரிய பதவிவேண்டுமானால் தன்னுயிர்க்கிரங்காமல் மன்னுயிரைக் காப்பதே விரதமாகக் கொண்டு வாழக் கடவான். இங்ஙனமே மற்றவையும் கொள்ளுக. குணத்தாலும், தொழிலாலும் ஏற்படுகிற மேன்மையைக் கண்டு

யாரும் பழி கூற இடமில்லை. குணத்திலும் தொழிலிலும் கடைப்பட்ட ஒருவன் பிறப்பைக் காரணமாக வைத்துக் கொண்டு நான் மற்றவரைக் காட்டிலும் உயர்ந்தவன்" என்று சொல்லும் போது மற்றவருக்குக் கோபம் உண்டாகிறது என்று சொல்லும் பாரதி

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்"[2]

என்று வள்ளுவரின் கருத்தைக் கூறி கீழ், மேல் என்பதற்கு அவனவன் குணமும் செய்கின்ற காரியமுமே (தொழில்) காட்டி விடுவதாகச் சொல்லி பிறப்பிற்கும் சாதிக்கும் தொடர்பில்லை என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

வேத இலக்கியத்தில் காணப்படும் வர்ணப் பாகுபாடுகள் மனித வாழ்க்கை நெறியின் அடிப்படையிலும் தொழிலின் அடிப்படையிலும் அமைந்தது ஆகும். இங்குக் குறிக்கப்பட்ட நான்கு வர்ணப்பாகுபாடுகள் வருமாறு:

1. அந்தணர் : அறிவால் ஒழுக்கத்தால் உயர்ந்தோர் அந்தணர்.
2. சத்திரியன் : ஆற்றலாலும், தோள் வலிமையாலும் சிறந்தவன் அரசன்.
3. வைசியன் : உழைப்பும், பொருளீட்டும் திறனும் வளமாக்கும் தன்மையும் உடையவன் வைசியன்.
4. சூத்திரன் : இது எதனையும் இயல்பாகச் செய்யும் ஆற்றல் இல்லாதவன் சூத்திரன்.

இந்த நான்கு பிரிவுகளில் காணப்படும் மனிதர்கள் மனித சமூகத்தில் இயல்பாகவே காணப்படுபவர் ஆவர். எல்லாச் சமுதாயங்களிலும் மேற்சொன்ன நான்கு பிரிவுடையவர்களைக் காணமுடியும். அறிவு, ஆற்றல், உழைப்பு, அறிவின்மை ஆகியன பிறப்பால் வருவதில்லை. இதனால் தான் பாரதி எரிச்சலுற்று

"வேதமறிந்தவன் பார்ப்பான்
தண்ட நேமங்கள் செய்பவன் நாய்க்கன்
பண்டங்கள் விற்பவர் செட்டி
தொண்டரென்றோர் வகுப்பில்லை
தொழில் சோம்பலைப் போல் இழிவில்லை
நாலு வகுப்பும் இங்கொன்றே – இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே – செத்து
வீழ்ந்திடும் மானுடச் சாதி"

(பாரதி பாடல், முரசு–பக்–269)

என்றவாறு நான்குவகைப் பிரிவுகளும் அவரவர் செய்யும் தொழிலின்

அடிப்படையில் அமைந்ததாகும் என்ற கருத்துடனே பாரதி பாடியுள்ளார். இந்த நான்கு பிரிவுகளும் பின்னால் தோன்றிய தர்ம சூத்திரக்காலங்களில் பிறப்பின் அடிப்படையில் வந்ததென்று சொல்லி தீண்டாமை முதலிய வேண்டா வழக்கங்கள் மனு தர்மம் என்றும் போற்றப்பட்டது. இதனைக் கண்ணன் பாட்டில்.

"நாலு குலங்கள் அமைத்தால் – அதை
நாச முறப்புரிந்தர் மூட மனிதர்
சீலம் அறிவு தரும் – இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்
மேலவர் கீழவர் என்றே – வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியையெல்லாம் – இன்று
பொசுக்கிவிட்டா லெவர்க்கும் நன்மையுண்டு,

(கண்ணன் பாட்டு, பக். 241)

என்றவாறு மனிதனை மேல்,கீழ் என்று பிரித்துப்பேசும் பொய்யான வேத தர்மங்களைத் தீயில் எரித்துவிடுதல் மானிடர்க்கு நன்மை பயக்கும் என்றும் பாரதி பாடியுள்ளார். ஆக பாரதி நான்கு வர்ணப்பாகுபாடுகளை ஒத்துக் கொண்டாலும் அவை தொழிலின் அடிப்படையில் தோன்றியதாகவே கருதுகின்றார். சாதியின் தோற்றம் குறித்து பாரதி சொல்லியுள்ள இதே கருத்தைப் பல சமூகவியலாளர்களும் கண்டறிந்து சொல்லியுள்ளனர். "குலக்குழுக்குள்ளே இருந்த தொழிற் பாகுபாடுகள் பின்னர் தனித்தனிச் சாதிகளாக மாறியுள்ளன"[3] என்று சொல்லும் டி.டி.கோசாம்பியின் கருத்துடன் பாரதியின் கருத்தும் இங்கே நினைக்கத்தக்கது.

## சாதிப்பெயர்கள் : பாரதியின் கருத்துக்கள்

சாதி என்ற சொல் தமிழ்ச்சொல் அன்று. சாதி என்ற வடமொழிச்சொல்லே சாதி என்று தமிழில் வழங்குகின்றது. இந்தச் சாதி என்ற சொல்லும் மக்களைக் குறிக்கும் சொல்லாகப் பண்டைக்காலத்தில் வழங்கவில்லை. சாதியைக் குலம் அல்லது குடி என்றே சிலப்பதிகாரகாலம் வரை தமிழர்கள் குறித்திருப்பதைக் காண்கின்றோம். இக்குலப்பிரிவுகளும் அவரவர் மேற்கொண்ட தொழிற்பெயரின் அடிப்படையிலேயே அமைவதைக் காண்கின்றோம். அவ்வகையில் அமைந்த குலப்பெயர்களே பின்பு சாதிப்பெயராயிற்று. இக்குலப்பெயர்களை விடுத்து வேறு பெயரை ஒரு சாதியினர் சூடிக்கொள்வது குறித்துப் பாரதி பின்வருமாறு குறிப்பிடுவார்.

"பறையர் என்பது மரியாதை உள்ள பதம் இல்லை" என்று கருதி இக்காலத்தில் சிலர் பஞ்சமர் என்ற சொல்லை அதிகமாக வழங்குகிறார்கள். ஆனால் பறையர் என்பதே மேற்படி சாதியாருக்குத் தமிழ்நாட்டில்

இயற்கையாக ஏற்பட்டபெயர். பறை என்பது பேரிகை. பூர்வகாலத்தில் நமது ராஜாக்கள் போர் செய்யப்போகும்போது ஜய பேரிகை கொட்டிச் செல்லும் உத்தமமான தொழில் இந்த ஜாதியார் செய்து வந்தபடியால் இவர்களுக்கு இப்பெயர் வழங்குவதாயிற்று"[4] என்ற பாரதியின் கருததின்வழி தொழிலால் அமைந்த குலப்பெயரைச் சொல்வதில் பெருமையே தவிர தாழ்வில்லை என்ற கருத்தைப்பெறமுடியும். பாரதி காலத்தில் பல சாதிகள் அடங்கிய ஒரு குழுவை அரிசன், தலித், தாழ்த்தப்பட்டவர் என்று பொதுச் சொற்களால் குறிக்கும் வழக்கமில்லை. இம்மாதிரியான வழக்கங்கள் காந்தியாலும் அன்றைய ஆங்கில அரசின் ஆள்வோராகவும் இருந்தவர்களால் 1935ஆம் ஆண்டிற்குப் பின்புதான் ஏற்பட்டது. இங்குதான் Scheduled Castes என்ற சிந்தனை ஆள்வோரின் வசதிக்காக ஏற்பட்டது.

பாரதி தமிழகக் குலங்களின் பெயர்களான பறையர், பள்ளர், சக்கிலியர், பிராமணர், செட்டியார், நாய்க்கர், மறவர், குறவர், செட்டி என்றே தனித்தனிச் சாதிப்பெயர்களாகவே தமது கவிதைகளிலும் உரைநடையிலும் எழுதியுள்ளார். அவரவர்களின் குலப்பெயரால் ஒருவர் அழைக்கப்படுவதில் தவறில்லை. அதில் உயர்வு, தாழ்வு என்ற எண்ணம் கூடாது என்பதே பாரதியின் கருத்து. இதனையே

"சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்று சொல்கின்றார். தொழிலால் அமைந்த குலங்களே நம்மில் உண்டு; சாதிகள் இல்லை. இக்குலங்களுக்குள்ளே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது என்பதே இப்பாடலில் பாரதி சொன்ன கருத்து ஆகும்.

## சாதி : உயர்வு தாழ்வு - பாரதியின் கருத்துக்கள்

ஒரு நாட்டிலுள்ள அனைவரும் ஒரே குலம் என்ற உணர்வு ஏற்பட்டால் சாதிவேறுபாடுகள் ஒழியும் என்று நம்பிய பாரதி பாரதசாதி, தமிழ்ச்சாதி, மானுடச்சாதி என்ற புதிய சொல்லாக்கங்களைத் தமது பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். மனிதரைப் பிரிக்கும் சாதி என்ற சொல்லை ஏற்க மறுக்கும் பாரதி

"எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்" (பாரத சமுதாயம், ப.46)

என்றவாறு குலம், இனம் என்ற வார்த்தைகளையே பயன்படுத்துகின்றார். இந்தியாவில் வாழ்கின்ற மனித இனத்தின் எல்லோரும் ஒரு தாயின் மக்கள்; ஒரு நாட்டில் வாழ்கின்ற ஒரே குலத்தினர் என்பதாகப் பாரதி கருதினார். இதற்குள் உயர்வு, தாழ்வு, கற்பிப்பதைப் பாரதி வெறுத்தார். அதனால்தான்.

"சாதிப்பிரிவுகள் சொல்லி – அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்.

........................................................................................

தகரென்று கொட்டு முரசே பொய்மைச்
சாதி வகுப்பினையெல்லாம்" (முரசு, பக்.264)

என்ற பாட்டில் பொய்யுரையாகப் புனையப்பட்டுள்ள சாதிகளையெல்லாம் தகர்த்துவிடவேண்டுமென்றும் பாரதி வேண்டுகின்றார். இதற்கும் மேலாக இந்திய மக்களைப் பார்த்து.

"ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே"

என்று சொல்லி சாதியம் பேசுகின்ற பாரதத்தை– "சாதி நூறு சொல்லுவாய் போபோபோ" என்று பேசும் பாரதத்தை– வெறுப்பதையும் காணமுடிகின்றது.

"மனிதரில் ஆயிரம் சாதி என்ற வஞ்சக வார்த்தை ஒப்புவதில்லை" என்ற கருத்துக் கொண்ட பாரதி மனித சாதி என்றே ஒரே சாதி மட்டுமே இருக்க வேண்டுமென்ற கருத்துடையவராய்" இந்தியா முழுவதும் ஒரே சாதி, ஒரே உடுப்பு, ஒரே ஆகாரம் என்று செய்து விடவேண்டும் என்று சிந்தித்துள்ளதையும் காணமுடிகிறது.

இந்தியாவைப் பிடித்துள்ள சாதிக் கருத்தை வெட்டிக் சாய்க்க "ஒரு சாதி, ஓர் உயிர், பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களுக்கும் ஒரு சாதி வகுப்புகள் இருக்கலாம். பிரிவுகள் இருக்கலாகாது., வெவ்வேறு தொழில்கள் புரியலாம். பிறவி மாத்திரத்திலேயே உயர்வு தாழ்வு என்ற எண்ணம்கூடாது."[5] என்று பாரதி சொல்வதை இங்கே நினையலாம். அன்னியர் ஆட்சியால் தான் பாரதத்தில் சாதியம் வீறு கொண்டுள்ளது. இதனால் சுதந்திர பாரதத்தில் சாதியத்திலிருந்தும் பாரதமக்களுக்கு விடுதலை கிடைக்குமென்று பாரதி நம்பினார். இதனை

"ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று"

என்றும்

பறையருக்கும் இங்குதீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை"

என்றவாறு பாரத விடுதலையில் சாதிய விடுதலையும் அடங்கியிருப்பதாகப்

பாரதி கனாக் கண்டார். ஆனால் அது சாதிய ஆணவ விடுதலையாகிப் போனதைப் பாரதி தெரிந்திருக்க அவர் நம்மோடு இல்லை. பாரதிக்கு ஒரு மொழி பேசுவோர் ஒரேஇனம் 'தமிழ்ச்சாதி'; ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே இனம் பாரதச்சாதி என்றும் கருத்து இருந்தது. பாரதி பல்வேறு குலத்திற்குள் நிலவும் ஏற்றத்தாழ்வை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால்தான்

"ஈனப் பறையர்களேனும் – அவர்
எம்முடன் வாழ்ந்திங்கிருப்பவர் அன்றோ?
சீனத்தராய் விடுவாரோ? – பிற
தேசத்தார் போற் பல தீங்கிழைப்பாரோ"

என்று இங்கு கடைக்கோடியில் இருக்கும் குலத்தவனும் எம்முடன் வாழும் சகோதரனே என்று பாடநேர்ந்தது எனலாம். மேலும்,

ஆயிரம் உண்டிங்கு சாதி – எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி? – ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோம் – தம்முள்
சண்டை செய்தாலும் – சகோதரர் அன்றோ?

என்ற பாரதியின் பாடல் வரிகள் ஒரு நாட்டில் வாழும் மக்கள் ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறந்த சகோதரர்கள். இவர்களுக்குள் சண்டைகள் செய்தாலும் அவர்கள் சகோதர்களே என்றவாறு யதார்த்தப் பார்வையில் ஆயிரம் சாதிகள் இருப்பதையும் அவற்றுள் சண்டைகள் இருப்பதையும் பாரதி பாடியிருப்பதைக் காணமுடியும்.

## சாதிகள் இரண்டே: பாரதியின் முடிந்த முடிவான கருத்து

பாரதி மனித குலத்திற்குள் இரண்டு சாதிகள் மட்டுமே இருக்க முடியுமென்ற கருத்துடையவராகக் காணப்படுகின்றார்.

"சாதி இரண்டொழிய வேறில்லையென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தமென்போம்
நீதி நெறியின்றும் பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர்"

என்றவாறு நெறியுடைய வாழ்வு வாழ்பவர் மேலோர்; நெறிதவறி வாழ்வோர் கீழோர் என்று மனித வாழ்க்கையில் பண்பு நலன்களை வைத்து மேலோர் கீழோர் என்கின்றார் பாரதி. இதனால்தான்

"நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் – இந்த
நாட்டினில் இல்லை குலம் நல்லதாயின்

எந்தக்குலத்தினரேனும் – உணர்
வின்பம் அடைதல் எளிதெனக்காண்போம்."

என்று பாரதியால் பாடமுடிகிறது. பாரதி சாதி என்னும் சொல்லுக்கு இணையாக இங்கே "எந்தக் குலத்தினரேனும்" என்று குலம் என்ற சொல்லையே பயன்படுத்தியிருப்பதை இங்கே கவனிக்கவேண்டும். தொழிலால் அமைந்த குலங்களே பின்பு சாதியாக மாறியது என்பது பாரதியின் கருத்து.

## தொகுப்புரை

தொழிலின் அடிப்படையில் தோன்றிய குலப்பிரிவுகள் பின்பு வேத நூல்களின் புனையுரைகளால் சாதிப்பிரிவுகளாக வளர்ந்தன என்பதே பாரதியின் சாதிகளின் தோற்றம் குறித்த கருத்து. தொழிலால் அமைந்த குலங்களால் நன்மையுண்டு இவற்றில் ஏற்றத்தாழ்வு கூடாது என்பது பாரதியின் சிந்தனை. பிறப்பால் ஒருவருக்கு உயர்வு தாழ்வு என்பது இல்லை என்பதே பாரதியின் சாதி குறித்த தெளிந்த கருத்து ஆகும். (குலத்) தொழிலால் அறியப்படும் சாதிப்பெயரைச் சொல்வதில் தவறில்லை என்றும் பாரதி கருதுகின்றார். சாதிகள் இல்லை; தொழில் அறியப்படும் குலங்களே உண்டு என்பதே பாரதியின் சாதி குறித்த முடிவான கருத்தும் ஆகும்.

"சாதிகள் இல்லையடி பாப்பா
குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல்பாவம்".

## குறிப்புக்கள்

1. பாரதியார், கட்டுரைகள், ப.68
2. மேலது.
3. சாதியும், வர்க்கமும், ப.25
4. பாரதியார், கட்டுரைகள், ப.70.
5. பாரதி நூல்கள், மூன்றாம் தொகுதி, ப.122.

# 7

# ஆரியன் என்ற கருத்தாக்கம்

ந. முத்துமோகன்

புதிய தமிழின் சொற்களையும் கருத்துக்களையும் எளிமையாகவும் வலிமையாகவும் செய்த கவிஞன் பாரதியார். பாரதியின் சொல் உலகம் மீண்டும் மீண்டும் உற்று நோக்கத்தக்கது. அத்தகைய ஒரு முயற்சியே இக்கட்டுரையும். சமீபகாலங்களில் மொழி ஆய்வுகள் சார்ந்த சிந்தனைப்போக்கு மேற்கு நாடுகளில் பெரிதும் செழுமை பெற்று தமிழிலும் பரவி வருகின்றது. மொழிப்பயன்பாடு வெறும் ஊடகம் என்ற கருத்து மாற்றம் பெற்று கருத்தியல் கட்டமைப்பு உருவாக்கப்படும் தளமாகவும் கருத்தியல் மோதல்கள் தீவிரமாக நிகழும் தளமாகவும் மொழி அடையாளப்படுத்தப்படுகிறது. ஒரு சொல்லின் ஏற்பும் பயன்பாடும் குறிப்பிட்ட அச்சிந்தனையாளரின் கருத்தியல் நிலைப்பாடுகளோடு தொடர்புபடுத்தப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு சொல்லை முனைப்புடன் பயன்படுத்தும்போது அச்சிந்தனையாளர் அதன் எதிர்வுச் சொற்களை எதன் முகத்தால் தவிர்த்திருக்கிறார் என்பது போன்ற கேள்விகளை எழுப்பிப் பதில் காணவேண்டியது அவசியம் என்பது இப்போது உணரப்படுகிறது. பயன்படுத்தப்படும் ஒரு சொல்லின் கருத்தியல் பயன்படுத்தப்படாமல் விடப்பட்டிருக்கும் அல்லது தவிர்க்கப்பட்டிருக்கும் சொற்களோடு ஒப்பிட்டே அர்த்தப்படுத்தப்பட முடியும் என்பது போன்ற சிந்தனைகள் இப்போது முன்னுக்கு வருகின்றன. மொழிப்பயன்பாட்டில் குறிப்பிட்ட ஒரு சொல்லின் தேர்வு, பிற சொற்களைப்பின்னுக்குத் தள்ளுதலுடன் தொடர்பு கொண்டது என்பது இதன் பொருளாகும். பாரதியின் எழுத்துக்களில் ஆரியன் என்ற சொல்லின் பிரயோகத்தையும் இது போன்ற நோக்கில் மறுபரிசீலனை செய்வது அவசியமாகும்.

ஆரியன் என்ற சொல் வெறுமனே கவிதைச் சொல்லாக மட்டுமின்றி, சமகால வரலாற்றுக்கட்டமைப்பில் இடம் பெறும் சொல்லாகவும் உள்ளது. 19–ஆம் நூற்றாண்டின் கடைசியிலிருந்து, 20–ஆம் நூற்றாண்டு முழுவதிலும் தமிழகம் உள்ளிட்ட இந்திய வரலாற்றில் ஆரியன் என்ற சொல், அதன் கருத்தாக்கம் ஆகியவை விவாதத்திற்குரிய பொருட்களாக இருந்து வருகின்றன. இந்த அர்த்தத்திலும் குறிப்பிட்ட அச்சொல் பாரதியால் எவ்வாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் காணவேண்டியது அவசியமாகிறது. சமீப கால இந்திய வரலாற்றை எழுதுவதில் அகில

இந்திய தேசீயம் சார்ந்த மேற்றட்டு அறிவு ஜீவிகளின் அணுகுமுறையே மேலாதிக்கம் செலுத்தி வருகிறது என்ற குற்றச்சாட்டும் இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கது. இக்குற்றச்சாட்டினைக் கூறுவோர் அடித்தள மக்களின் வாழ்வும் பிரச்சினைகளும், உணர்வுகளும் எழுச்சிகளும் அவ்வகை வரலாற்று வரைவில் இடம் பெறாமல் போகின்றன என்று வாதிடுகின்றனர். ஆரியன் என்ற சொல்லை நிலைக்களமாகக் கொண்டு இந்திய நாட்டின் கலாச்சார மற்றும் சமூக – அரசியல் வரலாற்றைப் பாரதி கட்டமைக்க முயன்றிருந்தால், அச்சொல் மற்றும் அதன் கருத்தாக்கத்தில் அடித்தள மக்களின் வாழ்வும் உணர்வுகளும் எந்த அளவிற்குப்பதிவு பெற்றிருக்கின்றன என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகிறது.

இதுபோன்ற பிரச்சினைகளை முன்னிறுத்தியே இக்கட்டுரை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

மேற்குறித்த முன்னுரையோடு பாரதியின் எழுத்துக்களில் "ஆரியன்" என்ற சொல் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை முதலில் காண்போம். பாரதியாரின் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் ஆகிய மூன்று தொகுப்புகள் மட்டும் பார்க்கப்பட்டன. நேரடியாக ஆரியன் என்ற சொல் பாரதியாரின் கவிதைகளில் தான் அதிகம் பயின்று வருவதைக் காணமுடிந்தது. கட்டுரைகளில் குறைவாகவும், கதைகளில் கிட்டத்தட்ட இல்லாமலும் அது போய்விடுகிறது.

கவிதைகளில்[1] கீழ்க்கண்ட சொற்பிரயோகங்களைக் காணமுடிந்தது. ஆரியர், ஆரியம், ஆரிய! என்ற விளிச்சொல், ஆரியபூமி, ஆரிய நாடு, ஆரிய நாட்டினர், ஆரிய ராணி, ஆரிய தேவி, ஆரியக்காட்சி, ஆரிய மைந்தன், ஆரியர் வாழ்வு, ஆரியர் கோன், ஆரியத் தன்மை, ஆரியர் சாதி, ஆரியர் நாயகன், ஆரியர் முன்னெறிகள், ஆரியப் பெண்கள், ஆரிய வேன்மறவர், ஆரியர் செல்வம், ஆரியப்பாண்டவர், ஆரியச் சீர்மை, ஆரிய தர்மம், ஆரிய தேசம், ஆரிய நெஞ்சம் ஆகிய சொற்கள். இவையெல்லாம் கவிதையில் இடம் பெறுவன. கட்டுரைகளில் சில முக்கிய இடங்களில் ஆரிய ஸம்பத்து, ஆரிய நாகரீகம், ஆரிய திராவிட நாகரீகம், ஆர்ய வர்த்தம், ஆரிய வர்ணங்கள் ஆகிய சொற்கள் பயின்று வருகின்றன. கதைகளில் அநேகமான இச்சொல் இடம்பெறவில்லை என்று கருதுகிறேன்.

இவ்வளவு பரவலாகவும் ஏராளமாகவும் ஆரியர் என்ற சொல் பயின்று வருவது ஓரளவு மலைப்பைத் தருகிறது. ஒவ்வொரு கவிதையிலும் அது எவ்வகைப் பொருண்மையை உணர்த்துகிறது என்பது விரிவாக ஆய்விற்குரியது. அச்சொல் பலவித பொருளடர்த்தியைக் கொண்டுள்ளது என்று கூடக் கூறலாம். இருப்பினும் அவற்றினுள் ஒரு மையம் இருப்பதையும் காணமுடிகிறது. அந்த மையத்தைக் கடந்து அதைக் தாரளமாக்குவதற்கு பாரதி உணர்வு பூர்வமாக முயன்றிருப்பதையும் காணமுடிகிறது.

முதலில் மிகச் சாதாரணமாகத் தொடங்குவதெனில், ஆரியர் என்ற சொல் பல இடங்களில் உயர்ந்தவர், மேலானவர், மரியாதைக்குரியவர் என்ற பொருளில் பயின்று வருகிறது. எட்டயபுரம் ராஜா வெங்டேசு ரெட்டப்பபூபதிக்கு எழுதிய சீட்டுக்கவிதையில் – அவரை விளித்து "ஆரிய!" என்ற சொல் இடம் பெறுகிறது. குயில் பாட்டில் குயில் குரங்கையும் மாட்டையும் மரியாதையுடன் விளித்துப் பேசும் இடங்களில் "ஆரியரே!" என்ற சொல் தோன்றுகிறது. "காளையர் தம்முள்ளே கனமிகுந்தீர், ஆரியரே!" என்று குயில் காளை மாட்டை அழைக்கிறது. பாரதியார் அவரது குருவெனக் கொள்ளும் குள்ளச்சாமியை "ஆரியனே!" என்று குறிப்பிடுகிறார்.

இது போன்ற பொதுவான விளிச்சொற்களைத்தாண்டிப் பார்க்கும் போது "எங்கள் நாடு" எனும் கவிதையிலே, நாட்டின் இயற்கை அழகை வருணித்து

"கன்னலும் தேனும் கனியுமின் பாலும்
கதலியும் செந்நெல்லும் நல்கும் எக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே........"

என்கிறார் பாரதி. அதன் பூகோள எல்லைகளை

"பேரிமயவெற்புமுதல் பெண் குமரி ஈறாகும்
ஆரிய நாடு" என்றும் குறிப்பிடுகிறார்.

குருகோவிந்தர் பாடலில் "ஆரியர் சாதி" என்று குறிப்பிடும்போது மொத்த பாரத மக்களையும் குறிப்பதாகத் தோன்றுகிறது. சத்ரபதி சிவாஜி பாடலில் "பிறருடைய ஆட்சியில் அச்சமுற்றிருப்போன் ஆரியனல்லன்", "தாய்நாட்டு அன்பிலாதிருப்போன் ஆரியனல்லன்", "மிலேச்சர் ............ ஆட்சியலடங்குவோன் ஆரியனல்லான்" என்பது போன்ற வரிகளிலும் பாரதி தேசபக்தி கொண்டவரை ஆரியர் எனக்குறிப்பது போல் தோன்றுகிறது. இந்த வரிகளில் "பிறர்", "தாய்நாட்டு அன்பிலாதிருப்போன்" "மிலேச்சர்" என்றெல்லாம் பாரதியார் யாரைக் குறிப்பிடுகிறார் என்ற கேள்வி எழுகிறது. வரலாற்றில் குருகோவிந்தரும் சிவாஜியும் மொகலாய அரசுடன் போரிட்டவர்கள் என்ற செய்தி விடுதலைப் போராட்டப் சூழல்களைத் தாண்டிய பொருண்மையை நோக்கி இட்டுச் செல்லுகிறது. இந்திய தேசீயம் நாட்டு உணர்வை மட்டுமின்றி இந்து மத உணர்வையும் சேர்த்துக் கட்டமைத்தது என்பதை இங்கு உணரத் தலைப்படுகிறோம்.

"தாயின் மணிக்கொடி" பாடலில் "ஆரியக்காட்சி" என்ற சொல்லின் கீழ் இந்திய நாட்டின் தமிழர், தெலுங்கர், சேரர்....... மராட்டியர், ராஜபுத்ரர், பஞ்சாபியர் என எல்லா மொழி வழி மக்கள் பிரிவினரையும் அவரவர் சிறப்புகளுடன் ஒன்றுபடுத்துவதாகத் தெரிகிறது.

"வந்தே மாதரம்" பாடலில் "ஆரியம் என்ற பெயர் கொண்ட எம் அன்னை" என்று பாரததேவியை ஆரியம் என்று அழைக்கிறார். பாரதமாதாவை 'ஆரியராணி' என அவர் வருணிக்கும் பாடலும் உண்டு. ராமனின் வில்லும், அர்ச்சுனனின் காண்டீபமும் ஆரியராணியின் வில் என்றும் கூறுகிறார்.

இன்னும் சிறிது நெருங்கிச் செல்லும்போது பாரதியின் ஆரியன் எனும் சொல் ஒரு மையத்தை நோக்கி ஒடுங்குவதைக் காணுகிறோம்.

'சங்கு' எனப்படும் பாடலில் "பொய்யுறுமாயையைப் பொய்யெனக் கொண்டு புலன்களை வெட்டிப் புறத்திலெறிந்து ஐயுறலின்றிக் களித்திருப்பார் அவர் ஆரியராம் என்றிங்கு ஊதேடா சங்கு" இந்த வரிகளில் ஆரியர் என்றால் யார்? என்பதற்கு ஒரு கறாரான வரையறையைப் பெறுகின்றோம். இப்பாடலில் இடம் பெறும் எல்லாச் சொற்களுமே வேதாந்தத்தத்துவம் தொடர்பானவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரிய நாட்டின் எல்லைகளை அறிவிக்கும் 'பாரததேவியின் திருத்தசாங்கம்' பாடலில் காசிநகர், கங்கையாறு, இமயமலை, தொன்மறைகள் நான்கு, முத்திதரும் வேத முரசு ஆகியவை ஆரிய நாட்டின் உறுப்புகளாகக் குறிக்கப்படுகின்றன.

தமிழ்த்தாய் தன் நிலைகூறும் பாடலொன்றில் "ஆன்ற மொழிகளினுள்ளே – உயர் ஆரியத்திற்கு நிகரென்று வாழ்ந்தேன்" என்று கூறும்போது ஆரியம் என்ற சொல் சமஸ்கிருதம் என்ற நேரடிப் பொருண்மையைப் பெருகிறது. இதே பாடலில் 'ஆரிய மைந்தன் அகத்தியன்' இலக்கணம் தந்தான் எனக்கூறும் போது அகத்தியன் தமிழனல்ல என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. சத்ரபதி சிவாஜி பாடலில் ஆரியன் என்பதற்கு எதிர்ச்சொல்லாகப் பயன்படுத்தப்படும் மிலேச்சர் என்ற சொல் "வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்" என்று விளக்கம் பெறுகிறது.

"லஜபதிராய் பிரலாபம்" பாடலில் "ஆதிமறை தோன்றிய நல் ஆரிய நாடு"என்ற அடையாளம் தரப்படுகிறது. அதேபாடலில் ஆரிய சமாஜத்தின் தலைவர் தயாநந்தர் திருநாடு, "ஆரியர் பாழாகாது அருமறையின் உண்மை தந்த... மெய்ஞான தயாநந்தர் திருநாடு" என அவர் வாழ்ந்த வட்டாரம் சித்தரிக்கப்படுகிறது. யாகப்பாட்டில் அக்னி தேவன் "ஆரியர் நாயகன் என்று அழைக்கப்படுகின்றான்". யக்ஞமும் அக்கினியும் வைதீக நெறியின் முதன்மை அடையாளங்கள் என்பது இங்கு கணக்கில் கொள்ளப்பட வேண்டும். "சுதேசியத்தலைவராக மட்டுமின்றி மகாராஷ்டிரத்து வைதீக பிராமணர்களின் தலைவராகவும் விளங்குபவர். நமது பூர்வீகமான ஜாதி தர்மத்தின் உட்கருத்தை விளக்குபவர்" என்று (331) கட்டுரையில்[2] அறிமுகப்படுத்தும் திலகரைக் கவிதையில் பாரதி "ஆரியன்" என்று அழைக்கின்றார்.

தயானந்தர், லஜபதிராய், திலகர் ஆகியோரைக் குறிக்கும் 'ஆரியன்.' எனும் அடைச்சொல் வள்ளுவருக்கோ, கம்பருக்கோ, இளங்கோவிற்கோ வந்து விழவில்லை என்பது கவனிக்கத்தக்கது. காசியில் தான் கல்வி பெற்றதைக் குறிப்பிடும் பாரதி "வேதபூமியாகிய ஆரிய வர்ததம்"(153) என்று கூறுகிறார்.

இன்னுமொரு கட்டுரையில் ஆரிய நாகரீகம்/தமிழ்நாகரீகம், ஆர்யர்/தமிழர் என்ற எதிர்வுகளைத் துல்லியமாகப் பயன்படுத்துகிறார். "ஐரோப்பாவிலும் ஆசியாவிலும், பிற இடங்களிலும் காணப்படும் நாகரீகங்களுக்கெல்லாம் முந்தியதும், பெரும்பான்மை மூலாதரமுமாக நிற்பது ஆர்ய நாகரீகம். அதாவது, பழைய ஸ்மஸ்கிருத நூல்களிலே சித்தரிக்கப்பட்டு விளங்குவதாகிய இந்த ஆரிய நாகரிகத்திற்கு ஸமமான பழமை கொண்டது தமிழருடைய நாகரீகம் என்று கருதுவதற்குப் பல விதமான ஸாக்ஷியங்களிருக்கின்றன. அதாவது, ஆரியரும் தமிழருமே உலகத்தில் முதல் முதலாக உயர்ந்த நாகரீகப் பதவி பெற்ற ஜாதியார்" (130) என்று எழுதுகிறார். ஆர்யர் என்பவர் இந்தோ–ஐரோப்பிய நாகரீகம், ஜாதி என்பதை இங்கு உணர்த்துகிறார். அவர் கூறிவரும்போது 'திராவிடர்' என்ற சொல்லை எங்கும் பயன்படுத்தவில்லை. ஆயின் கட்டுரையின் தொடர்ந்து வரும் பகுதியில் இவ்விரண்டு வகுப்பினரும் 'ஹிந்துமதம்', என்ற கயிற்றால் கட்டுண்டு ஒரே கூட்டத்தாராகினர் என்கிறார். இப்படி "ஒரே கூட்டத்தாராகிய" தமிழ்நாட்டு நாகரீகத்தை "ஆரிய திராவிட நாகரீகம்" என்று பெயரிடுகிறார். திராவிடம் என்ற சொற்பயன்பாட்டைப் பெரிதும் தவிர்த்து வந்த பாரதி அச்சொல்லைத் திடீரென இப்போது வெளிப்படுத்துகிறார். பாரதி கட்டுரையின் இப்பகுதிகளில் பயன்படுத்தப்படும் "வடமொழிக் கலப்புக்கு முந்திய தமிழ், இரண்டு பழமையான நாகரீகங்கள், இரண்டு பாஷைகள், இரண்டு ஜாதிகள், இரண்டு வகுப்பினர்" ஆகிய அனைத்து விளக்கங்களுமே முக்கியமானவை.

இதேபோல 'ஆரிய ஸம்பத்து' என்ற மற்றொரு கட்டுரைப் பகுதியும் விவாதத்திற்குரிய பல கருத்துக்களைக் கொண்டுள்ளது. "கிருஸ்தவர்களாயினும் பார்சிகளாயினும் மகம்மதியாராயினும் எங்கிருந்து வந்து எந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதும் பாரத பூமியில் பிறந்து வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத சாதியில் சேர்த்துக் கணக்கிட வேண்டும். இது ஒரே ஜாதி. பிரிக்க முடியாதது. அழிவில்லாதது. இதற்கு ஆதாரமும் மூலபலமுமாவது யாதெனில், ஆர்ய ஸம்பத்து அதாவது ஆரியரின் அறிவும் அந்த அறிவின் பலன்களும்.... ஆர்ய ஸம்பத்து என்பது ஹிந்துக்களின் அறிவு வளர்ச்சி. நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு ... " (54–55) ஆரிய ஸம்பத்தை வருணிக்கும் இக்கட்டுரை தொடர்கிறது. தஞ்சாவூர் கோயில், திருமலை நாய்க்கர் மகால், தியாகையர் கீர்த்தனங்கள், எல்லோரா, தாஜ்மகால், சரப சாஸ்திரியின் புல்லாங்குழல் – இவையனைத்துக்கும் பொதுப்பெயர் ஆர்ய

ஸம்பத்து என்று பாரதியார் அடுக்கிச் செல்கிறார். ஆனால் கட்டுரையின் அதே பகுதியில் "காளிதாசன் சாகுந்தலம், துளசிதாசர் இராமாயணம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி – இவையனைத்துக்கும் பொதுப்பெயராவது ஸம்பத்து" என்றொரு வரி இடம் பெறுகிறது. இந்த வரியில் "ஆரிய" என்ற சொல் விடுபட்டிருக்கிறது! வெறுமனே "ஸம்பத்து" என்று அவ்வரி முடிகிறது! சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி ஆகிய நூல்கள் வரிசையில் இடம் பெறுவதால் பாரதியார் தடுமாறியிருக்கிறாரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

திராவிடர் என்ற சொல்லாட்சி இன்னுமொரு கட்டுரையில் ஆங்கில பத்திரிக்கை ஆசிரியர் கூற்றாக – "மலையாளிகள் தமிழ்ப்பார்ப்பார், திராவிடர், வங்காளியர்" என்ற ஒருவகையிலான வரிசைப்படுத்தலில் இடம் பெறுகிறது.

ஆரியர் என்ற சொல்லுக்கும் வருண அமைப்பிற்கும் இடையிலான தொடர்பும் ஒரு கட்டுரையில் பாரதியால் சொல்லப்படுகிறது. நமது காலத்தில் வருண அமைப்பு "கெட்டழிந்து கிடக்கிறது" என்பதை விரிவாகக் கூறி வரும் பாரதி கட்டுரையின் இறுதியில், "இவர்களெல்லாம் மேம்பாடுடைய ஆரிய வர்ணங்கள் நான்கிற்கும் புறம்பாகிய நீசக்கூட்டத்தார். நமது தேசம் முன்போலக் கீர்த்திக்கு வர வேண்டுமென்றால், உண்மையான வகுப்புகள் ஏற்படவேண்டும். பொய் வகுப்புகளும் போலிப் பெருமைகளும் நசிக்க வேண்டும். இது நம்முடைய சாஸ்திரங்களின் கருத்து"(345). பூர்விக வருண அமைப்பின் புனிதத்தை ஏற்பவராகப் பாரதி இங்கு காட்சி தருகிறார். அப்புனிதத்தை மீட்டு மீண்டும் அதனை ஆட்சியிலேற்ற விழைபவராகப் பாரதி தோற்றம் தருகிறார்.

இதுவரை நாம் பேசிவந்தவற்றிலிருந்து ஆரியம் என்ற சொல்லின் பொருண்மை பாரதியில் வேதம், சமஸ்கிருதம், ஆதியில் தோற்றுவிக்கப்பட்டு இப்போது கெட்டுப்போன வர்ண அமைப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டே அமைந்துள்ளது என்பதைக் காணுகிறோம். ஆரியர் என்பதைப் பாரதி ஒரு நாகரீகமாக, ஒரு வகுப்பாக, ஜாதியாக (இனமாக) கண்டதும் உண்டு. அதனை ஓர் இந்தோ ஐரோப்பிய நாகரீகமாகக் கூட பாரதி ஏற்றிருக்கிறார். ஆரியர் என்ற வகுப்பினருக்கு எதிர் நிலையில் தமிழர், திராவிடர் என்ற சொற்களும் சில இடங்களில் சுட்டப்பட்டிருக்கின்றன. நீசர், மிலேச்சர், புலையர் -- என்ற தீவிர எதிர்வுகளும் இல்லாமலில்லை.

இவை ஒரு நிலை. இன்னொரு நிலையில், மேற்கூறிய மையம் மொத்த பாரத நாட்டையும், இமயம் முதல் குமரி ஈறான நிலப்பகுதியையும், ஹிந்துக்கள் அனைவரையும், சிலவேளைகளில் இன்னும் விரிந்து முகம்மதியார்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், பல மொழி பேசும் மக்கள் என "அனைவரையும் உள்ளடக்கியதாக"–வும் ஆகக் காணுகிறோம்.

குறிப்பிட்ட இக்காலத்தில் ஆரியர் என்ற சொல் அகில இந்திய தேசியத்தின் ஒற்றைப் பேரடையாளமாக உருவாக முயற்சி செய்தது என்பதையே இது காட்டுகிறது. ஆரியன் என்ற சொல்லின் எதிர்வுகளைப் பாரதி தன்னுடைய எழுத்துக்களில் துல்லியமாகச் சுட்டிக் காட்டாமல் தவிர்த்திருக்கிறார் என்பதும் புலப்படுகிறது. எதிர்வுகளைத் துல்லியப்படுத்தாமல் விடும்போது எதிர்வுகள் அடையாளம் இழந்து போகின்றன. அவை அடையாளம் இழப்பது, பேரடையாளம் தோன்றுவதற்கும் நிலைப்படுவதற்கும் அவசியமான ஒன்றாகும் அல்லது எதிர்வுகளைத் எல்லாம் 'உள்ளடக்கி' குறிப்பிட்ட ஒரு சொல்லை பொதுப் பெயராக்கிக் காட்டுவதும் தனிப் பேரடையாளம் கட்டமைக்கப்படுவதற்கான உத்தியாகும்.

ஆரியர் என்ற கருத்தாக்கத்தின் மையமும் அதன் பரவலாக்கமும் வைதீகத் தலைமையின் கீழ் அகில இந்திய தேசீயத்தைக் கட்டமைக்கும் ஓர் முயற்சியாகத் தான் தெரிகிறது. இந்தக் கட்டமைப்பு முயற்சியில் வைதீகம் தவிர்த்த பிற சிந்தனைகளையும் மரபுகளையும் நாகரீகங்களையும், மொழிகளையும் அடையாளமிழக்கச் செய்யும் நிகழ்வும் உள்ளடங்கும்.

'பாரதியும் வேதமரபும்' என்ற தலைப்பிட்ட பேரா. கைலாசபதியின் கட்டுரையில் இடம் பெறும் கடைசி வரிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் – "வேதத்தை மூலாதாரமாகக் கொள்ளும் வைதீக நெறியில் வருபவரே பாரதி என்னும் அடிப்படை உண்மையை நிறுவுவதற்கு இத்தகைய நோக்கு உபயோகப்படும் என்று எண்ணுகிறேன். அது பாரதியாரின் நிறைவை மட்டுமின்றி, குறையையும் கண்டு கொள்ள வழிவகுக்கும் அல்லவா ?"[3]

பாரதியின் சொற்பயன்பாடு குறித்த இக்கட்டுரையை இப்படியே முடித்து விடுவதும் முழுமையானதாகப்படவில்லை. இன்னும் சில வார்த்தைகள் சொல்லியாக வேண்டும். பாரதியின் மொத்த சிந்தனையில் வைதீகம் ஓர் எல்லை மட்டுமே. பாரதிக்கு இன்னுமோர் எல்லை உண்டு. அது அவரது சக்தி என்ற சொல்லில் மையம் கொண்டுள்ளது. இயக்கம், தன்னிச்சைப் பண்பு, உக்கிரம், இயற்கை, உலகியல் உண்மை, அடித்தளமக்கள் பகுதி ஆகியவற்றிற்கு ஏராளமாக இடமளிக்கும் கருத்தாக்கம் அது. கறாரான வைதீகத்தில் சக்திக்கு இடம் கிடையாது. கறாரான வைதீகத்தின் எதிர்க்கருத்தாக்கம் சக்திக்கருத்தாக்கம். ஒட்டு மொத்த பாரதி வைதீகத்தையும் தழுவி நின்றார்; சக்தியையும் தழுவி நின்றார். இது ஒரு முரண்பட்ட நிலை. இந்தியப்பண்பாட்டின் அடிப்படையானதொரு முரண்பாடு இது. பாரதி இம்முரண்பாட்டை அனுபவித்தார். இம்முரண்பாட்டை உண்மையாக அனுபவித்ததாலேயே பாரதியின் சிந்தனையும் கவிதையும் படைப்புத்தன்மை கொண்டவையாக அமைந்தன. சொல் புதிதாய், பொருள் புதிதாய் அவை விளைச்சல் பெற்றன.

## பயன்பட்ட நூல்கள்

1. பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை.

2. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை. கட்டுரைப்பகுதிகள் எடுத்தாளப்படும் இடங்களில் அடைப்புக்குள் நூலின் பக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. க. கைலாசபதி, பாரதி ஆய்வுகள், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், 1984 ப.131.

4. இக்கட்டுரை தயாரிப்பில் எனக்கு உதவிய எனது மாணவி செல்வி. சு. முத்துவிற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8

# தீயெனும் கருத்தாக்கம்

தூ. சேதுபாண்டியன்

ஒரு கவிஞனின் கவிதையைத் துய்க்க விரும்புவோர் அக்கவிதையைப் படைத்த கவிஞன் சொற்களை எவ்வாறு பயன்படுத்தியுள்ளான் என்றும், அவன் பயன்படுத்தியுள்ள சொற்கள் எவ்வாறெல்லாம் பொருள் தருகின்றன என்றும் அறிந்துகொள்வது ஓர் இன்றியமையாத் தேவையாகும். அந்த அடிப்படையில் பாரதியின் கவிதைகளில் தீ எனும் கருத்தாக்கம் குறித்து விளக்க முயல்கின்றது இக்கட்டுரை. இதற்குப் பாரதியின் கவிதைகளும் ஏனைய படைப்புக்களும் முதன்மைச் சான்றாகின்றன. பாரதியின் படைப்புக்கள் குறித்து வெளிவந்துள்ள திறனாய்வுகள் துணைமைச் சான்றாகின்றன.

கவிஞன் ஒருவன் கவிதையைப் படைக்கும்போது அகராதியில் காணப்படும் பொருளைத் தரும் வகையில் சொற்களைப் பெய்து எழுதுவது ஒருமுறை. படிப்பவர் உள்ளத்தில் சிறப்பான விளைவுகளை ஏற்படுத்தும் பொருட்டு அகராதிப் பொருளுக்கு மாறுபட்ட பொருளைத் தரும் வகையில் சொற்களைப் பெய்து எழுதுவதும் கவிஞர்களுக்குக் கைவந்த கலையாகும்.[1] கவிதையின் பாடுபொருள் மக்களின் வாழ்க்கையேயாகும். அவ் வாழ்க்கை பற்றிய சொற்கள் மக்களின் வழக்கில் உளவாதலின் புதுச் சொல் படைத்துக் கொள்ள வேண்டிய கடப்பாடு கவிஞனுக்கு இல்லை என்பர்.[2] பாரதியும் அன்றுமுதல் இன்றுவரை வாழ்ந்த தமிழ்க் கவிஞர்கள் பயன்படுத்திய சொற்களையே பயன்படுத்தியுள்ளார். எனினும் பாரதி பயன்படுத்தும்போது அச்சொற்கள் அவற்றிற்குரிய அகராதிப் பொருள்கள் மட்டுமின்றி அவற்றிற்கு அப்பாலும் வேறுசில பொருளையும் தருவதைக் காணமுடிகிறது.

பாரதியின் கவிதைகளில் தீ என்ற சொல் பல இடங்களில் இடம் பெறுவதைக் காணமுடிகின்றது. தீ என்ற இயற்கை ஆற்றலைப் பாரதி பாடியுள்ள கவிதைகளில் என்ன என்ன கருத்துக்கள் உணர்த்தப்படுகின்றன என்பதைக் காண்பதற்கு முன் பாரதி இச்சொல்லைப் பெரிதும் பயன்படுத்தக் காரணமாயிருந்தது எது? என்பதை அறிந்து கொள்ளலாம்.

பாரதி தம் கவிதைகளில் பலவிடங்களில் சமயப்பொதுமையை வலியுறுத்தியுள்ளார். தாம் பாடிய புதிய ஆத்திசூடியின் காப்புப் பாடலில் கூட,

ஆத்திசூடி யிளம் பிறை யணிந்து
மோனத் திருக்கு முழு வெண் மேனியான்,
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்துண ராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே ........................ [3]

எனச் சமயப் பொதுமையே பேசுகின்றார். எனினும் அடிப்படையில் தாம் ஒரு இந்து என்பதை ஒரு போதும் அவர் மறந்தவரில்லை. அவருடைய ஆழ்மனத்தில் இந்துத்துவம் என்பது நிலைத்து நிற்கின்றது. அவருடைய தோத்திரப் பாடல்கள் பலவும் இதற்குரிய சான்றாகின்றன. பாரதியார் வேதங்களில் காணப்படும் கருத்துக்களை மிகுந்த ஈடுபாட்டுடன் பயின்றவர். அவர் வேதங்களைப் பயின்றதுடன் அதன்கண் உள்ள கருத்துக்களைப் போற்றியவர். தாம் போற்றியது மட்டுமின்றித் தமிழர்களைப் பார்த்து, "தமிழா, தெய்வத்தை நம்பு, பயப்படாதே, உனக்கு நல்லகாலம் வருகின்றது..... வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு."[4] என்றெல்லாம் கூறியவர் பாரதியார். வேதங்களின் மீது இவர் கொண்டுள்ள ஈடுபாடு தமிழருக்கு அவர் கூறும் அறிவுரையால் தெற்றெனத் தெளிவாகின்றது. வேதங்களில் அக்னி வழிபடுதற்குரிய தெய்வமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. பாரதியார் தீ மீது கொண்ட ஈடுபாட்டிற்கு அவருடைய வேதநூற் பயிற்சி ஒரு காரணமாகின்றது. இதனை,

"வேதம் பாடிய சோதியைக் கண்டு
வேள்விப் பாடல்கள் பாடுதற் குற்றேன்"[5]

என்ற கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

பாரதி ஓர் இயற்கை உபாசகன். அதனால் பாரதியின் கவிதைகளில் பல இடங்களில் ஐம்பூதங்களைப் பற்றியும், ஐம்பூதங்களால் ஆனதுதான் இவ்வுலகம் என்பது பற்றியும் பேசுகிறார். ஐம்பூதங்களுள் ஒன்றான தீயைப் பாடுவதும், தீயை விரும்புவதும் கூட இயற்கைமேல் கொண்ட காதலால் என்று கருதவும் இடமுள்ளது. இவர் தீயை எந்த அளவுக்கு நேசிக்கிறார் என்பதற்கு இவர் மிகவும் விரும்பும் பராசக்தியைப் பாடும் பாடலில்

"சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ யென்றோது
சக்தி சக்தி சக்தீ யென்பார் சாகா ரென்றே நின்றோது."6

சக்தீ சக்தீ என நெடிலிட்டு எழுதியிருப்பதும் கூட ஒரு சான்றாகின்றது.

தீ என்னும் இயற்கைக்கு ஆக்கும் திறனும் உண்டு; அதற்கு அழிக்கும் திறனும் உண்டு. இவ்விரண்டு திறன்களும் இறைவனுக்கே உரியவை என்பது ஆன்மீகவாதிகளின் கருத்து. இந்த அடிப்படையிலேயே தெய்வங்களைப் பாடும் இடங்களில் எல்லாம் பாரதி அத்தெய்வங்களை எல்லாம் தீயாகவே உருவகித்துப் பாடியிருப்பதைக் காணமுடிகின்றது.

முருகனைப் பாடும் இடத்தில் தீயின் ஒரு வடிவான கனல் என்ற சொல்லைப் பயன்படுத்தி,

சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக[7]
... ......... ......... ........... .........
குருவே பரமன் மகனே
குகையில் வளருங் கனலே[8]
– எங்கள்
வைரவி பெற்ற பெருங் கனலே வடிவேலவா[9]

என்றெல்லாம் பாடுகின்றார். இது போன்றே பர்ாசக்தியைப் பாடும் இடத்தில்,

'எண்ணத்திருக்கும் *எரியே* சக்தி'[10]

'உள்ளத் தொளிரும் *விளக்கே* சக்தி'[11]

'சங்கரன் அன்புத் *தழலே* சக்தி'[12]

'சொல்லில் விளங்கும் *சுடரே* சக்தி'[13]

எனத் தீயினைக் குறிக்கும் எரி, விளக்கு, தழல், சுடர் ஆகிய சொற்களால் சக்தியைக் குறித்துப் பாடுகின்றார். பராசக்தியைத் தீயாகவே இவர் காண்பதனை,

'மனத்திலே சக்தியாக வளர்வது நெருப்புத் தெய்வம்'[14] என்ற பாடலடியால் உணரலாம். பாரதி பல தோத்திரப்பாடல்களில் தெய்வங்களையே தீயாகக் காண்கிறார்.

தீ என்னும் இயற்கை ஆற்றல் வழிபடும் தெய்வம் என்ற எண்ணம் ஒருபுறமிருக்க,

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே![15]

என்று முழங்கிய பாரதி தீயைத் தன்னை அச்சுறுத்தும் பொருளாகக் கருதிப் பாடும் இடங்களையும் காணமுடிகின்றது.

அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில்லாதபடி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வுதரும் பதம்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்[16]

என்றும்,

நிழலினும் வெயிலினும் நேர்ந்த ஒற்றுணையாய்
தழலினும் புனலினும் அபாயம் தவிர்த்து[17]

என்றும் தீக்குத் தான் அஞ்சுவதாகப் பாடும் பாடல்களைக் காணமுடிகின்றது.

இதைப் போன்றே தீ பிறரை அச்சுறுத்தும் பொருள் என்னும் வகையில் சில பாடல்கள் அமைந்துள்ளன. அப்பாடல்களில் எல்லாம் தீ உவமையாக இடம் பெற்றுள்ளது. திலகரைப்பாடும் பாடலில்,

'ஐயன் நல்லிசைப் பால கங்காதரன்
சேரலர்க்கும் நினைக்கவும் தீயென
நின்ற எங்கள் திலக முனிவர்கோன்'[18]

என்று பாடுகின்றார். இதைப்போன்றே பாஞ்சாலி சபதத்தில் துரியேதனன் பாத்திரத்தை அறிமுகம் செய்யும் போதும் அவனைப் பகைவர்க்குத் தீயனையான் என்று பாடுவதைப் பின்வரும் பாடலடியால் உணரலாம்.

'–பகைக்
குரியோர் தமக்குவெந் தீயனையான்'[19]

தீயினை உவமையாக்கிப் பாடியதைப்போலவே, தீயைப் பல குணங்களுக்குரிய உருவகமாகப் பாடிச் சென்றுள்ளார் பாரதி. தீயைப் பாடுவதில் பாரதிக்குள்ள ஈடுபாடு இவ்வுருவகங்களின் கண்ணும் வெளிப்படுகின்றது. 'மெய்ஞ்ஞானம் என்னும் தீ' என மெய் ஞானத்தைத் தீயாக உருவகிக்கிறார்.[20] எவ்வாறெல்லாம் உருவகமாகப் படைத்துள்ளார் என்பதைப் பின்வரும் பாடலடிகளால் உணரலாம்.

'ஏழுலகும் இன்பத்தீ ஏற்றுந் திறனுடையாய்'[21]
'மாயையே – நீ
'சித்தத் தெளிவெனும் தீயின் முன் நிற்பாயோ ?'[22]
'நெஞ்சத் துள்ளொர் பொறாமை எனுந்தீ' [23]
'சினமான தீ அறிவைப் புகைத்த லாலே' [24]
'பகைத்தீயை வளர்ப்பவர் மூடர்' [25]

போன்ற தொடர்களில் காணப்படும் நற்பொருளாகிய சித்தத் தெளிவு

மெய்ஞ்ஞானம், இன்பம் ஆகியவற்றையும் தீ என்று உருவகித்துள்ளார். அது போன்றே பொறாமை, சினம், பகை ஆகிய தீய உணர்வுகளையும் தீயாக உருவகித்துள்ளார். இவையாவும் நுண்பொருள்களாகிய உணர்வுகள். இந்நுண்பொருள்களையெல்லாம் தீயாக உருவகிப்பதன் மூலம் இவற்றிற்கு ஒரு வடிவம் கொடுக்க முயல்கின்றார் பாரதி. பகை, பொறாமை, சினம் ஆகியவை தன்னைச் சார்ந்தரை அழிக்கும் பண்புடையவை. தீயும் அவ்வாறே சார்ந்தாரைக் கொல்லும் தகைமைத்து. மெய்ஞ்ஞானம் என்னும் உட்பொருள்பட இவ் உருவகங்கள் அமைந்துள்ளன. இதுபோன்ற உருவகங்கள் பல பாரதியின் கவிதைகளில் இடம் பெற்றுள்ளன.

தீயை உவமையாக, உருவகமாகப் பாடியுள்ள கவிதைகளில் தீ என்னும் சொல் உணர்த்தும் பொருள் வெளிப்டையாகப் பொருள் உணர்த்துகின்றன. ஆனால் சில கவிதைகளில் தீ என்ற சொல் என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது சூழலின் அடிப்படையில் மட்டுமே விளங்கிக் கொள்ளத் தக்கதாக உள்ளது. சான்றாகச் சில பாடல் வரிகளையும் அவை உணர்த்தும் பொருளையும் சூழல் அடிப்படையில் காணலாம்.

'வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய்' [26]
'மனந் தீயுற நின்றேன்' [27]
'மனதில் எழுகின்ற தீயுடனே' [28]

இத் தொடர்களில் உள்ள தீ என்னும் சொற்கள் முறையே அச்சம், வியப்பு, கோபம் வருத்தம் என்ற பொருட்களில் கையாளப்பட்டுள்ளன. இப்பொருள்கோள் சூழல் (Context) அடிப்படையில் மட்டுமே சாத்தியமாகின்றது. இத்தகைய இடங்களில் தீ என்னும் சொல் அகாரதிப் பொருளைக் குறிக்காமல் சூழல் பொருளைக் (Contextual meaning) குறிக்கின்றது எனலாம்.

உலகில் காணப்படும் தீமைகளையெல்லாம் அழித்து நன்மைகளை விளைவிக்கும் ஆற்றலாகத் தீயைக் கருதுகிறார் பாரதி. இந்தக் கருத்துடன் உலகில் தான் விரும்பாதவற்றை எல்லாம் தீயிட்டுக் கொளுத்துவோம் என்கிறார்.

'மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்' [29]
'தேடு கல்வி யில்லாததொ ரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்' [30]
'.............................. அடிமைச் சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்' [31]

போன்ற பாடலடிகளை இதற்குச் சான்றாகக் கூறலாம். இக்கருத்தையே சற்றுமாற்றி அன்னை பராசக்தியின் அருள் பார்வை என்னும் தீ

அனைத்துத் துன்பங்களையும் எரித்திடும் என்று பாடுவதை,

'பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம் – இவள்
பார்வைக்கு நேர் பெருந்தீ' [32]

என்ற பாடலடியால் உணரலாம்.

நல்ல கவிதையைப் பற்றிப் பேசுமிடங்ளில் எல்லாம் பாரதி தீயையும் இணைத்துப் பேசுவதைக் காணமுடிகிறது.

'கள்ளையும் தீயையும் சேர்த்து – நல்ல
காற்றையும் வானவெளியையும் சேர்த்து
தெள்ளுதமிழ்ப் புலவர்கள் – பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்'[33]
'தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்வேனே'[34]

இது போன்ற இடங்களில் தீ என்பது சுவைக்கான குறியீடாக அமைந்துள்ளதாகத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

தீயினைத் தீண்டும்போது இறைவனைத் தீண்டும் இன்ப உணர்வு பெறுவதாகப் பாரதி பாடும் பாடலைக் காணலாம்.

'தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா – நின்னைத்
தீண்டு மின்பத் தோன்றுதடா நந்தலாலா' [35]

இங்குக் கவிஞரின் அனுபவம் நிறைந்த அறிவு நிலையில் விளக்குச் சுடரில் இறைவனைத் தீண்டும் இன்பத்தை அடைகிறார். கவிஞரின் ஆன்ம அனுபவமே புலன் அனுபவமாக மடை மாற்றம் பெறுகின்றது. தீச்சுடரில் இறைவனைத் தீண்டும் இன்பம் ஆன்மாவின் அனுபவம் ஆகும். அந்த இன்பமே தீச்சுடரில் நேராகப் புலனாகிக் கையினால் தீண்டுகின்ற அனுபவமாக விளங்குகின்றது. அதாவது கவிஞரின் உள்ளுலகத்தில் ஆன்மாவின் அனுபவம் வெளியுலகத்தில் புலன் அனுபவமாக நேரடியாக உணர்த்தப்படுகின்றது. மற்றவர்களுக்கு வெளியுலகில் புலன் அனுபவமாகிய தீ சுடும் என்ற உணர்ச்சி மட்டுமே புரியும் போது பாரதிக்கு ஆன்ம அனுபவமே புலனாகின்றது என்பர்.[36]

தீயின் பல்வேறு வடிவங்கள் பாரதியின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. ஒளி என்ற சொல்லைப் பல பாடல்களில் பயன்படுத்துகின்றார். ஒளி X இருள் என்ற முரண்கள் வாழ்வின் பல காலகட்டங்களில் நன்மை X தீமை என்ற முரண்களாகப் பயன்படுத்தப்படுபவை. அறிவு ஒளி X அறியாமை இருள்; ஞானஒளி X அஞ்ஞான இருள்; உண்மை ஒளி X பொய்மையிருள் எனப் பல பாடல்களில் முரண்களாகவே இவர் கையாள்கின்றார்.

'உள்ளத்தில் உண்மை ஒளியுண் டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்'[37] என்னும் பாடலடியில் ஒளி உண்மை என்னும் பொருளிலும்;

தேவி உன் ஒளி பெறா நாடு[40]

என்ற பாடலடியில் 'ஒளி' என்பது சுதந்திரம் என்ற பொருளிலும் பயன்பட்டிருப்பதைக் காணலாம்.

'கனல்' என்ற தீயின் ஒரு வடிவத்தைப் பாரதி பல பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். 'கனல்' என்ற சொல் வெளியே தெரியாமல் உள்ளேயே கனன்று கொண்டிருப்பதைக் குறிக்கும், கனல் என்ற சொல்லால் தெய்வத்தைப் பாடியுள்ளார் பாரதியார் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. அதுவும் கார்த்திகேயனாம் முருகனைச்–சிவனின் மூன்றாவது கண்ணிலிருந்து கனன்ற நெருப்பிலிருந்து தோன்றிய – கடவுளைக் குறிக்கப் பயன்பட்டிருப்பது முன்னரே குறிக்கப்பட்டது. 'கனல்' என்ற சொல் சுதந்திர உணர்வு என்ற புதிய பொருளில் இடம் பெற்றுள்ளது. இதனை வெள்ளைக்கார விஞ்ச்துரை கூற்றாக அமையும் கவிதையில் வரும்,

நாட்டில் எங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய் கனல் மூட்டினாய்'[41]

என்ற அடிகளால் உணரலாம்.

பாரதியின் கவிதை முழுவதிலும் தீ – நெருப்பு – கனல் ஆகிய சொற்கள் சுதந்திர உணர்வைக் குறிக்கும் வகையில்' பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனைப் பாரதியார் 1907 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் பதினெட்டாம் நாள் சென்னை இந்தியா பத்திரிக்கை அலுவலகத்திலிருந்து மு. இராகவையங்காருக்கு எழுதிய கடித வரிகளும் உறுதி செய்கின்றன. கடித வரிகள் பின் வருமாறு:

"தாங்கள் பண்டித்தியத்தை நான் புகழ வரவில்லை. அதனை உலகறியும். தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் 'ஸ்வதேச பக்தி' என்ற புது நெருப்பிற்குத்தான் நான் வணக்கம் செய்கிறேன்."[42]

இக்கடித வரிகளில் உரைநடையிலும் சுதந்திர உணர்வைப் பாரதி 'புதுநெருப்பு' என்று குறிப்பிடுவது இங்குக் கருத்திற்கொள்ளத்தக்கது. இந்தப் பின்னணியோடு 'அக்கினிக்குஞ்சு'ப் பாடலை அணுகுதல் வேண்டும்

'அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்' என்ற தொடரில் அக்கினிக் குஞ்சு பற்றிப் பல திறனாய்வாளர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியிருந்தாலும் பேராசிரியர் சி. கனகசபாபதியின் 'அந்நிய ஆதிக்கக் காட்டினை அழிக்கும் விடுதலை உணர்வு' என்ற கருத்தே ஏற்புடைத்தாய் உள்ளது.[43] இக்கவிதையில் அக்கினி என்ற சொல் 'சுதந்திர உணர்வு'

என்ற பொருளிலேயே இடம்பெற்றுள்ளது. இக்கவிதையைப் படிக்கும் போதெல்லாம் பாரதியின் அடிமனத்தில் தீ–குகை தீ–பொந்து என்ற ஒரு படிமம் ஆழப் பதிந்துள்ளமையைக் காணமுடிகின்றது. இதனைக்

'குகையில் வளரும் கனலே'[44]
'குகைக்குள் அங்கே இருக்குதடா தீப்போல'[45]
'அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்'[46]

என்ற தொடர்களில் காணலாம். இத்தொடர்களில் எல்லாம் தீயினையும் – தீயின் சிறிய வடிவினையும் – அதனைக் காக்கும் ஓர் காப்பிடத்தையும் இணைத்தே பாடுவதைக்காண்லாம். தீ சிறிதாக இருக்கும்போது தான் காற்று அதனை அணைக்கமுடியும். தீ பெரியதாகிவிடின் காற்றினால் மேலும் பெரிதாகுமேயன்றி அணையாது. ஆகையால் சிறியதாக உள்ள தீக்குக் காற்றிடமிருந்து பாதுகாப்புத் தேவைப்படுகிறது. அதனால்தான் காப்பிடமும் இணைத்தே பாடப்படுகின்றது. இப்படிமம் எங்ஙனம் அவர் மனத்தில் ஆழ உருக்கொண்டிருக்கும் என்று சிந்திக்கும்போது, அவர் இளமையிலே வாழ்ந்த எட்டயபுரம் சிற்றூர்ப்பகுதிகளில் சிறிய விளக்குகளை வீடுகளின் சுவற்றிலேயே விளக்கு வைப்பதற்காக – காற்றிலிருந்து விளக்கைக் காக்கும் பொருட்டு – அமைக்கப்பட்டிருக்கும் 'விளக்குப்புரை' என்ற மாடக்குழியையும், அதில் வைக்கப்பட்டிருக்கும் சிறு விளக்கையும் ஒரு சேரப்பார்த்ததின் விளைவாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. மேலும் சிறு பொறியாக உள்ள விளக்கு என்னும் தீ காற்றால் அணையாமல் காப்பதற்கு இக்குகை போன்ற 'விளக்குப்புரை' எவ்வாறு பயன்படுகின்றது என்ற எண்ணம் பாரதியாரைப் பாதித்திருக்கக்கூடும்.

நெருப்பு என்ற சொல்லும் பாரதியின் கவிதைகளில் பலவாறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சுதந்திர உணர்வைப் பாரதி 'புதிய நெருப்பு' என்று குறிப்பது முன்னரே உணர்த்தப்பட்டது.

நிவேதிதாவைப் பாடும்போது நிவேதிதா இவருடைய மனத்தில் உள்ள,

'புன்மைத் தாதச் சுருளுக்கு
நெருப்பாகி நின்றவர்' என்று பாடுகின்றார். [47]

குயில் பாட்டில்,

'நீசக் குயிலும் நெருப்புச் சுவைக்குரலில்
ஆசைததும்பி அமுதூறப் பாடியதே'[48] என்று பாடுகிறார்.

கண்ணன் பாட்டில்,

கொன்றிடுமென இனிதாய் – இன்பக்
கொடுநெருப்பாய் அனற் சுவையமுதாய்' என்று பாடுகிறார்.

இப்பாடல்களில் நெருப்புச் சுவைக்குரல், அனற் சுவை அமுதாய் என்ற தொடாரக்கம் முரண்களை இணைப்பதன் மூலம் ஒரு புதிய பரிமாணத்தை உருவாக்குவதைக் காணமுடிகிறது.

கொடுநெருப்பு அனற் சுவை
நெருப்புச்சுவைக்குரல் அமுதூறப்பாடுதல்

இவை கவிதையின் முருகியல் பண்பினைக் கூட்டியுள்ளன எனில் மிகையாகாது.

'தழல்' என்னும் சொல் 'கொடுமையான' என்ற பொருளில் பின்வரும் பாடலடிகளில் இடம் பெறுகின்றது.

'தண்மைக் குணமுடையான் சில நேரம்
தழலின் குணமுடையான்'[50]

'தழல்' என்னும் சொல் சினத்துக்கு உவமையாக இடம் பெறுவதையும் காணமுடிகின்றது. 'வெந்தழல் போலச்சினம்' என்ற பாஞ்சாலிசபதம் பாடலடியில் இதனைக் காணலாம். தழல் என்னும் நெருப்பு வடிவம் தீமையை அழிக்கும் ஒன்றாகக் கருதப்படுவதைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

'தம்பி
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் – அண்ணன்
கையை எரித்திடுவோம்'.[51]

இவ்வரிகளைப் பாரதநாட்டை அடிமைப்படுத்திட்டவர்களைத் தண்டிக்க விரும்பும் கருத்துணர்த்தும் வரிகள் எனக்கூறுவர் திறனாய்வாளர்கள்.

சுடர் என்னும் சொல் பல இடங்களில் இடம் பெற்றாலும் சில இடங்களிலேயே நெருப்பைக் குறிக்கின்றது. இறைவனை, அறிவினை, வால் நட்சத்திரத்தை எனப் பல பொருள்களைச் சுடர் என்று பாடுகின்றார் பாரதி.

தீயையே பாடு பொருளாகக் கொண்டமைந்தவை இரண்டு பாடல்கள். ஒன்று 'தீ வளர்த்திடுவோம்' என்னும் பாடல். இதற்குப் பாரதியார் கொடுத்த தலைப்பு 'அக்னி பகவான்' என்பதேயாகும். இப்பாடலுக்கு 'யாகப்பாட்டு' என்ற துணைத்தலைப்பு ஒன்றும் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ளது.

'தீ வளர்த்திடுவோம் – பெருந்
தீ வளர்த்திடுவோம்'[52] என்று தொடங்கும் பாடல்

பின்னர் ஆசையை, அன்பை, ஆவலைத் தீ என்று பாடுவதுபோலச் செல்கின்றது. பிற்பகுதியில் 'நேர்மைக் கனலை', 'ஒளி ஏறும் தவக்கனலை' பணிந்திடுவோம் வாரீர் என முடிகின்றது.

'வேள்வித் தீ' என்பது இரண்டாவது பாடல். இது ரிஷிகள் – அசுரர்கள் இருவரும் பேசுவது போல அமைந்துள்ளது. இப்பாடலில் அக்னி என்னும் தீ ஆன்மிக உணர்வற்ற அசுரர்களை அழிப்பதாகப் பாடப்பட்டுள்ளது. இங்குத் தீ ஆன்மீகத்துக்குக் குறியீடாகின்றது.

பாரதியின் வசனகவிதையில் ஞாயிறு என்ற தலைப்பில் *பாடப்பட்டுள்ள பாடல் ஒன்றில்*

'.............................................
வெம்மையே நீ தீ.
தீ தான் வீரத் தெய்வம்
தீ தான் ஞாயிறு
தீயின் இயல்பே ஒளி
தீ எரிக
.............................................
அறத்தீ, அறிவுத்தீ, உயிர்த் தீ, விரதத்தீ,
வேள்விதீ பகைத்தீ, கொடுமைத்தீ – இவை
அனைத்ததையும் தொழுகின்றோம்.
.............................................................................
தீயே நீ எமது உயிர்த்தோழன்
.............................................................................,
தீயே நின்னைப்போல எமதுள்ளம் சுடர் விடுக
தீயே நின்னைப்போல எமதறிவு கனலுக.
.................................. தீயே நின்னைத்தாம் போற்றுகின்றோம்.[53]

எனப் பாடுவதைக் காணலாம். இங்குத் தீயையும் ஞாயிறையும் ஒன்றாகவே காண்பதைக் காணமுடிகின்றது. பாரதி தீயை அறமாக, அறிவாக, உயிராக, சினமாக, பகையாக, கொடுமையாக இப்படி எல்லாமாகப் பார்க்கும் பார்வை ஏனைய கவிஞர்களிடமிருந்து பாரதியை வேறுபடுத்துகின்றது.

தீயைப் பல நுண்பொருள்களான உணர்வுகளுக்குப் பருப்பொருள் குறியீடாகத் தந்துள்ளமை பாரதியின் தனித்தன்மை எனலாம். அன்பு, அறிவு, அறம், உயிர், காதல், சினம், பகை, பொறாமை, கற்பு, சுதந்திர உணர்வு என்று பல நுண்பொருள்கள் தீயாகச் சுட்டப்படுகின்றன. சுதந்திர உணர்வு என்ற தீ 'புதுநெருப்பு' எனப் பாரதியால் உரைநடையிலும் போற்றப்படுவதைக் காணலாம்.

பாரதியின் தீ பற்றிய கருத்தாக்கம் இந்திய வேதங்கள் உரைத்த அக்னி வழிபாடு என்ற இடத்திலிருந்து தொடங்கி அவர் காலத்து வாழ்ந்த மக்களின் தேவையாயிருந்த 'சுதந்திர உணர்வு' என்ற புது நெருப்பு வரை நீள்கின்றது என்றால் அது மிகையாகாது.

## குறிப்புக்கள்

1. The poet uses words to mean what the dictionary says they mean. The poet also uses the words - even the same words - in special way for special effects, indeed he may so modify a word, so surround it with other words in a given context as to make it take on a meaning quite distinct from that in the dictionary. – *Kreuzer, James R., Elements of Poetry, The Macmillan & Co., 866, Third Avenue, New York, Eleventh Printing, 1971, page 8.*
2. மாணிக்கம், வ.சுப., தொல்காப்பியப் புதுமை, ப. 86
3. பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, 1987, ப.326.
4. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பதிப்பகம், மூன்றாம்பதிப்பு, 1988, பக்.154–155.
5. பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, 1987. ப.341.
6. மு. நூல். ப. 622.
7. மு. நூல். ப. 514.
8. மு. நூல். ப. 515.
9. மு. நூல். ப. 650.
10. மு. நூல். ப. 766.
11. மு. நூல். ப. 767.
12. மு. நூல். ப. 766.
13. மு. நூல். ப. 766.
14. மு. நூல். ப. 410.
15. மு. நூல். ப. 337.
16. மு. நூல். ப. 667.
17. மு. நூல். ப. 500.

18. மு. நூல். ப. 109.

19. மு. நூல். ப. 199.

20. மு. நூல். ப. 353.

21. மு. நூல். ப. 371.

22. மு. நூல். ப. 70.

23. மு. நூல். ப. 206.

24. மு. நூல். ப. 301.

25. மு. நூல். ப. 486.

26. மு. நூல். ப. 281.

27. மு. நூல். ப. 371.

28. மு. நூல். ப. 399.

29. மு. நூல். ப. 683.

30. மு. நூல். ப. 360.

31. மு. நூல். ப. 568.

32. மு. நூல். ப. 667.

33. மு. நூல். ப. 529.

34. மு. நூல். ப. 494.

35. மு. நூல். ப. 769.

36. எஸ். விஜயபாரதி, மகாகவி பாரதி ஒரு திறனாய்வு, ப. 144.

37. பாரதிபாடல்கள் – ஆய்வுப்பதிப்பு.

38. மு. நூல். ப. 760.

39. மு. நூல். ப. 622.

40. மு. நூல். ப. 622.

41. மு. நூல். ப. 87.

42. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பதிப்பகம், மூன்றாம் பதிப்பு, 1988 ப.8. (பொருளடக்கத்தை அடுத்து இக்கடிதம் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

43. சி. கனகசபாபதி, பாரதி – பாரதிதாசன் கவிதைகள் மதிப்பீடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, பக். 212–19.

44. பாரதிபாடல்கள் – ஆய்வுப்பதிப்பு ப. 515.

45. மு. நூல். ப. 622.

46. மு. நூல். ப. 774.

47. மு. நூல். ப. 806.

48. மு. நூல். ப. 378.

49. மு. நூல். ப. 319.

50. மு. நூல். ப. 420.

51. மு. நூல். ப. 300.

52. மு. நூல். ப. 763.

53. மு. நூல். பக். 878–79.

"கற்பு நிலையென்று சொல்லவந்தார் இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்

"நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டும்"

"கூளத்தை மலத்தினையும் வணங்க வேண்டும்..."

"பெண்டிரென்றும் குழந்தையென்றும் நிற்பனவும் தெய்வமன்றோ"

''தனியொருவனுக்குக் குணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்"

"தேடு கல்வியில்லாததோர் ஊரைத் தீயினுக்கிரையாக மடுத்தல்"

கவிதைக்குள் தரித்திராமல் தெருவில் இறங்கிக் கலகத்தில் கலந்துகொள்ளத் துடிப்பவை பாரதியின் சொற்கள். அரசியல் மட்டுமின்றி ஆன்மீகம், வேதம், சமூக மரபுகள், ஒடுக்கு முறைகள், கலை இலக்கியக் கோட்பாடுகள் போன்ற எல்லாமே இந்தச் சொல்லடிக்கு இலக்காகின்றன. எதிர்ப்புணர்வே பாரதியின் கவிதைகளை வழிநடத்துகிறது.

கவிதையில் சொல்லுக்கு, வழக்கமான பொருள் இல்லை என்பதோடு, சிலசமயம் கவிஞனை முன்னுக்குப் பின் முரணானவன் என்று காட்டும் அதிர்ச்சி இயல்பும் உண்டு. பாரதியிடம் இத்தகைய முரண்கள் உண்டு. முரண்படுவது என்பது தவறான நடவடிக்கை எனும் பொதுநியதியைக் கவிதையின் மீது பாய்ச்சி, முரண்பாட்டுக்காகக் கண்டனம் செய்வதோ, அல்லது ஏதேதோ விளக்கங்கள் சொல்லி முரண்பாடு இல்லை என்று கவிஞனைப் பாதுகாக்க முயல்வதோ வாசக, விமர்சன வழக்கமாக இருந்துவருகிறது. இது தேவையற்றது.

கருத்துக்களுக்குள் எச்சரிக்கையோடு புழங்கும் தத்துவ ஞானிகள் முடிச்சுகளை அகற்றி, மிகுந்த முயற்சிக்குப்பின், இழையின் இருமுனைகளையும் இணைத்துத் தர்க்கம், பகுத்தறிவு, முதுமை என்று தமக்கும் பிறர்க்கும் திருப்தி தேடுவார்கள்.

கவிஞனோ முன்பின் அற்றவன்; அந்தந்த கணத்தில் வாழ்ந்து மடிபவன். ஒரு பிறவியில் அவனுக்கு ஆயிரக்கணக்கான பிறவிகள் உண்டு. ஒரு பிறவிக்கும் மற்றொரு பிறவிக்கும் இடையே சில சிந்தனைகளில் முரண் தோன்றக் கூடும். இரண்டுமே அந்தந்த கணத்தின் உண்மைகள் பிரக்ஞையின் ஆழத்திற்கேற்ப உண்மை, வேறுவேறு தோற்றம் தருகிறது. வெவ்வேறு தளங்களில் தெரியும் முரண்பாடு தோற்றங்களைச் செயற்கையாக ஒன்றுபடுத்த முயலாமல், அப்படியே கவிதையில் பதிவு செய்கிற அக நேர்மையாளனை நாம் குற்றவாளியாக்கி விடக்கூடாது. கவிஞனின் இலக்கணம் தனக்குத் தான் முரண்பாடதிருப்பதன்று, தனக்குத்தான் உண்மையாக இருப்பது

"கடமை புரிவார் இன்புருவார் என்னும் பண்பைக் கதைபேணாம்
கடமை அறியோம் தொழிலறியோம் கட்டென்பதனை வெட்டென்போம்
மடமை சிறுமை துன்பம் பொய் வருத்தம் நோவு மற்றிவைபோல்
கடமை நினைவும் தொலைத்திங்கு களியுற்றென்றும் வாழ்குவமே"

பெரும்பாலும் செவியதிரக் குரல் கொடுக்கும் பாரதி இங்கு ஏதோ சைகை செய்வது போல் தோன்றுகிறது. "நமக்குத் தொழில் கவிதை. நாட்டிற் குழைத்தல். இமைப் பொழுதும் சோராதிருத்தல்" என்று பிரகடனம் செய்தவர் "கடமை அறியோம் தொழிலறியோம்" என்று ஒதுங்குகிறார். வசனத்தில்

"மனிதன் வேலை செய்யப் பிறந்தான். சும்மா இருப்பது சுகம்
என்றிருப்பது தவறு... ஒவ்வொரு மனிதனும் உழைப்பதற்காகவே
பிறந்திருக்கிறான். காரியம் செய்யாதவனைக் காண்பதும் தீது"

என்று அழுத்தமாகப் பேசியிருக்கிறார்.

"வாழ்வு முற்றிலும் கனவு"
"கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கை ஓர் கனவிலும் கனவாகும்"

என்று விரக்தி கொள்ளும் பாரதி, 'உலகமே பொய் என்று சந்நியாசிகள் சொல்லிக் கொண்டிருக்கட்டும். குடும்பத்தில் இருப்போர் உச்சரிக்கலாமா? அவச்சொல்லன்றோ?... நிற்பது நடப்பது பறப்பது—கனவா தோற்றமா மாயையா? வானம் வெயில் மரச்செறிவு—வெறும் காட்சிப் பிழையா?.. நானுமோர் கனவோ? இந்த ஞாலமும் பொய்தானோ? வாழ்வு கனவு எனக் கண்டதும், வாழ்வு கனவன்று எனக் கண்டதும் வேறுவேறு மன எழுச்சிகள்.

"யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய் வாழ்ந்திட விரும்பினேன்." என்னும் கவிஞர், "கொடுமையை எதிர்த்து நில். "சீறுவோர்ச்சீறு" "உலுத்தரை இகழ்" என்றும் சொல்கிறார். "சினம் கொள்வார் தமைத்தாமே தீயாற்சுட்டுச் செத்திடுவார் ஒப்பாவார்" எனத் தணிப்பவரும் "ரௌத்திரம் பழகு" என்று முடுக்குபவரும் ஒருவரே.

பார்வைக்கு முரண்போலத் தோன்றுகின்ற, ஆனால் தத்துவ தளத்தில் முரண் என்று ஆகாதவற்றை வசன கவிதைகளில் நிறையக் காணலாம்.

"இளமை இனிது முதுமை நன்று—உயிர்நன்று, சாதல் இனிது...
இன்பம் துன்பம் பாட்டு.. புலவன் மூடன்—இவை ஒருபொருள்"....
"காத்தல் இனிது. காக்கப்படுதலும் இனிது
அழித்தல் நன்று. அழிக்கப்படுவதும் நன்று

உண்பது நன்று. உண்ணப்படுவதும் நன்று"
"உணர்வே நீ வாழ்க... உள்ளதும் இல்லாததும் நீ.

அறிவதும் அறியாததும் நீ.
நன்றும் தீதும் நீ"

கவிதையின் மூலம் எது? எவ்வாறு பிறப்பெடுக்கிறது?- உலக முழுவதிலும் நிறைய கவிஞர்களின் வாக்குமூலங்கள் பதிவாகியுள்ளன; ஆய்வுகள் பெருகியுள்ளன. பாரதியின் வாக்கு மூலமும், கவிதைகளாகிய சாட்சிகளும் மிகத் தெளிவானவை. பாரதியைத் தீர்மானித்தது காலம்; அதற்கு இசைவு கொடுத்தது அநீதிகளுக்கெதிரான அவரது போர்க்குணம்; அவரது கவித்துவம் முற்றிலும் புதிய தடங்களை உருவாக்கிக் கொண்டதன் காரணம், அவர் புலவராக ஒதுங்கி வாழாமல் சாதாரண மக்களோடு நெருங்கிவாழக் கிடைத்த பத்திரிக்கைத் துறைத்தொடர்பு, விடுதலை இயக்கம், இயல்பாகவே கருத்துப் பரப்பில் அவருக்கிருந்த ஆர்வம், பிறமொழி, இலக்கிய அறிவு போன்றவை பாரதியின் பெரும்பாலான கவிதைகள் தெளிவாக உருவாகிவிட்ட கருத்துக்கள் கவித்துவக் கிளர்ச்சியின் வழியே வெளிவந்தவை தாம். சில கவிதைகள் முன் தீர்மான மற்றும் நிகழ்ச்சி தந்த உந்துதலால் கருத்தும் உணர்ச்சியும் ஒட்டிக்கொண்டே பிறந்தவை. மிகச்சில கவிதைகள் கருத்துரு என்று எதுவும் தெளிவாக இல்லாமலே, தீவிரத்தன்மை வாய்ந்த உணர்வுக் கொதிநிலைகளில் கவிஞனின் பிரக்ஞை பூர்வமான முயற்சியை வேண்டாமல் தாமே பிறந்து கொண்டவை.

தனது கவிதை மொழியைக் கண்டறிவது ஒன்றே கவித்துவ வாழ்வாக அமைகிறது கவிஞனுக்கு. எழுதி எழுதித்தான் அவன் தன் சொல்லைச் செதுக்கிக் கொள்கிறான். பின்வரும் சந்ததிக்கு மேலும் தீட்டிக்கொள்ளக் கொடுத்துப் போகிறான். இன்று பாரதியின் சொல் என்னவாக இருக்கிறது? பாரதிதாசனைத் தாண்டி வந்தபின் அது எங்கே போயிற்று?

"பாரதிக்குப் பின்பிறந்தார் பாடைகட்டி வச்சிவிட்டார்
ஆரதட்டிச் சொல்வார் அவரிஷ்டம் நாரதனே"

என்று புதுமைப்பித்தன் மிகைப்படுத்திச் சொல்கிறார். பாரதிக்குப்பின் அந்த அளவு வேகம், வெறி, தீவிரம் கொண்ட கவிதை இயக்கம் எதுவும் தோன்றவில்லைதான். ஆனால் குரல் உயர்த்தாத, படபடக்காத, வெளித்தெரியாத வீர்யம் கொண்டகவிதைகள், விமர்சனமும் அங்கதமுமாய் அமைந்தவை, உள்நுழையும் தேட்டம் கொண்டவை எனப் பலவாறு கவிதைகள் வளர்ச்சி கண்டுள்ளன. எனினும் பாரதிக்குப்பின் அறுபதாண்டுக்கால வளர்ச்சிக்கு இவைகளைக் கொண்டு கணக்குக் காட்ட முடியாது என்பது உண்மை.

பாரதியாரே ‘சொல் புதிது’ என்றும் ‘எளியபதம்’ ‘மந்திரம் போல் வேண்டுமடா சொல்’ எனவும் கூறுகிறார். சொல்லின் பொருளையும், சொல் சுமந்து நிற்கும் கருத்தையும் தெரிந்து கொண்டு, ஏற்ற சொற்களைத் தம் படைப்புக்களில் ஆண்டவர் மகாகவி பாரதியார். மகாகவி பாரதியார் தம்முடைய படைப்புக்களில் பன்முறை கையாளும் சொற்களை இனங்கண்டு, சமதாய, பண்பாட்டு அரசியல் கருத்தாக்கங்களை அச்சொற்கள் எவ்வாறு உணர்த்துகின்றன என்பதை ஆராய்ந்து வெளிக்கொணருவது அடிப்படை நோக்கம்.

-பேரா. மு. சாலிகு

"மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்றும் "சொல் ஒன்று வேண்டும். தேவசக்திகளை நம்முள்ளே நிலைபெறச் செய்யும் சொல் வேண்டும்". "சொல்லை ஸாதாரணமாக நினைத்து விடலாகாது. உண்மைச் சொல் க்ஷேம மந்திரமாகும்" என்றும், "பரிபூரணமான தீரமும் வலிமையும், உண்மையும், திருத்தமும் தெளிவும் பொருந்திய வாக்கே தேவவாக்கென்று சொல்லப்படும். மனித ஜாதிக்கு தேவவாக்கு பிறந்திடுக" என்றும் சொல்லின் அரசியல் குறித்துப் பேசுகின்ற பாரதியின் குரலில் ஃபூக்கோ வெளிப்படுவதை உணர முடிகிறது.

பதிப்பாசிரியர்கள்